# இந்து தர்மமும் வர்ண தர்மமும்

Prof. V. SIV
UNIVERSITY OF J



திருமதி. கலைவாணி இராமநாதன் M.A. (Cey)

யாழ்ப்பாணம்,

ஸ்ரீ லங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A675

# இந்து தர்மமும் வர்ண தர்மமும்

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

109785

திருமதி. கலைவாணி இராமநாதன் M.A. (Cey)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஸ்ரீ லங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Edition, August, Madurai, 1992.

*All Rights Reserved.*

**Price : 20.00**

---

அச்சிட்டோர் : ஸ்ரீரெங்கா பிரிண்டர்ஸ்,

S. S. காலனி, மதுரை-16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவகுமாராய தஸ்மை

ஸ்ரீகுருவே நம:



திரிகரண சுத்தியும்

காரிய சித்தியும் தருவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

எனது தந்தையார்

முருகேசு. வல்லிபுரம் அவர்கட்கு

இச்சிறு நூல் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**Dr. G. Sundaramoorthy** M.A., Ph.D.,
Proffessor of Sanskrit,
Dept of Sankrit,
Madurai Kamarajar University,
Madurai - 21.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் இந்து நாகரிகம் எனப்படும் சிறப்பான துறையை முறையாகக் கற்றதுடன், பல ஆண்டுகள் இந்து நாகரிகத்துறையில் மாணவ மாணவிகளுக்குக் கற்பிக்கும் பொறுப்பேற்றிருப்பவர்.

பொதுவாகவே ஈழத்தமிழர்களுக்கு இந்து, சமய தத்துவ, கலைகள் மீது ஆழமான ஈடுபாடு உண்டு, இந்து சமயத்தைப் பற்றிய பெருமைகளை ஈழத்திலும், உலகின் பல பாகங்களிலும் பறைசாற்றிக் கொண்டு வருபவர்கள். பௌத்த சமயத்தை ஸ்ரீலங்கா அரசு அதிகார பூர்வமான சமயமாக ஏற்றுக் கொண்டிருந்தாலும், இந்து சமயத்திற்குச் சிறப்பான இடத்தை ஸ்ரீலங்கா அரசு தருவதற்குத் தயக்கம் காட்டுவதில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாகவே பல ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் முதன் முறையாக இந்து நாகரிகத்துறை என்னும் துறை உருவாக்கப்பட்டது இத்துறையின் முதல் மாணவ மாணவியர் குழுவில் இந்து நாகரிகம் பயின்று முதுநிலை (M.A.)ப் பட்டம் பெற்ற திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் இந்து நாகரிகத்தில் பல்வேறு கூறுகளை நன்கு ஆராய்ந்து தெளிந்தவர்.

இந்து சமயம் இன்று உலகளவில் பலராலும் போற்றப்பட்டாலும் இந்து சமயத்தின் பல உண்மைகள் பொதுவாகத் தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளன. இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றான வர்ணச்ரம தருமம், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளவற்றில் ஒன்று.

வர்ணாச்ர தருமத்தைப் பற்றிய சில முக்கிய உண்மைகளை இந்நூலின் முதற் கட்டுரை விரிவாக ஆராய்ந்து விலக்குகிறது. மிகக்கடினமாக இத்தலைபை மிக அழகாக விளக்கிக் காட்டுகிறார் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள். இத்தகைய உண்மை விளக்கங்களை இந்துப் பெருமக்கள் ஆழமாகக் கற்று இன்றைய சமுதாய அமைப்பில் தேவையில்லாமாலும், இந்து தர்மத்திற்கே முரணாகவும் உள்ள சீர்கேடுகளைக் களைந்து இந்து தருமம் திரும்பவும் தன் முந்தையப் பொலிவுடன் திகழ்வதற்கு இந்துக்கள் தங்களைத் தாங்களே திருத்திக்-கொள்ள முன்வர வேண்டும்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள இரண்டாம் கட்

டுரை ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் துவக்கி வைத்த சமுதாயச் சீர்திருத்தங்கள் பற்றியது. இராமகிருஷ்ணரின் அடியொற்றி விவேகானந்தர் வற்புறுத்திய சமுதாயச் சீர்திருத்தங்களைப் பற்றி விரிவாக விளக்குகிறது இக்கட்டுரை.

இந்நூலின் இரு கட்டுரைகளுமே இன்றைய சமுதாய சீர்த்திருத்தங்களின் இன்றியமையாத தன்மைகளைப் பற்றிப் பேசுவதால் இந்நூல் இக்காலச் சூழ்நிலையில் மிக முக்கியத்துவம் பெறுகிறது. அன்பர்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டியது கடமை.

டாக்டர். கோ. சுந்தரமூர்த்தி
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

மதுரை
14-6-92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரை

**Mr. Sukshamapuriswaran, M.A.,**
**Dept. of Sanskrit,**
**Madura College Hr. Sec. School,**
**Madurai - 625 001.**

எங்கும் நிறைந்தது பரம்பொருள். அதை நினைக்க வாழ்த்த நமக்கு ஒரு நிலை தேவைப்படுகிறது. அந்த ஆக்கத்தின் ஊக்கமேதர்மம். நாட்டிற்கும் வீட்டிற்கும் நலம் பயக்கும் இந்த தர்மம் சனாதன தர்மமாகி பல்வேறு பொருள்களில் வழங்கியுள்ளன. உலகின் நிலைக்கு காரணமாகவும் நம்மை மனிதனாக வாழவைக்கவும் அறம், பொருள், இன்பம், வீரு என்ற பேற்றினை அளிக்க காரணமாக இருப்பதுவுமான சனாதன தர்மத்தின் அடிப்படை நிலைகளையும் கூறுகளையும் இன்றைய சமுதாய நோக்கில் தக்க சான்றுகளுடன் நூலாசிரியர் ஆராய்ந்து விளக்கியுள்ளது போற்றுதற்குரியது.

காலங்கள் தோறும் தர்மம் மாறுபட்டாலும் அதன் அடிப்படை ஒன்றே என்பதை ஆசிரியர் அழகாக பல இடங்களில் சுட்டுகிறார். அதனை வளர்க்க எழுந்த 'வர்ணதர்மம்' எப்படி காலத்தின் பரிணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தால் மாறுபட்டுள்ளது என்பதையும் குறிப்பிடு கிறார்.

'சாதுர்வர்ண்யம் மாயசத்ருஷ்டம் குணகர்மவிபாகம்' 'நான்கு வர்ணங்களும் குணம் மற்றும் தொழில் அடிப்படையில் என்னால் படைக்கப்பட்டன' என்ற கீதைப் பொருள் முதற்பகுதியில் விளக்கப்படுகிறது.

இரண்டாவது பகுதியில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திருத்தொண்டுகள் எப்படி புரட்சிகரமான சிந்தனைகளுக்கு காரணமாக அமைந்தன என்பதை குறிப்பிடுகிறார். பரந்த சமுதயத்தில் பண்பட்ட உள்ளங்களிடையே பல்வேறு நிலைகளுக்கேற்ப புரட்சிசிந்தனை கலாத்தின் காட்டாயம் என்பதை ஆசிரியர் பல இடங்களில் நிலை நிறுத்துகிறார்.

'மனிதன் சமயவாதியாக ஆள்ம நேயத்தை பின்பற்றுவதை வழிபாடாகக் கொண்டிருப்பதே இன்றைய நிலையில் மிகச்சிறந்ததெனத் தோன்றுகிறது. சேவாநெறியும், ஆன்ம நேயமும் சமூக சேவையும் பசிப்பிணி போக்குதல் என்பவற்றையுமே மனிதன் வழிபாடாகக் கொள்வது நல்ல பயனை விளைவிக்கும்' என்ற ஆசிரியன் தற்காலத்திற்கு உகந்த ஆழ்ந்த சிந்தனை நோக்கு நாம் போற்றி பின்பற்றுதற்குறியது,

சிந்தனைக்குரிய பல புதிய கருத்துக்களோடு இந்நூலை படைத்த திருமதி. கலைவாணி இராமநாதன் அவர்களுட்கு இந்த சமுதாயம் நன்றிக் கடன் பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. அவர்களுடைய இந்த ஞானத் தொண்டு மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கள் திருவருள் புரிவானாக.

அன்பன்
V. சூக்ஷ்மபுரீஸ்வரன்

மதுரை
13. 6. 92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# முன்னுரை

அறநூல்கள் ஒவ்வொன்றும் இந்துக்களின் வாழ்க்கை நெறி பற்றிய சிறப்பான கோட்பாடுகளைத் தொகுத்துத்தருவனவாக அமைந்திருக்கின்றன. ஆதலால் வேதகால இலக்கியக் கருத்துக்கள், மனுதர்ம சாத்திர நூலில் காணப்படும் வர்ணம் பற்றிய கருத்துக்கள், இதிகாசங்களில் இடம் பெற்றுள்ளது வர்ண தர்மம் பற்றிய சிந்தனைகள் சிலவற்றையும் ஆதாரமாகக் கொண்டே இந்த நூலின் முதலாம் அத்தியாயமான "இந்துதர்மமும் வர்ணதர்மமும்' என்ற கட்டுரையானது சில சிந்தனைகளை முன்வைக்கின்றது. காலத்திற்கேற்ற வகையிலே காலத்திற்கேற்ற ஒழுக்கவியல் சிந்தனைகள் நாட்டுக்கு நாடு, வர்ணத்திற்கு வர்ணம், இடத்திற்கிடம், சமூகத்திற்கு சமூகம் மாறிக் கொண்டு வருவது தவிர்க்க முடியாததாயினும் இந்து தர்மம் என்னும் சநாதன நெறியானது மாற்றங்கட்கிடையிலும் என்றும் மாருது நிலைபெற்றிருக்கும் தரும நெறியாகும், காலம் மாறும், கருத்து மாறும், ஆளும் மாறும் ஆடையும் மாறும். ஆனல் உள்ளிருக்கும் 'ஆன்மா' என்ற கருப் பொருள் என்றும் ஒரேமாதிரி இருப்பதுபோல, இந்து தர்மமும் சநாதனமாக நிலைபெற்றிருப்பதிலே சந்தேகமில்லை. மனிதன் விஞ்ஞான அறிவிலே எவ்வளவு மாற்றமும் முன்னேற்றமும் அடைந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அவன் குழந்தையாகப் பிறந்ததுமுதல் அவனி டத்து அமைந்த ஐம்புலன்களில், பொறிகளில், உருவத் தில், அங்க அமைப்புகளிலே அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா! அவற்றிலே மாற்றம் ஏற்படு மானுல் அது அவனது அங்கங்களேயே அழித்து விடு மென்பதுதான் அர்த்தமாகும். அதற்கு வளர்ச்சி என்பது பொருளல்லவாம், அவ்வாறே தர்மமும் தன் னை ஒட்டிப்படரும் நிலேகளே மாற்றும்-தான் மாறு வதில்லே. காலத்திற்குக்காலம் ஏற்படும், பொருளா தார, அரசியல் மாற்றங்கள் வன்முறைகள், சச்சர வுகள், பாகுபாடுகள், காரணமாக தர்மத்தின் வெளித் தோற்றம் மறக்கப்படலாம் மறைக்கப்படலாம், ஆனுல் மாற்றப்படுவதில்லே.

அவ்வாறே இந்து தர்மமும் சமுதாய நலன்கட் காக ஏற்படுத்திக் கொடுத்த வர்ணதர்மத்தின் ஆரம் ப அமைப்பும் அதன் பலாபலன்களும் இங்கு சுருக்க மாக விளக்கப்பட்டுள்ளன. அதேவேளேயில் வர்ணதர் மத்தின் வீழ்ச்சியும் சமூகங்களின் உட்பகையும் இந்து தர்மத்தின் வெளித்தோற்றத்தினே எவ்வாறு பாதித் துள்ளனவென்பதும், வர்ணதர்மம் உருமாறிப்போன தற்கான சூழ்நிலேகளும், காரணிகளும் கட்டுரையில் ஆங்காங்கே காட்டப்பட்டுள்ளன. இவ்வத்தியாயத் திலே இடம்பெற்ற கருத்துக்களிற் பலவும் சுவாமி. விவேகானந்தரின் நூல்கள் சிலவற்றிலிருந்து எடுத் தாளப்பட்டவையாகும். சுவாமிகள் போன்ற இந்து சமய ஞானிகளின் நூல்களே எடுத்துக் கொள்வதன் முக் கிய காரணம், தர்மத்தின் நிலேபேருன நெறிகளே அத் தகைய பெரியோர்கள் பலர் ஏற்கனவே சொல்லிச் சென்றுவிட்டார்களாதலால் அவற்றினே இனிவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற இளைய சந்ததியினருக்கு நினைவூட்டுவதும் மிக வும் அவசியமான பணி எனத்தோன்றியதனுலாகும் எனவே சநாதனமான அக்கோட்பாடுகட்கு இயன்ற மட்டும் விளக்கங்களை அளிக்க முயன்றுள்ளேன்.

எல்லா வர்ணங்களும் தன் இயல்பான பண்புகளை இன்று இழந்துவிட்ட நிலையிலும் பிராமண வர்ணமானது இன்றுவரை தழைத்திருப்பதனைப் பார்க்குமிடத்து இந்து தர்மத்திலே பிராமண வர்ணமான ஆச்சார்ய பீடங்கள் தர்மத்தின் பிரதிநிதிகளாக அமைந்திருக்கும் நித்தியத் தன்மை புலனுகின்றது. எனவே தான் பிராமண வர்ணத்திலே 'பிராமண தர்மம்' என்றும் புனிதமாகப் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர வேண்டும் என்ற வேணவாவும் வர்ணத்தர்மத்தின் குறிக்கோள்கள் பற்றி எம்மைச் சிந்திக்கத் தூண்டின. எமக்கு எந்த வகுப்பினரிடமும் வேற்றுமைகள் கிடையாது. இந்து தர்மம் வற்புறுத்தும் வர்ணதர்மத்தின் ஆணிவேரான பிராமணதர்மம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலேயுள்ள விருப்பும், தர்மத்தின் மீதுள்ள ஆழ்ந்த பற்றும் கூட இக்கட்டுரை அமைவதற்கு ஒரு காரணமாகும் அதுமட்டுமன்றி 'இந்துநாகரிகம்' என்னும் ஒரு பாட நெறியினை பயிலுகின்ற ஈழத்தமிழ் மாணவர்கட்கும் உயர்கல்வி நெறியில் பயிலுகின்ற மாணவர்கட்கும் இந்த நூலானது பெரிதும் பயன்படவேண்டும் என்ற பெருவிருப்பமும் இதனுள் அடங்கியுள்ளது. மாணவர்களின் ஒரு சில இடர்பாடுகளை நீக்குவதற்கு இந்த நூல் உபயோகமாயிருக்குமெனில் பெரிதும் அது பயனுடையதாகும்.

இந்நூலின் இரண்டாம் அத்தியாயமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராகிருஷ்ணரும் சமுதாய சீர்த்திருத்தங்களும்,' என்றபகுதியும் இந்துக்களின் ஒழுக்கவியல் பற்றிய நெறிகளின் ஒரு பகுதியைக் குறிப்பிடுகின்றதெனலாம். இந்து சமுதாயத்திலே ஏற்படவேண்டிய பிரதானமான சமூக மாற்றங்கள், அமைப்புகள், ஜாதி பற்றிய கருத்தோட்டங்களில் காணும் பகவானது சீரிய சிந்தனைகள் பற்றி இக்கட்டுரையிலே தெளிவாக ஆராயமுற்பட்டுள்ளோம். 19ம் நூற்றுண்டிலே நவீன இந்து மதத்தின் சிந்தனைச் சிற்பிகளது புரட்சிகரமான சீர்திருத்தங்கட்கு மத்தியிலே; அமைதியாகவும் ஆழமாகவும் சீர்த்திருத்தக் கருத்துக்களை பக்தி வழியிலே நின்று ஞானபோதனைகளை மக்களிடையே பதித்த பெரும் ஆன்மிகச் சிந்தனையாளர்களில் தலைசிறந்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சராவர். அன்னாரின் உபதேசங்களது ஆழமான வெளிப்பாடுகளின் பிரதிபலிப்பே சுவாமி விவேகானந்தரின் தோற்றமும் வளர்ச்சியும் என்றால் மிகையாகாது.

ஸ்ரீ இராமகிருஷ்ண பகவான் தமது போதனைகளைத் தாமே தமது வாழ்விலே பின்பற்றிவந்ததுடன் அவற்றினை நடைமுறையில் செயல்படுத்தியும் காட்டினர். அவைகள் எவ்வாறு பரமஹம்சரால் அனுட்டானத்திற்குக் கொண்டு வரப்பட்டன என்பதனையே இக்கட்டுரைப் பகுதியில் பெருமளவு வெளிகொணர முயன்றுள்ளோம். இந்துப் பெண்கள் பற்றிய பல முன்னேற்றமான கணிப்புகளை வற்புறுத்தினர்கள். மடமைத்தனமான சம்பிரதாயங்களையும், போலித்தனமான கட்டுப்பாடுகளையும் நீக்கினர்கள். அன்னை சாரதா தேவியாரின் வாழ்க்கையினை வைத்தே பல பண்புகளை நடைமுறைப்படுத்திக் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள். பெண்களின் அறிவிலும், பக்தியிலும் புது மையை ஊட்டிய அதே வேளையில் பெண்கள் எவ்வாறு அமைதியாகவும், அடக்கமாகவும், ஒழுக்கமாகவும் வாழவேண்டும் என்பதனை அன்னையாரின் வாழ்க்கையமைப்பின் மூலமாக பகவான் உணர்த்தியவற்றையும் முடிந்தளவிற்குப் புலப்படுத்தியுள்ளோம். **அடக்கம் என்பது அடிமைத்தனமல்ல** என்பதனை அன்னையாரின் வாழ்வு அழகாக விளக்குவதாகும்.

ஒழுக்கவியல் பற்றிய துறையிலே இந்நூல் புது முயற்சியாகும். எமது முன்னைய நூலிற்கு வழங்கிய ஆதரவினைப் போன்று இதனையும் பலரும் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். திருத்தங்கள் ஏதும் இருப்பின் அறிஞர் பெருமக்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டுகிறோம். எல்லாம் வல்ல முருகப்பெருமானின் கிருபை எம்மை என்றும் வழி நடத்துகின்றது. அவன் கழலிணைகட்கு வணக்கம் செலுத்தி நன்றியுரைக்கு வருகின்றேன்.

எமக்கு என்றும் தத்துவத்துறையிலும் ஒழுக்கவியலிலும் மாறுத நேசத்தை ஏற்படுத்திய எமது பேராசிரியர் டாக்டர். கோ சுந்தரமூர்த்தியவர்கட்கு என்றும் எமது நன்றியறிதலை முதற்கண் பணிவுடன் கூறிக் கொள்கின்றேன், பேராசிரியர் அவர்கள் எப்போதும் போல எம்மை ஊக்கப்படுத்தியதுடன் இந் நூலிற்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அன்னருக்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன். வட மொழியிலே மிகுந்த புலமையும், அறிவுத் திறமையும் மிக்கவரான திரு. சூக்ஸ்சுமபுரீஸ்வரன் ஐயா அவர்களிடம் சென்று இந்த நூல் பற்றி சிறு கருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை வழங்குமாறு கேட்டபோது மனமுவந்து அன்புடன் ஏற்றுக்கொண்டு அவ்வாறே எழுதிக் கொடுத்தார்கள். அப்பெரியாருக்கும் எனது நன்றிகள் என்றும் உரியனவாகும். அவ்வாறே எமது முன்னுள் யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களும் தமது ஒழுக்கத்தாலும், தர்மத்தினாலும் எம்மைப் பெரிதும் கவர்ந்தவர்கள். அப்பெரியாருக்கும் எமது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவிக்கின்றேன். எனது கணவர் டாக்டர். பொ. இராமநாதன் அவர்களும் வழக்கம்போலவே இந்நூலாக்கத்திற்குத் தேவையான சகல உதவிகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தந்தார்கள். அவர்கட்கும் இவ்விடத்திலே நன்றி கூறுவது எனது இன்றியமையாத கடமையாகும்.

இந்த நூலினை நல்ல முறையிலே அச்சிட்டு உதவிய ஸ்ரீ ரெங்கா பிரிண்டர்ஸ் ஊழியர்கட்கும் எமது நன்றிகள். அத்துடன் இந்நூலானது நல்ல முறையிலே அழகாக வெளிவர வேண்டும் என்பதிலே கருத்தாக இருந்து அவ்வப்போது அரிய உதவிகளையாற்றிக் கொடுத்தவர்கள் ஸ்ரீ ரெங்கா பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு எஸ். வி. ஆர். மகேஷ் அவர்களாவார். அவர்கட்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

'கனகதாரா'
தாவடி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்,
ஸ்ரீ லங்கா.

சுலோவாணி இராமநாதன்,
யாழ். பல்கலைக்கழகம்,
5—7—92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்து தர்மமும் வர்ண தர்மமும் | .. 1 |
| 2. | ஸ்ரீ இராமகிருஷ்ணரும் சமுதாய சீர்திருத்தங்களும் | .. 71 |
| | நூற்பட்டியல் | .. 129 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மமும் வர்ண தர்மமும்

பல்லாயிரமாண்டுகளாக நிலவி வரும் இந்து தர்மத்திலே மூன்று முக்கிய அம்சங்கள் உண்டு. முதலாவது மிக ஆழமான தத்துவ சாஸ்திரம் (Philosophy), இரண்டாவது, அந்த தத்துவங்களைப் பாமர மக்கட்குப் புரிய, (Mythology); வைக்கும். இதிகாச, புராணக் கதைகள்; சமயக் கோட்பாட்டின்படி அமைந்த தத்துவங்களையும், புராணக் கதைகளையும் செயற்படுத்தும் சடங்குகள், கலைகலாச்சாரமான அம்சங்கள் (Rituals) என்பன மூன்றுமாகும். ஆனால் சமயம் என்ற நிலையிலே இந்து தர்மத்திலே இம்மூன்று அம்சங்களும் முழுவளர்ச்சி பெற்றதோ இல்லையோ; வர்ண தர்மம் மட்டும் இந்து தர்மத்தின் பெயரைச் சொல்லி மக்களை பாகுபடுத்தி ஏற்றத் தாழ்வுகட்குட்படுத்தி வைத்திருப்பது மிகவும் வேதனைக்குரிய அம்சமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக 'வர்ணம்' என்னும் குல தர்மத்தை 'ஜாதி' என்று வர்க்க பேதமாக்கி இந்து சமயத்தின் பெயரில் சமுதாயத்தை மாசுபடுத்தியிருப்பது சநாதன தர்மத்தினை அறியாதோர் செய்த மாபெரும் தவறு என்றும் கூறலாம்.

முதற்கண் 'தர்மம்' என்பது இந்து சாஸ்திரங்களில் பொதுவாக எவ்வாறு அர்த்தம் கொள்ளப் பட்டுள்ளதென்பதனை அறிந்திருப்பது நன்மை பயப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'த்ரிணிபதா விசர்க்கமே-விஷ்ணுர் கோபா அதாப்ய:
அதோ தர்மாணி தாரயன்'**

(ரிக்வேதம் 1.22.15.)

'உலகினைத் தாங்குவதும் அதனை நிலை நிறுத்துவதும் (தரிப்பதும்) எதுவோ அது தர்மம், இகத்திலும் பரத்திலும் நலமும் வீடும் தருவது; வினையாற்றுவதற்கு நம்மைத் தூண்டுவது; எல்லா உலகினையும் ஆக்கி அழித்து நிலை நிறுத்துவது; புருடார்த்தங்கட்குக் காரணமாயிருப்பது எதுவோ அதுவே தர்மம். ஆதிகால முதல் சத்திய தர்மம், வைதிக தர்மம் ஆதர்ஷ தர்மம், மானவ தர்மம், பாரத தர்மம் என வெவ்வேறு பெயர்களால் அறியப்பட்டு வந்த சனாதன தர்மத்தை தற்போது இந்து தர்மம் என்றும், இந்து சமயம் எனவும் அழைக்கப் பட்டுவருவது வழக்கத்திலே காணப்படுகின்றது. இறைவனிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட வேத நூல்களை (Revealed Literature) கேட்டுணர்ந்த ரிஷிகள் அவைகள் கேட்கப்பட்டு செவி வழி வளர்க்கப்பட்டதால் 'சுருதிகள்' எனவும், இத்தகைய வேத சுருதிகளை உணர்ந்த முனிவர்களால் எழுதப்பட்ட அறநூல்கள் 'ஸ்மிருதிகள்' எனவும் கூறப்பட்டன. அறத்தின் ஆதாரம், அதன் இலக்கணம் யாது என்பது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**'ஆசார பரமோ தர்ம: ச்ருத்யுக்த: ஸ்மார்த்த ஏவ ச:**

வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்ட ஒழுக்கமே மேலான ஒழுக்கம். இவ்விதமான நல்லொழுக்கத்திலிருந்து 'அறம்' வடிவெடுக்கின்றது', இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மம் அறத்தின் ஊற்று. அறத்திற்கு ஒழுக்கமே ஆதாரம் என முன்னோர்கள் காட்டியுள்ளனர்'

**வேத ஸ்மிருதி ஸதாசார ஸ்வஸ்யச ப்ரிய மாத்மன;**
**'ஏதச் சதுர்விதம் பிரஹூ சாட்க்ஷாத் தர்மஸ்ய லட்சணம்;**

**(மனுஸ்மிருதி · II. 12)**

மேலும் அற ஒழுக்கம் பேணுவோனை அந்த அறமே காப்பாற்றும், அது ஒருபோதும் அவர்களைக் கைவிடாது தர்மம் தலைகாக்கும்' என்ற முதுமொழிக்கும் அதுவேகாரணமாயிற்று. அறவழியைக் கைவிட்டவனுக்கு அறமே கூற்றுவனுமாகும். இக்கருத்துக்களைத் தான்;

**"தர்ம ஏவ ஹதோ ஹந்தி**
**தர்மோ ரக்ஷதி ரக்ஷித ;**

என வேத ஸ்மிருதிகளும், 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாகும்' என சிலப்பதிகாரமும் 'ஊழ் வினை உகுத்து வந்தூட்டும்' எனத் திருக்குறளும் எடுத்தியம்பியுள்ளமை தர்மத்தை மீறுவோருக்கு விதிக்கப்பட்ட எச்சரிக்கைகளாகும் எனவும் கொள்ளலாம். தருமம் என்பது பேச்சிற்குரிய - உபதேசத்திற்கு மட்டுமுரியதொன்றல்ல. இந்து தருமம் வாழ்ந்து அனுபவப்படுத்துதற்குரிய உரைகல்லாகும். சாதனை மார்கத்திற்குரியதாக அது அமைந்திருக்கின்றது. தனி மனிதனுக்குள்ள ஒழுக்க நியமங்களைப் போன்று தேசத்திற்கும், சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் எனத் தருமமும் பண்பாடும் உள்ளன· இத்தகைய பண்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் முறையான வளர்ச்சியினுலேயே கல்வி, அன்பு, ஈகை, இரக்கம், திண்மை, பொறுமை, வைராக்கியம், ஒற்றுமை, உண்மை, உரிமை, ஒப்புரவு, சமத்துவம், தூய்மை, பக்தி, ஞானம் போன்ற சனுதன குணங்கள் பெருகி வளர்கின்றன.

தனிமனிதனைப் பொறுத்தவரை அவனிடம் நல்லொழுக்கமே எதிர்பார்க்கப் படுகின்றது, இவற்றினை நல்ல கல்வியறிவினுலும் பெற்றுக் கொள்ளலாம், எனவே தான் வள்ளுவரும் 'கசடறக் கற்றபின். அதற்குத் தக நிற்க' வேண்டும் என்று வற்புறுத்தினுர். மிகவும் அத்தியாவசியம் பின்பற்ற வேண்டிய அன்ருட நியமங்களை வேதநூல்கள் வகைப்படுத்தியுள்ளன;

**"ஸத்யம்வத, தர்மம்சர, ஸ்வத்தியாயன்மா ப்ரமத: பூத்யை நப்ரமதி தவ்யம்: தேவ பித்ரு கார்யாபயம் நப்ரமதி தவ்யம்: மாத்ரு தேவோ பவ: பித்ருதேவோபவ: ஆச்சார்ய தேவோபவ: அதிதி தேவோ பவ ருதம் வதிஸ்யாமி, ஸத்யம் வதிஸ்யாமி,"**

என்பன அவற்றிலே சிலவாகும். 'நேர்மையானதைச் செய்; தெரிந்ததை மட்டும் செய்—சொல், இனிமையாகப் பேசு, கடுமையாகப் பேசற்க, நல்லோரை நாடு, உயிர்கள் அனைத்திலும் அன்பாயிரு ; உயர்வான உபதேசங்களைக் கேட்க, தாய், தந்தை குரு, விருத்தினர் அனைவரிடமும் அன்பாயும், பணிவாயும் இரு. என்பன அவ்வுபதேசத்தின் சாரமாகும். இவ்வாறு மனிதனுக்கு இயல்பாகவே தான் கற்ற கல்வியினுல் வருகின்ற இவ்வுயர் குணங்களை, அன்பை, கீழ்படிதலை, இரக்கத்தை எடுத்துச் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA


லிப் போதிக்க வேண்டிய நிலைமை எவ்வளவு துரதிஷ்டமானது! வருத்தத்திற்குரியது. மனிதனை மனிதனுக்கு வதே இவ்வரிய நற்குணங்கள்தாம் ஆறறிவுடைய மனிதன் 'எல்லாம் தெரிந்து கொண்டான், வாழும் வகையும் அறிந்து கொண்டான் - ஆனால் மனிதனாக வாழ மட்டும் மனிதனுக்கே தெரியவில்லை' என்ற ஒரு கவிஞரின் கூற்று நம்மை மிகவும் சிந்திக்க வைக்கின்றது.

இதிகாச புராணங்களிலே யுகதர்மங்களைப் பற்றிய பேச்சுக்கள் வருகின்றன. நமது ஆன்மீக சிந்தனையாளர்களும் இவற்றைப் போதியளவு எடுத்துக் காட்டியுள்ளனர். 'யதோ தர்மஸ்த தோஜய' - 'எங்கு தர்மமுண்டோ அங்கு வெற்றியுண்டு' என்னும் உண்மையொழுக்கத்தை வெளிப்படுத்துவன இதிகாசங்கள் எனப்படும். இருந்த போதும் இதிகாசங்களிலே சில இடங்களில் 'உண்மை' தோற்றுப் போனதும், நல்லோர் துயருற்றதையும் கூடப் பார்க்கும் போது பீஷ்மரும், துரியோதனனும், கர்ணனும் கொல்லப்பட்டதை நியாயப்படுத்த முடியுமா எனச் சிந்திக்கின்றபோது, அவற்றிற்கெல்லாம் அவரவர் கர்மமே காரணம் எனக் காட்டுமிடத்து, தர்மத்தைச் சாராதவன் 'உண்மையைக்' கடைப் பிடித்தும் கஷ்டப்படுவான் என்ற நியதியை இவை உணர்த்துவதாகவும் கருதலாம். எனவே 'கண்ணன்' என்ற தர்மத்தைச் சார்ந்தவர்கள் பெற்ற வெற்றி 'உண்மை' என்ற பண்பையும் உட்படுத்தி அதனையும்விட உயர்ந்து நிற்பது 'தர்மம்' என்பதைத்தான் இவையனைத்தும் புலப்படுத்துகின்றன எனலாம். நூற்றுக்கு நூறு தர்மம் தழைத்திருந்த கிருதயுகத்திலே தர்மம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதர்மம் பற்றிய சிந்தனைகளின் தேவை வேண்டப்பட வில்லை. எழுபத்தைந்து வீதம் தர்மமும் இருபத் தைந்து வீதம் அதர்மமும் திரேதாயுகத்திலே உண் டான போது அங்கே ராமபிரானும், ஐம்பது வீதம் அதர்மம் ஓங்கியபோது துவாபர யுகத்திலே கண்ண னும் அவதரித்ததாக யுகதர்மங்கள் பற்றி அறியப்பட் டுள்ளன இருபத்தைந்து வீதமே தர்மம் நிலைத்திருக் கும் கலியுகத்திலே கண்ணபிரான் 'கல்கி' அவதார மாக வருவார் என்றும் இந்து சாத்திரங்கள் அறி விக்கின்றன. தர்மம் நலிவுற்ற இக்காலத்தில் யோக வழியைப்பின் பற்றுவது சிறந்ததென்பது ஞானாசிரி யர்கள் கருத்தாகும்.

**"யத்ஸத்யம் ஸ தர்மோ யோ தர்ம;**
**ஸவப்ரகாசோ ய; ப்ரகாசிஸ் தத் ஸுக மிதி**
**யதனுர்தம் ஸோ தர்மோயேf தர்மஸ்தத்தமோ**
**யத்தமஸ்தத் துக்கமிதி"**

(மகாபாரதம்)

'எது உண்மையோ அது தர்மம், எது தர்மமோ அது வே ஒளி, எது ஒளியோ அதுவே இன்பம், எது பொய் யோ அது அதருமம். அதர்மம், என்பது இருள், துன் பம் எனப்படும்'. 'இவ்வாறு இதிகாச தர்மம் அமைந் திருந்தது, தனது ஆற்றலைத் தெரியாமல் இருப்பதும், அறமல்லாத வழியில் பொருள் தேடுவதும், கிடைப் பதற்குரிய பொருள் முயற்சியின்றிக் கிடைக்க வேண்டுமென்று விரும்புவதும், ஆகிய தன்மையுடை யோர் அறிவிலிகள்' என மகாபாரதம் விதுரநீதி கூறும். 'மண்ணில் இருந்து பொன்னை எடுப்பது போல நல்லவிடயங்களை யாரிடமிருந்தும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது அறிவில்லாதோர் கூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினும் பயனுண்டேல் அதனைப்பயன்படுத்த வேண்டும்' என்பதும் விதுரநீதி மொழிகளில் ஒன்றாகும். எனவே இவை போன்ற பல நல்லொழுக்கங்கள் அறஒழுக்கத்தின் பாற்படும் அதனால்தான்

'தர்மமூலம் நிஷேவேத ஸதாஸாரம் தந்த்ரிதம்' என்றபடி நல்லோர் அறத்தினடிப் படையில் ஒழுகுகின்றமுறை எதுவோ அது நல்லொழுக்கம் என வேதம் கூறியது. புராணங்கள் வேதநூல்களை விட மக்களிடம் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தன. புராணங்கள் கதை வடிவில் இறைவனின் லீலைகளாக தர்ம, அதர்மப் போராட்டங்களை விளக்கியுள்ள போதிலும் கதைகளிலே கவனம் செலுத்திய அளவிற்கு மக்கள் அவற்றின் கருத்துக்களிற் போதிய அக்கறை செலுத்தவில்லை எனலாம் ஆகக்கூடிப் புராணங்களிற் கூறப்பட்ட தர்மவித்தைகளான கலை, இலக்கியம், வரலாறு, வானியல். தீர்த்தம், தலம், மூர்த்தி வழிபாடுகள், விரதக் கிரியைகள் போன்ற கர்மவித்தைகள் ஆன்ம லாபத்திற்காக பின்பற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்டதால்; அவை ஆலயங்களிலும், சிலதனிப்பட்ட மனிதர்களது ஞான வாழ்விற்கும் வழிகாட்டுவனவாக அமைந்திருப்பதனை யாரும் மறுக்க முடியாது

தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட நூல்களில் அறக்கருத்துக்களின் வளர்ச்சி காணப்படுகின்றது. 'அறநெறி பிழையா அன்புடை நெஞ்சு' என மதுரைக் காஞ்சியும், 'அன்புகண் மாறிய அறனில் காட்சி' எனப் புறநானூறும். 'அருள் குடையாக அறம் கோலாக' எனப்பரிபாடலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சினனே காமம் கழிகண்ணோட்டம்,
அச்சம் பொய்சொலா அன்பு மிகவுடைமை
தெறல் கடுமையொடு பிறவுமிவ்வுலகத்து
அறம் தெரி திகிரிக்கு வழியடையாகும்"
(பதிற்றுப்பத்து 22 1:4)

'நல்லறம் செய்தோர் நல்லுலகடைதலும்
அல்லறம் செய்தோர் அருநரகடைதலும்
(மணிமேகலை, 16 8 89)

'அறம் பெரிதாற்றியதன் பயன் கொண்மார்
இறந்தோர் உலகம் படருநர் போ'
(பரிபாடல் 19 10-11)

'முற்றுற்றும் தூற்றினை நாளும் அறம் செய்து
பிற்றுற்றும் தூற்றுவர் சான்றவர் அத்துற்று
முக்குற்றம் நீக்கியும் முடியுமென வெல்லலாம்
துக்கத்துள் நீக்கிவிடும்.
(நாலடியார், 190)

இல்லறவழி நின்று நல்லறம் பல ஆற்றுவோர்
அறவோர் ஆவர் — (சிலப்பு)

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழ
குதலால்
அந்தணரும் அறவோர் — (குறள்)

நன்னெறியில் ஒழுகும் மேலோர் இருபிரிவினர்; அவர்களுள் ஒரு பிரிவினர், சான்றோர், மற்றவர் பேரறிவாளர் அறவோரும் அந்தணரும் சான்றோராவார்; ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் பேரறிவாளர்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார் என காசுபுண்டர் காவியம்' என்ற நூலிலே கூறப் பட்டுள்ளது, திருக்குறள் அறத்திற்கென்றே தனியாக 'அறத்துப் பால்' என ஒருபகுதியை அமைத்துக் கொடுத்தது, இவ்வாறு பண்டைத் தமிழ் நூல்களிலும் அறக் கருத்து வளர்ச்சிகட்குக்குறைவில்லை. ஆயினும் ஒழுக்கம், அறம், தருமம், நியமம் என்பன போன்ற சொற்கள் அடிக்கடி பல்வேறு பண்புகளில் பயன்படுத்தப் படுவதனுல் தருமம் பற்றிய குழப்பமான சிந்தனைகளும் மக்கள் மனதிலே நிலவுவதனைக் காண முடிகின்றது. 'அறமாவது பாவம் அனைத்தையும் பற்றறுப்பதும்' இருமை இன்பம் எய்துவிப்பதும், அன்பு, அருள் ஆகிய இறைமைக் குணங்களை வளர்ப்பதுமாகும்' எனவும் அறிஞர் சிலர் பொதுப் படக் கருதுவர். இவற்றிலிருந்து நற்குணங்கள் எனப்படுவதான தனக்கும் பிறர்க்கும் நல்லவற்றைத் தருகின்ற செயல்களில் தன்னை நிலைபெறச் செய்தல் ஒழுக்கம் என்றும், அவற்றினை மேனிலை அடையும் வண்ணம் வளர்த்துக் கொள்ளுதல் 'அறச்செயல்கள்' எனவும் இவையிரண்டின் முதிர்ச்சியும் நிறைவும் 'தருமமா' கின்றதெனவும் ஓரளவு பிரித்துப்பார்க்க முடியும். ஏனெனில் 'தருமம்' என்பது ஓர் மாபெரும் சக்தியாகும். அது சாதாரணமாக நாம்வழங்கும் ஈகை, கொடை, தானம் போன்ற செயல் முறைப் பண்புகளையும் கடந்து உலகெலாமாகி வேருகி நீதியாகி - உயர் தருமமாகி - இறைமையாகி நிற்பதொன்ருகும். எனவேதான் தருமமாகிய ஈஸ்வரனே அறம் வளர்க்கும் நாயகனுவான் என்பதனை

'ஆன்ற மெய் அறம் வளர்க்கும்
மூன்று கண்முனித் தலைவனை-ஆல நெடுநிழல்
அமர்ந்தவனை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருக்கலம்பகம் போற்றியது. எனவே இறை வன் ஞான நாயகன் மட்டுமல்ல ' அறம் வளர்க்கும் ஈசன் 'என்பதால் சைவத்திலே 'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்' எனச் சேக்கிழா ரும் அமைத்துக் காட்டினார்.

'சமயம் என்பதற்குச் சமயவெறி என்பது பொ ருளல்ல; 'உலகத்தின் ஒழுங்கான தார்மீகக் கட்டுப் பாட்டில் நம்பிக்கை என்பதே அதன் அர்த்தம்' என வும் 'நான் எது சத்தியம் என்று கருதுகிறேனோ அதைத் தவிரத் தத்துவம் என்பதென்னவென்று எனக்குத் தெரியாது' என்றும் கூறினார் காந்தியடி கள். (Young India 12-2-1928). அடுத்து வேதங் களில் 'ரிதம்' என்னும் கொள்கை பிரசித்தமானது. 'ரி த ம்' என்பது இயற்கை ஒழுங்கினைக் குறிப்பதற்கு வேதங்களிலே பயன்படுத்தப்பட்டது. இந்த ஒழுங்கு 'அற ஒழுங்கு' எனவும் அதற்கு வருணக்கடவுளே தலை வன் என்பதால் 'ரிதஸ்யகோப' என்ற சிறப்புப் பெயரும் அக்கடவுட்குக் கொடுக்கப்பட்டது. சூரிய, சந் திரர்களைக் கண்களாகக் கொண்டு அவன் உலகினைக் கண்காணிப்பான் எனவும் அவனது கண்கட்கு உலகின் எந்த மூலையிலும் நடக்கும் பாவங்களிலிருந்தும் மனி தர் தப்பமுடியாது எனவும் சொல்லப்பட்டதால் - இவற்றைத் தொடர்ந்து புண்ணிய - பாவக் கருத் துக்களும் அறஒழுக்கவிதிகளிலே இடம் பெறலாயிற் று. ஒழுக்க நியதிகளின் வாயிலாக இயற்கையின் ஒழுங்கு நியதிகள் மீறப்படுமிடத்து - மனிதனை அவை தண்டிக்கின்றன எனவும், அதனைத் தொடர்ந்து நிய திக்கோட்பாடும் - அதுவே கன்மக் கோட்பாடாகவும் பிற்காலம் சைவசித்தாந்தத்திலே பெரு வளர்ச்சிய டைந்திருப்பதனையும் அவதானிக்க முடியும். பாவம் கர்மமாகவும் புண்ணியம் தர்மமாகவும் மாறுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெனில் கர்மமா-தர்மமா என்பதே மகாபாரதத்தின் போராட்டமாகவும் பகவத் கீதையின் போதனையாக வும் அமைய வேண்டியதாயிற்று. அதனுல் கர்மம்-தர்மம் இரண்டிலுமே பற்றுவிட்டவன் பற்றற்ற தருமவானின் இருப்பிடத்திலே விடுதலை அடைவன் என்பதும் இந்து தர்மத்தின் அடிப்படைஉயர் லட்சி யமாயிற்று.

ஆதலால் 'கடமையைச் செய், பற்று வைக் காதே, என்று கீதை உபதேசித்தது. 'மனிதனுக்கு கடமையின் மார்க்கத்தைக் காட்டும் ஒழுக்க முறை யே நாகரீகம், கடமையைச் செய்வதும் ஒழுக்கத் தைக் கடைபிடிப்பதும் ஒன்றுக்கொன்று பொருத்த மானவை' என்று காந்தியடிகளும் கூறியுள்ளார்.[1] தூய்மையாகவும் நல்லொழுக்கத்துடனும் வாழ்வதால் ஏற்படக்கூடிய அற்புதமான மனவலிமையை வேறெங் கும் காணமுடியாது. இதைப் போன்றமன அமைதி யும் திருப்தியும் அன்பும் பொறுமையுடன் கூடிய உழைப்பும் நெருக்கடியான சமயங்களில் சிங்கம் போன்ற பலத்தையும் தந்து விடுகின்றது. மகத் தான ஒரு செயலைச் செய்யும்போது பலரும் தீரர் களாக மாறுவது சுலபம்' என்பது விவேகானந்தர் அறிவுரையுமாகும். புத்தபிரானும், காந்தியடிகளும் யேசுபிரானும், நபிகள் நாயகமும் இவ்வாறே அகிலம் போற்றும் வழிபாட்டுக்குரிய உத்தமர்களானுர்கள். எல்லாவற்றையும் விடச் சிறந்த ஆசான் சொந்த அனுபவம்' என்பது தான் உயர்ந்த கல்வியாகும் என்பதனுல் தான் விவேகானந்தர் உட்படப் பலரும்

---

1. காந்தியடிகள்; இந்திய சுயராஜ்யம், 1909, பக். 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அனுபவமே சிறந்த ஆசிரியர்' எனப் புகட்டிச் சென்றனர். நல்லொழுக்கம் என்பது நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் பல விதங்களிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஒழுக்க விதிகள், நியமங்கள், நல்லது, கெட்டது, சரிஎது பிழைஎது என்பனவற்றிலே ஒரே மாதிரியான ஒழுக்க விதிகள் எல்லா இடமும் காணப்படுவதில்லை. ஆகையினுல் 'சட்டம்' (Law) என்ற ஒன்றினை அந்தந்த நாட்டு ஒழுக்க விதிகளைக் காப்பாற்றுவதற்காக அவ்வவ் அரசாங்கங்கள் ஏற்படுத்தியுள்ளன. காலதேச தட்பவெப்ப வகுப்பு வேறுபாடுகட்குத் தக்கவாறு ஒழுக்கத்திலும் பாகுபாடுகள் காணப்படும் ஆயினும் அவற்றின் அடிப்படை நல்லொழுக்கப் போதனையாகும். நல்லது கெட்டது எவை எனப் பகுத்து நடப்பதற்கு நீதிநூல்கள் துணை செய்யும். நீதிமொழிகளில் தெளிவின்மை ஏற்படும் இடத்து பெரியோர், அறவோர், உயர்ந்தோர் என்பவர்களின் நடத்தையினையும், வாக்குகளையும் பின்பற்றலாம் என்பது சாஸ்திரங்கள் காட்டும் வழியாகும் ஆனுல் சட்டநூல்கள் சமுதாய அரசியற் பிரச்சனைகட்கு தீர்வு காணமுற்படுமிடத்து நீதிமன்றங்கள் மூலம் அவை செயற்படுத்தப்படுகின்றன. எனவே சட்டத்தால் நல்லொழுக்கத்தை நிலைபெறச் செய்ய முடியுமா என்பது சந்தேகமே. அதனுல்தான் சட்டம் வேறு - தர்மம் வேறு எனஎடுத்துக்காட்டப்பட்டது. சட்டம் குற்றவாளிகளைத் தப்பிக்கவும் உதவும் - கூண்டிலடைக்கவும் உதவும். ஆனுல் சட்டத்திலே தப்பித்தவர்கள் தர்மத்தினுல் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். அதனையே 'அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' எனவும் 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' எனவும் இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மொழிகள் உண்டாயின. அதனையே விதி அல்லது கன்மம் அல்லது நியதி என்று தத்துவ நூல்கள் இயம்பின. அந்த நீதி நெறிகளின் மேலான இறைமை இந்து சமயத்திலே 'தர்மம்' என்ற பெயரைப் பெற்றது. எனவே சட்டங்கள் காலத்துக்காலம் இடத்திற்கு இடம் மாறலாம். பாரதியாரும்

'காலத்திற் கேற்ற வகைகள்-அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலமுழுமைக்கும் ஒன்ருய்-எந்த
நாளும் நிலைத்திடும் நூல் ஒன்றுமில்லை'

எனச் சொல்லி வைத்ததுபோல ஒழுக்க விதிகள் வேறுபடக் கூடியன. ஆயினும் சமயப் பொது நிகழ்வினை ஆராய்ந்தால் எந்நாட்டவர்க்கும் எச்சமூகத்திற்கும் இறைமைப் பொருள் ஒன்று, அது பெயரில் மாறுபட்டபோதும் 'தர்மம்' என்ற பொதுவான பெயரிலே நிலவி வருவது கண் கூடாகும்.

உயர்கல்வி கற்பதனுல் இந்தவகையான தர்மத்தின் குறிக்கோளை அடைவது இலகுவானதா என்பதனை ஆராயுமிடத்து அறிவையும் புகழையும் தரும் கல்வியறிவினுல் சில சமயம் பணமும் பொருளும் சம்பாதிக்க முடியுமே தவிர அருளையும் தர்மத்தையும் ஈட்டிக் கொள்ள முடியுமா என்பதனை உறுதிப்படுத்த முடியாது. இந்த விடயத்திலே விவேகானந்தரின் கல்விக் கொள்கைகள் பற்றிய ஒரு சில சிந்தனைகளைக் கீழே காணலாம்.

'கல்வி என்பது மூளைக்குள் பலவிடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல, நல்லொழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்தக்களைக் கிரகித்து அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலும் நடத்தயிலும் ஊடுருவி நிற்கச் செய்தால் ஒரு பெரிய நூல்நிலையம் முழுவதையும் மனப்பாடம் செய்தவனை விட - இப்படிப்பட்டவர்களே அதிகம் கற்றவர்களாக இருப்பதனைக் காணலாம். பொது மக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றதாக இருக்க உதவி செய்யாத கல்வி உறுதியான நல்லொழுக்கத்தையும், பிறர்குதவும் ஊக்கத்தையும், மனஉறுதியையும், வெளிப்படுத்தப் பயன்படாத கல்வி -அதனைக் கல்வி என்று சொல்லுவதே பொருந்துமா?[1]

'நன்னெறிகள் ஒருபோதும் அறிய முடியாதவற்றைச் சார்ந்திருப்பதில்லை. அறிய முடியாதவற்றை உபதேசிப்பதுமில்லை. கடவுளிடம் நம்பிக்கையற்றவனை நாத்திகன் எனப் பழைய மதம் கூறும். தன்னம்பிக்கை அற்றவனை (தனது ஆத்மாவின் ஆற்றலில் நம்பிக்கை அற்றவனை) நாத்திகன் எனப் புது மதம் கூறும். சொற்களை விதவிதமாக உச்சரிப்பது, நூல்களை விதம் விதமாக விளக்குவது, இவை எல்லாம் பண்டிதர்களின் இன்பத்திற்கே உதவும், ஆன்ம விடுதலைக்கு உதவாது.[2]

எனவே தன்னைவிடுவிக்கத் தெரிந்தவர்க்கே பிறரதுவிடுதலைக்கும் வழிகாட்ட முடியும். வெறும் ஊதியத்தை மட்டுமே வளர்க்க உதவும் கல்வியானது ஆத்மீக ஆற்றலை வளர்ப்பதற்குப் போதுமானதல்ல என்

---

1. விவேகானந்தர், புதிய இந்தியாவைப் படைப்போம், பக். 59.

2. விவேகானந்தர், செயல்முறை வேதாந்தம், பக். 17, 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதனை சுவாமிகளின் கூற்றிலிருந்து உணரமுடியும் சைவசித்தாந்த தத்துவமானது சாத்திரக் கல்வியறி வை மேலானதாக அனுமதிப்பதில்லை. வெறும் கல் வியறிவினால் மட்டும் ஒருவன் ஆத்மவிடுதலை பெறு வது கிடையாது எனவும் அத்தகைய அறிவாற்றல், விஞ்ஞானம் யாவும் சிற்றறிவின்பாற் பட்டனவே யாம் எனவும் சித்தாந்தம் கூறுவதை அவதானிக்க லாம். அதாவது படித்தவர்கள், மேதைகளால் எதை யும் அறிவினாலும் பணத்தினாலும் பெருமளவிலே சா திக்கமுடியும் என்பதற்குச் சமுதாய வாழ்க்கையே சாட் சியாகும். படித்தவர்கள் தமது புத்திசாதுர்யத்தினால் வக்கீல் மூலமோ, வேறு வழிகளிலோ தம்மைக் காப் பாற்றிக் கொள்ளக் கற்றிருக்கின்றார்களேயன்றி தர் மத்திடம் அவர்கள் தோற்று போன வரலாறுகள் ஏராளமாக உண்டு. அதன் விளைவாகவே படித்துப் பெற்ற அறிவினால் மட்டும் விடுதலைகிடையாது என வும் பேரறிவாளரான சான்றோரிடம் கற்ற வித்தை கட்குஏற்ப வினயமும் ஒழுக்கமும் இருந்தால் அவர் களிடம் இறைவனின் திருவருட்சத்தி பதிதலும், அத னால் மலபரிபாகமும் உண்டாகும். உண்டாகவே மெய் ஞானமானது சித்திக்கும் வகையிலே அறம் வளர்க்கு மீசன் சற்குருவாகி வந்து முத்தியாகிய விடுதலைப் பேற் றினையளிப்பன் என்றும் சித்தாந்தம் உறுதியாகக் கூறியது. 'வித்தியா ததாதி வினயம்-வினயம் ததாதி வித்தியா' என்பது சாஸ்திரக் கோட்பாடாகும். 'வித் தையாகிய கல்வி ஒருவருக்கு வினயமாகிய அடக்கத் தைக் கொடுக்க வேண்டும். அடக்கம் என்பது அதனை ஒருவர்தான் பெற்ற உண்மைக் கல்வியறிவினால் அடைய வேண்டும், என்பது இதன் பொருளாகும். அதனையே 'அடக்கமுடையோர் அறிவிலர் என்றெண்ணிக் கடக்

கக் கருதவும் வேண்டாம் என ஔவை மூதாட்டியும், அறிவுறுத்திச் சென்ருர். 'வில்வளைத்திருப்பதும்', வேங்கை பதுங்குவதும், விவேகமுடையோர் பொறுமையுடன் இருப்பதும் நல்லதற்கல்லவாம், என்பதான விவேக சித்தாமணி, என்ற நூலின் கருத்தும் இவ்விடத்து ஒப்பிட்டு நோக்கத்தக்கதாம். ஆகையினுல் தர்மம் என்பது எப்போதும் மனிதன் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் அளித்துக் கொண்டேயிருக்கின்றது. சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தாதவர்கள் பின்னர் அவதிப்படவேண்டியும் நேரிடுகின்றது.

**வர்ணத்தின் தோற்றம் :**

இத்தகைய உயர்வான மனிதாபிமானத்துடன் கூடிய இந்துதர்மத்திலே 'சாதியமைப்பு' என்ற வகுப்புப் பிரிவினை எங்ஙனம் ஏற்பட்டது என்பது சிந்தித்து தீர்வுகாண வேண்டிய விடயமாகும். சாதியமைப்பைப்பற்றி விபரிப்பதற்கு முன்னர் சாதியமைப்பின் ஆரம்ப வரலாற்றினைச் சுருக்கமாக அறிவது அவசியமாகும். இந்து தர்மத்திற்கும் சாதியமைப்பிற்கும் ஏதும் தொடர்யிருப்பதாக இந்துமத சாஸ்திரங்கள் எதிலும் நேரடியான குறிப்புகள் கிடையாது. .வர்ணதர்மம், என்பதே இந்து சமுகத்தவரிடையே ஆதிகாலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு சமூக அமைப்பாக விளங்குகின்றது. தற்காலத்திலே இந்த வர்ணப் பாகுபாடுகள் சமுதாயத்திலுள்ள சாதிபிரிவினையையும் அதன் காரணமாக சமூகங்களிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளையும் குறிப்பதாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. ஆதலால் வருணதர்மத்தின் தோற்றம் பற்றிய வேத நூல்களின் கருத்துகளை அறிவது இன்றியமையாதகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குவேதத்தின் மிகப் பழையபாசுரங்களில் 'விசு' எனப்படும் பொதுக்குலமக்கள் பற்றியும் 'சத்திரர்' எனப்படும் விழமியோர் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பழைய இந்தோ - ஐரோப்பிய ரது பதிவுச் சான்றுகளிலும் அவர்களது தொல்குலத்தினர் குடிபெயர்ந்து போவதற்கு முன்னர் சமூகத்தில் தொல் குலத்தினரிடையே 'வகுப்பாட்சி' முறை ஒன்று சிறப்பாக இருந்ததென்றும் தெரிவிக்கின்றன. தவிரப் பண்டைக்கால இந்தியாவின் நான்குவர்ணத்திற்கு ஒப்பான 'நான்கு வகுப்புக்கள்' புராதன கால ஈரானிலும் இருந்து வந்துள்ளன. ஆயினும் இருக்கு வேத முற்பகுதியிலே இத்தகைய வர்ணப்பிரிவிற்கு ஆதாரமான செய்யுட்கள் எதுவும் காணப்படவில்லை. எனினும் இருக்கு வேதம் 10ம் மண்டலம் 90ம் சூக்தத்தின், 12ம் செய்யுள் ஒன்று இத்தகைய ஒரு வர்ணப் பாகுபாட்டு முறையினை வரையறைப்படுத்திக் கூறுகின்றது. அச் செய்யுளில் கூறப்படுவதாவது :

**"பிராமணர் என்பவர் விராட புருடனுடைய முகத்தில் உதித்தவர்கள், இப்புருடனுடைய இரண்டு தோள்களிலிருந்தும் இராஜன்யர் உண்டாக்கப்பட்டனர். அவரது தொடைகளில் வைசியரும் பாதங்களிலிருந்து சூத்திரரும் தோன்றினர்".**

(ரிக்வேதம் 10-90-12)

என்பதே அச்செய்யுளாகும். இதனடிப்படையிலே பின் வந்தோரால் 'வர்ணம் நான்கு பிரிவு என்பது மரபு' எனக் கூறப்பட்டது. இருக்கு வேதத்தின் 'புருட சூக்தம்' என்னும் இந்தப் பகுதியிலே இவ்வாறு வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணப்பிரிவின் ஆரம்பம் விராட புருடனிமிருந்து உண்டானது எனத் தொடங்கியுள்ளது. இந்தச் செய்யுளிலே தொடர்ந்து படைப்புத் தத்துவமானது விளக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றது. புருடனுனவன் தன்னைத் தியாகம் செய்வதிலிருந்து மனித இனம் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றது என்ற தத்துவம் ஆங்கு சொல்லப்படுகின்றது. இப்பகுதியினை 'வின்சற் ஸ்மித்' என்பார் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார். யாகத்திலே தியாகம் செய்யப்பட்ட புருடனின் ஒவ்வோர் அங்கங்களிலிருந்தும் உலகப் பொருட்கள் உதயமாவதை இச்செய்யுட் பகுதி விளக்குவதாக வேறு பல அறிஞரும் கருதுவர். எனவே இருக்கு வேதச் செய்யுட் பகுதியைத் தொடர்ந்து படித்துச் செல்வோருக்கு இவ்வுண்மை புலனுகும். அது பின்வருமாறு அமைந்திருக்கின்றது

'தியாகம் செய்யப்பட்ட புருடனின் வாய் புரோகிதராகவும், புஜங்கள் போர் வீரராகவும், தொடை வணிகராகவும், பாதம் சேவகராகவும் வெளிப்பட்டது. இதயத்திலிருந்து சந்திரனும் கண்ணிலே சூரியனும், காற்றும் மூச்சும் காதிலிருந்தும், அக்னிவாயினின்றும், வெளிப்பட்டன. கொப்பூளில்புகையும், தலையினின்றும் வானமும், கால்களிலிருந்து பூமியும். காதிலிருந்து ஆகாய வெளியும் உண்டாயிற்று. இவ்வாறே புருடன் அகிலமனைத்தையும் படைத்தான்*

---

* Vincent Smith, Advanced History of India, Vol. I என்ற நூலின் மொழிப் பெயர்ப்பிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இனத்தின் தோற்றமானது சுருக்கமாகவும் பரவலாகவும் ஆதியிலிருந்து எவ்வாறு ஆரம்பமானது என்பது பற்றி ஒரு தத்துவத் தோற்றத்தை இச்செய்யுள் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தச் சிலேடையான செய்யுளில் எங்குமே 'ஜாதி' என்ற சொல்லாட்சி இடம் பெற்றதற்கான ஆதாரங்கள் கிடையாது.

'வர்ணம்' என்பதனைப் பற்றியும் மனுக்குல ஆரம்பமும், படைப்பின் ஆரம்பமும் பற்றியும் கூறுகின்ற இச்செய்யுளில் 'ஜாதி' என்ற கருத்து எவ்வாறு உருவகிக்கப்பட்டதென்பது சிந்திக்க வேண்டியதொரு அம்சமாகும். சிலேடையான இச்செய்யுளின் உட்பொருளானது காலப் போக்கிலே சாதிப் பிரிவாக மாற்றப்பட்டு விட்டதென்பதே வரலாறு காட்டும் உண்மை எனலாம். அத்துடன் தர்மசாஸ்திர நூலான மனுதர்ம சாஸ்திரத்திலே 'சாதி' (Caste) என்று தவருக மொழி பெயர்க்கப்பட்டதும் ஒரு காரணமாகலாம். இத்தவறு தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்ததால் பிற்காலம் எழுதப்பட்ட நூல்களில் எல்லாம் சாதிபற்றிய தவருன விளக்கங்கட்கு இந்தச் செய்யுள் மூலகாரணமாக அமைபவும் வழிகோலுவதாயிற்று. இனம், அல்லது வரிசை அல்லது நிறம் என்பதே 'வர்ணம்' என்றசொல்லிற்கு நேரடியாகக் கொள்ளப்படும் பொருள் என்பதாகும். ஆனல் மேற்குறிப்பிட்ட தவருன வர்ணம் பற்றிய கருத்து வளர்ச்சி காரணமாக இந்து சமுதாயத்திலே, 'வர்ணபாகுபாடு' என்ற அமைப்பானது 'சாதியமைப்பு' என்ற பெயரிலே பெரும் அனர்த்தங்கள் விளைவதற்கு முன்னேடியாக அமைந்து விட்டமை இந்துக்களின் துரதிஷ்டம் என்றுதான் கூறவேண்டும். 'வர்ணம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல் சுட்டிகாட்டுவது போல ஆரியருக்கும் ஆரியரல்லாதவர்க்குமிடையிலான நிறவேற்றுமை தான் ஆரம்பகால சமுதாய வேற்றுமையின் அடிப்படை ஆனால் இருபகுதியினரிடையிலும், ஏற்றத் தாழ்வுகளோ, தீண்டாமை வகுப்பு வேறுபாடுகளோ இருக்கவில்லை. ஒவ்வொரு வர்ணத்தவரிடையேயும் சகோதரத்துவம் வளரத் தொடங்கியபோது ஆக்கிரமிப்பு காலத்திலிருந்த ஆரியரது நிறவேற்றுமை இல்லாது மறைந்தொழிகின்ற நிகழ்ச்சிப் போக்குகள் ஆரம்பமாகியதை, இந்திய வரலாறு எடுத்துக் காட்டுவதாகவும் பிற்கால ஆசிரியர்கள் விமர்சித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.[1]

**வர்ணப் பிரிவுகள் :**

இப்படியானதொரு பெரும் மாறுதலையும், பாதிப்பையும், சமூகத்திலே பாரிய தாக்கத்தினையும் ஏற்படுத்திய வர்ணப்பிரிவு பற்றி 'மனுஸ்மிருதி' என்னும் ஆதிகால தர்மசாஸ்திரநூல் யாது சொல்கின்றதென்பதையும் அறிய வேண்டும். அந்த நூலில் வர்ணம் பற்றிய கருத்துக்கள் ஒன்பதாம், பத்தாம் அத்தியாயங்களிலே அதிகமாகக் காணப்பட்டுள்ளன.[2] அவற்றின் பொருளைச் சுருக்கமாகக் கீழே காணலாம்.

'பிராமணர்கள் அனைவருக்கும் வேதமே பொருளாக இருக்கின்றது பிராமணர்கள் ஜீவித்து இருப்பதை விரும்பும் எவரும் அவருக்கு ஹிம்சை செய்யார்.

---

1, நம்பூதிரிபாட், ஈ. எம். எஸ்., இந்திய வரலாறு (மொழி பெயர்ப்பு), பக். 46.
2. Kane, P. V., History of Dharmasastras, Vol. II Part-I, Manu Dharmasastra, Chaps, I. III, IX, X.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



வைதீகமானாலும் லௌகீகமானாலும் என்ன ! அக்னி எப்படி முக்கியமோ பிராமணர்களும் அப்படியே. அவர்கள் பூசிக்கத் தகுந்தவர்கள். மேலான தெய்வத் தன்மை உடையவர்கள். பிராமணர்கள் ஆறு கர்மங்களினாலே ஜீவிக்க வேண்டியவர்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், வாங்குதல் என்பன அவையாகும். ஓதுவித்தல், யாகம் செவித்தல், நல்லோரிடம் தானம் வாங்குதல் இம்மூன்றும் பிராமண வர்ணத்தவரின் ஜீவனோபாயத் தொழிலாகும். இவை தர்மசாத்திர நூல்களிலே பொதுவாக பிராமண வர்ணம் பற்றிக் காணப்படும் செய்திகளாகும். மேலும் சில :

'லோக சேமம் கருதி வேத சப்தத்தை ஆயுட்காலத் தொழிலாகக் கொண்டு ஓதுவதற்கு மந்திரசித்திக்கு வேண்டிய மகா கடுமையான விதிகளை, விரதங்களை, உபவாசங்களை அனுசரித்து, தன் வாழ்க்கையிலே ஆடம்பரமில்லாமல், இந்திரியங்களை வாடவாடவைத்து கண்ட ஆகாரங்களையும் உண்ணுமல், ஜீவனை ரட்சித்துக் கொள்கிற அளவு மட்டுமே ஆகார விகாரங்களைச் சுருக்கி நாடி நரம்புகளை நுண்ணிய நிலைக்குக் கொண்டு வரக்கூடிய சாத்விக உணவினை உண்டு லோக சேமார்த்தமே நோக்கமாகக் கொண்டு, வேதரஷ்ணம், கர்மானுட்டங்களைச் செய்து காலம் கழிக்க ஒரு கூட்டம் தேவைப்பட்டது. அதுவே பிராமணவர்ணம்'[1]

---

1. Kane, P. V. History of Dharmasastras, (Manu-Smtr(i) Vol. II, Part. I, Chapter, X.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிராமணர்கள் எத்தனை லாபம் தருகின்ற தொழிலானாலும் சௌகர்யமான தொழிலானாலும் அவர்கள் அவற்றைச் செய்யக்கூடாது. வேத அத்தியயனங்களும், யச்ஞ கர்மானுட்டானங்களுமே இவர்கள் தொழிலாகும்.'

பிராமணர் அல்லாதமற்ற வர்ணத்தார் ஏன் வேத அத்யயனத்தையும் யாக கர்மானுஷ்டானங்களையும் செய்யக்கூடாது என்று கேட்டால்; மற்ற வர்ணத்தவர்கள் தங்கள் தொழிலைச் செய்து கொண்டு மேற்சொல்லிய மந்திர சித்திக்குவேண்டிய பிராமணருக்குரிய வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து வாழ முடியாமையினாலேயே ரிஷிகள் பிராமணர் என்ற வர்ணத்தை உருவாக்கி இதனையே தொழிலாகச் செய்யும்படி அமைத்துச் சென்றனர்.'

'பிராமணர் எள்ளினைச் சாப்பிடவும், தானம் தவிர அதனை ஏனையவற்றிற்கோ பாவித்தால் பிதுரருடன் அவன் புழுவாகப் பிறப்பான். மாமிசம் உண்டால், உப்பு விற்றால், பால் விற்றாலோ உடனே பதிதனாவான்.

இப்படியாக பிராமண வர்ணமும் அவர்கட்குரிய தொழில்களும் கடமைகளும் இவ்வாறு தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளதை நோக்கும் போது பிராமண வர்ணம் எதற்காக? அவர்கள் லட்கியம் என்ன? அவர்களை ஏன் அடுத்த வர்ணத்தவர் பாதுகாக்க வேணடும் என்பதெல்லாம் ஓரளவு அறிய முடிகின்றது. ஆயினும் ஆங்கு எவ்விடத்திலேனும் 'ஜாதி' பற்றிய குறிப்புக்களுடன் தொடர்புபட்டதாக எதனையும் காண்பதரிதாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே சத்திரிய வர்ணம் பற்றியும் வைசிய, சூத்திர வர்ணம் பற்றியும் மனுஸ்மிருதியில் கூறப்பட்டுள்ளன. குடிமக்களைக் காத்து ஈகை, வேள்வியாற்றல், ஆற்றுவித்தல், விடயங்களில் வைராக்கியம் என்னுமிவற்றைப் பின்பற்றுவோர் சத்திரிய வர்ணம் எனவும், ஆற்றல், அழகு, வீரம் திறமை, ஆட்சி, போரில் புறமுதுகிடாத தீரம் என்பன சத்திரிய கர்மங்கள் எனவும் மனுநூல் கூறுகின்றது.

**அத்யாபனம் சாத்யனம் யகூனம் யாஜனம்
தகா
தானம் ப்ரதிகிரஹச் சைவ பிராஹ்மணானாமை
கல் பயத் :**

என்றவாறு முற்கூறப்பட்ட பிராமண கர்மங்களையும்,

**ப்ரஜானம்ரஷணம் தானமிஜ்யாத்யயன மேவ ச
விஷயேஷ்வ ப்ரஸக் திச்ச ஸத்திரிய யஸ்ய :
ஸாமஸத**

என்றபடி சத்திரிய கர்மங்களும்,

**பசூனும் ரஷணம் தானமிஜ்யாத்யனமேவ ச
வணிக்கபதம் குஸீதம் ச வைஸ்யஸ்ய கிருக்ஷ
மேவ ச;**

அதாவது, பயிர்த் தொழில் செய்தல், விவசாயம் செய்வது, பசு வளர்த்தல், கொடை, ஈகை, வேதம் படித்தல், வாணிபம் செய்து பொருளீட்டல், பண்டமாற்றுச் செய்தல் என்பன வைசிய வர்ணத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பான கர்மங்களாகும் எனவும் ஆங்கு கூறப் பட்டுள்ளன. அத்துடன்

**ஏகமேவ ஹி க்ஷத்ரஸ்ய ப்ரபு; கர்மஸமாதிகத் ஏதேஷாமேவ வர்ணானும் சாஸ்ருஷாம் அன ஸூயயர்;**

என்பதிலே ஏனைய மூன்று வர்ணத்தவருக்கும் சேவை செய்தல் என்பது சூத்திரருக்குரிய கர்மமாகும் எனவும் கூறப்பட்டது. இந்த சுலோகத்திற்கும் பிற்காலம் கொடுக்கப்பட்ட அர்த்தங்களும் பல அனர்த்தங்கள் பின்னர் விளைவதற்கு காரணமாயின எனலாம். 'சூத்திர வர்ணத்தவர் சேவை செய்வோர்' என்று கூறுமிடத்து அவர்கள் ஏனைய மூன்று வர்ணத்தவர்க்கும் 'அடிமைகள்', அடியாட்கள், சேவகர்கள் என்றெல்லாம் பொருள் கொள்ளப்பட்டதால் சூத்திரர்கள் பிறப்பால் அடிமைகள், தாழ்ந்தவர்கள் என்றெல்லாம் பிற்காலம் விளக்கம் கற்பிக்கப்பட்டாலும் உண்மையிலே சூத்திர வர்ணத்தவர் கடமை என்பது ஏனைய வர்ணத்தவர்களது கர்மங்கள், தொழில்களில் ஒத்துழைத்தல், உழைப்பினுல் ஊதியம் பெறுதல், அவ்வத் தொழில்களில் சுயகௌரவத்துடன் இருப்பது என்பதைத் தான் கருதுவதாகும். தற்கால அரசாங்க நிர்வாகத்திலும் ஒருவர் எடுபிடி வேலை செய்யும் ஊழியராகவும், தொழில் நிலையங்களில் ஒருவர் முகவர் எனில் இன்னொருவர் சிற்றூழியராகவும் தொழில் பார்ப்பது சகஜமே அதேபோலத் தான் எல்லோராலும் எல்லாக் கடமைகளையும் ஒழுங்காக ஆற்றுவது கடினம் என்பதாலும், எல்லோருக்கும் சமமான கல்வி கல்வியறிவு பெறுவது சிரமம் என்பதாலும் அவரவர் குலத்தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைப் பழகியிருப்பது சிறந்தது எனக் கருதப் பட்டது என்பதனையே சூத்திர வர்ணம் பற்றிய சுலோகம் விளக்குவதாகக் கொள்ளலாம். அதுமட்டுமன்றித் தத்துவத்திலே மூன்று சக்திகள் ஆற்றல் சக்திகளாக உருவகப்படுத்தப்படுகின்றன. அவை இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்பனவாம். அவற்றிலே அறிவினுல் ஜீவனம் செய்பவன் ஞான சக்தியையும், உடல் உழைப்பினுல் ஜீவனம் செய்வோன் கிரியா சக்தியையும் பெற்றவனுக விளங்குவதை இவையுணர்துகின்றன என்றும் கூறலாம். இச்சை எனப்படும் ஊக்குவிப்புச் சதிக்யினுல் ஒருவன் கொள்கைகளை விளங்குகின்ருன் - மற்றொருவன் அவற்றைச் செயல்படுத்துகின்ருன். அறிவும்-உழைப்பும் இணைந்தால் தான் சமூகம் திறம்பட இயங்க முடியும் என்பதனையே இந்த வர்ணப் பாகுபாடு தொழில் பிரிவுகளில் வைத்து விளக்கியுள்ளதே தவிர 'சாதி'' என்ற வகுப்பு ஏற்றதாழ்வுகளை அத் திருநூல்கள் கற்பித்ததாகக் கூறமுடியாது. ஒரு குடும்பத்திலே மூத்த மகன் ஆசிரியர். இளைய மசன் சிறு தொழிலாளி என்பதனுல் குடும்பத்திலே குழந்தைகட்கிடையிலே சமத்துவமின்மை ஏற்படுகின்றது எனக் கூறலாமா? இன்றைய நாளிலே படித்துப் பட்டம் வாங்கியவர்கள் பலர் பத்தாயிரம் சம்பளப் பணத்தையே எட்ட முடியாமல் தவிக்கும் போது, சாதாரண கல்வியறிவுள்ள ஒருவன் வெளிநாடுகட்குச் சென்று தனது புத்திசாதுர்யத்தாலும், உடல் உழைப்பாலும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்துக் கொள்ள முடியுமெனில் - அறிவினை விட உழைப்பினுலேயே அதிக பணம் தேடிக்கொள்ள முடியுமென்பதும் புலனுகின்றது. எனவே தொழிலடிப்படையிலான வர்ணப் பிரிவுகள் பிறப்படிப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையிலான சாதிப் பிரிவுகளாக மாற்றமடைந்த மையே இன்றய சமுதாய ஏற்றத் தாழ்வுகள் யாவற்றிற்கும் காரணமாக அமைந்தது. உன்னதமான லட்சியங்கட்காக ஏற்படுத்தப்பட்ட வர்ணப்பிரிவினையை சாதியமைப்பாக சமுதாயத்திலே மாற்றியது மட்டுமன்றி அவற்றிற்கெல்லாம் இந்து சமயமே காரணம் என்று கூறி சநாதன தர்மத்தின் பேரில் சமயக் காழ்ப்புணர்ச்சியானது மக்கள் மனதிலே வேரூன்ற இத்தகைய பொருந்தாத செயல்கள் வழிகோலுவனவாகவும் அமைந்துவிட்ட நிலையினைக் காணமுடிகிறது.

**வர்ணத்தின் செயற்பாடுகள் :**

'சாதி முறைகள் வெளிப்பார்வைக்கு சமயத்துடன் இணைந்திருப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் அவ்வாறில்லை; தேசம் என்றரீதியில் தம்மைப்பாதுகாக்க இந்தச் சமூகஅமைப்புகள் தேவைப்பட்டன, தற்காப்புக்கான இத்தேவை இல்லாதொழியும் போது அவை இயற்கையாக மரணத்தையடையும்' எனக்கூறிய சுவாமி விவேகானந்தர் மேலும் கூறுமிடத்து. 'உயிர், பிறப்பு என்பன பற்றிய நமது லட்சியம் மற்றவர்களை விட முற்றிலும் மாறுபட்டதாகும். ஆத்மீகப் பண்பாடும் பற்றின்மையும் வாய்ந்த பிராமணனே நமது லட்சியம். பிராம்மண லட்சியம் என்பது லௌகீக குணங்கள் முற்றிலும் மறைந்து உண்மை ஞானம் மிகுந்து காணப்படும் நிலையே இலட்சியப் பிராமணத்துவமாக நான் கருதுகிறேன். சுயநலப் போக்குள்ளவர்களும் மேதையான முட்டாள்களும் அதற்குத் தருகின்ற விளக்கத்தின் மூலம் நாம் அவற்றைப் புரிந்து கொள்ளக் கூடாது எனவும் சுவாமிகள் அறிவுறுத்தியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மை இவ்விடத்திலே நினைவு கூரற்பாலது.[1]

இருக்கு வேதத்தில் காணப்பட்ட மற்றோர் கூற்றினையும் வர்ணப் பிரிவினைக் குழப்புவதற்குக் காரணமாகச் சிலர் பயன்படுத்திக் கொண்டனர். ஆரியர்கள் போர் முகத்திலே தமது எதிரிகளைச் சுட்டுமிடத்து அடிக்கடி தெய்வங்களிடம் 'தாசர்களை வென்றுதர வேண்டும்' என்ற பொருளிலே பிரார்த்தித்துள்ளனர், ஆங்கு அவ்விடங்களில் 'தஸ்யூக்கள்' எனவும் லிங்கத்தை வழிபடும் தாசர்கள் எனவும்' அவர்கள் தேவர்களை வழிபடாதவர்கள் என்ற பொருளிலே ரிக்வேத பாடல்கள் அவிதேவியர், அவ்விரதர் என்ற பெயரிலே எல்லாம் மறு பகுதி மக்களைக் குறிப்பாக 'தாசவர்ணத்தவர்' என அழைத்துள்ளனர். கருநிறத்தவர், குள்ளமானவர், இனத்தால், நிறத்தால் மாறுபட்ட வர்ணத்தவர் என்ற பொருளிலே வர்ணமானது நிறம், இனம், வரிசை என்ற கருத்திலே இங்கு இடம் பெற்றுள்ளதையும் அவதானிக்கலாம் காலப் போக்கிலே மோதல்கள் குறைந்து இரு சமூகத்தவரும் ஒருவரை ஒருவர் புரிந்துணர்வு கொண்டு கலப்பு மணங்களும் நடைபெறத் தொடங்கிய காலங்களில் தான் இந்த நான்கு வர்ணப் பிரிவினை ரிக்வேதம் 10ம் மண்டலம் எடுத்துக் காட்டியிருக்க வேண்டும். எனவும் சிலர் ஊகிப்பர் அத்துடன் 'தாசர்கள் என்பதனை 'அடிமைகள்' எனப் பொருள் கொண்டு திரிபுபடுத்திப் பிற்காலம் ஆரியர்கள் தமது எதிரிகளை

---

1. சுவாமி. விவேகானந்தர்., எழுமின், விழிமின், பக். 60-63.

அடிமைகளாக நடத்தியதாகவும் விபரிக்கப்பட்டாலும் 'தாசர்கள்' என்பது 'பக்தர்' என்றும், விஸ்வாசிகள் என்றும், எல்லையற்ற அன்பு பூண்டவர்கள் என்றும் கூடப் பொருள்படும். பாரதியார் மேல் அன்பு பூண்டதால் புரட்சிக் கவிஞர் தன்னைப் 'பாரதிதாசன் என்றார்; கண்ணன் மேல் அன்பு பூண்டதால் தன்னைக் கவிஞர் 'கண்ணதாசன்' என அழைத்ததும்; புரந்தர தாசர், கபீர்தாசர் என்பவை கூடப் பக்தியின் அடையாளப் பெயர்கள் என்பதும் மேற் குறிப்பிட்டவற்றிலிருந்து புலனாகும். அவ்வாறே 'லிங்கத்தை வழிபடும் தஸ்யூக்கள், என்றால் 'சிவனது' பக்தர்கள்' அல்லது சிவனில் அன்பு பூண்டவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். எனவே வேற்றுமையுணர்வுடன் படிக்கும் போது அவ்வுணர்வே தலைகாட்டச் செய்வதால் - ஞானிகளால் எழுதப்பட்டவை திருநூல்கள் என்பதாலும், அவர்கள் பேதத்தைத் தூண்ட மாட்டார்கள் என்பதனாலும் இந்து சமயத் திருநூல்களை அவற்றின் உள்பொருளை உள்ளபடி விளங்க முடியாத பலரும் மனம் போனபடி திரித்துப் பொருள் கூறுவதற்குச் சமய சாத்திர அறிவின்மையும்-வடமொழியறிவின்மையும் கூட ஒரு காரணமோ என ஐயுறத் தோன்றுகின்றது.

ஆதலால் வர்ணத்தின் தோற்றம் குணகர்ம பேதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே தவிர பிறப்பிலே உண்டானதல்ல எனப் பகவத் கீதையிலும் கண்ணன் கூறியுள்ளமை ஈண்டு கவனிக்கத்தக்கது,

**'சதுர்வர்ணம் மயாசிருஷ்டம் குணகர்ம**
**விபாக:**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முக்குணங்கட்கும் கர்மங்கட்கும் ஏற்ப நான்கு
வர்ணங்களை நான் படைத்தேன்'
(கீதை, 4:13)

'நான்கு வர்ணத்தவர் தொழிலும் அவரவர் இயல்பிலே
விளையும் குணங்கட்கு ஏற்றனவாம்'
(கீதை, 18;41)

இவ்வாறு ஆதிகாலத்திலே வர்ணம் என்பது மனிதனின் சுதந்திரத்தையும், அவன் இயல்பையும் பிரகிருதி இயல்பையும் வெளிப்படுத்தும் சொல்லாகவும் வழக்கத்திலே இருந்துள்ளது. மூன்று குணங்களும் ஒரு மனிதனிடம் கூடிக் குறைந்தோ சம அளவிலே அமைந்துள்ளன. அதனால் பிராம்மண, சத்திரிய, வைசிய சூத்திரத் தன்மையானது ஒவ்வோர் மனிதனிடமும் கூடிக் குறைந்தோ அல்லது சமஅளவிலோ காணப்படுவதால் எந்தக் குணம் அதிக அளவிலே தலைதூக்குமோ அச்குணம் மேலோங்கித் தோன்றுவதால் அந்தக் குணத்தின் இயல்பினை ஒட்டி ஒருவனை அது பிராம்மனனாகவோ அன்றிச் சத்திரியனாகவோ, சூத்திரனாகவோ ஆக்குகின்றது. அதனால் சத்வகுணம் மேலோங்கியோர் பிராம்மணர் என்றும் ராஜஸ் என்னும் போர்க்குணம் மேலோங்கியோர் சத்திரியர் எனவும், தாமச குணம் மேலோங்கியோர் சூத்திரர் எனவும் கூறப்படுவதுண்டு. இக்குணபேதங்கள் இன்று சாதியடிப்படையிலே காணப்படும் பிரிவினரிடையே மாறுபட்டுத் தோன்றுவதையும் அவதானிக்கலாம் பிராம்மண வர்ணத்தில் பிறந்த பலர் வைசியத் தொழிலையும், சூத்திரத் தொழிலையும் செய்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாக இருப்பதுடன், அரசாங்கப் பாதுகாப்புப் படையிலே இராணு வீரர்களாகவும் கடமையாற்று கின்றனர் என்பதை அனைவரும் அறிவர். இதனாற் போலும்; 'ஒருவன் கூலிக்காக ஒருவரிடம் வேலை செய்யும்போது சூத்திர வர்ணமும் அதே மனிதன் பொருள் கருதிச் சொந்தமாக வியாபாரம் செய்யும் போது வைசியத் தன்மையும், தீமையைக் கண்டித்து தண்டிக்கப் போராடும் போது சத்திரிய குணமும்' அதே மனிதன் தன்னைக் கடவுட் தியானத்திலே ஒருமைப்படுத்திக் காலத்தைக் கழிக்கும் போது பிராம் மணத் தன்மையும் அடைகின்றான். ஆதலால் இயல் பாகவே ஒருவன் ஒரு சாதியினின்றும் மறு சாதிக்கு மாறலாம். அதுவே இயற்கையுமாகும். அல்லாவிடில் விசுவாமித்திரர் பிராமணரானதும், பரசுராமர் சத் திரியரானதும் எப்படி நடக்கமுடியும்?' எனச் சுவாமி விவேகானந்தர் அன்று வர்ணத்தின் செயற்பாடுகளை எடுத்துக் காட்டியதும் கவனிக்கத்தக்கது.[1]

ஆதியிலே இருக்கு வேத காலம் முதல் சமூகத் திலே தொழிற் பிரிவுகளே வர்ணப்பாகுபாட்டிற்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் ஒரு சில இடங்களிலே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு பிரிவுகள் காணப்பட்டுள்ளன. அவர்களில் அறம் வளர்ப்பவர் அந்தணர் என்பதனை 'அந்தணர் என்பர் அறவோர்' எனவும்,

---

1. சுவாமி. விவேகானந்தர்; புதிய இந்தியாவைப் படைப்போம். பக். 8-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அந்தணர் நூற்கும் அறத்திற்கும்**
**ஆதியாய் நின்றது மன்னவன் கோல்'**

எனவும் மேலும் குறள் விரித்துக் கூறும். இவ்வாறு நான்கு தொழிற் பிரிவுகள் சமூகத்திலே காணப்பட்டனவே தவிர அவை சாதிப் பிரிவுகளாக வகுக்கப் பட்டதற்கு சான்றுகள் கிடைக்கவில்லை. அத்துடன்

**'பிறபொக்கும் எவ்வுயிர்க்கும்'**

என்ற திருக்குறள் வாக்கினுலும்

**'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'**

என்ற திருமந்திரக் குறிப்பினுலும்,

**'நல்லகுலமென்றும் தீயகுலமென்றும்**
**சொல்லளவல்லால் பொருளில்லை ......**
**தவம் கல்வி ஆள்வினை என்றிவற்ருல்**
**ஆகும் குலம்'**

என நாலடியார் கூறுவதிலிருந்தும் தமிழ் இலக்கியங்களிலும் ஆதிகாலம் சாதிவேற்றுமைகள் இடம் பெற்றிருக்கவில்லை என்பது புலப்படுகின்றது. அறிஞர் பிளேட்டோ (Plato) என்பாரும் 'குடியரசு' (Republic என்ற தனது நூலின் நான்காம் பகுதியிலே ஆளுகின்ற தத்துவஞானி, போர்க்குணம் படைத்த போர்வீரர், பாமரமக்கள் என்னும் மூன்று வகுப்புக்களைச் சுட்டுகின்ருர். இவ்வாறுதான் வேத கால ஆரம்பத்திலும் 'வர்ணம்' என்னும் தொழில் அடிப்படையான குலப் பிரிவுகளும் அவர்களின் தொழில்களும் அமைந்திருந்தன.

ஆனுல் - காலப் போக்கிலே 'வருணம்' என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் நிறத்தையும், பின்னர் தொழிலையும், குறிப்பதற்காக அமைக்கப்பட்ட நோக்கங்களும் நிலைமைகளும் மெதுவாக மாற்றமடையத் தொடங்கிய போது 'வருணம்' என்ற பிரிவானது பிறப்படிப்படையில் வளர்ந்து வந்து 'ஜாதி' என்னும் பெயரிலே சமூகத்தை ஆளத் தொடங்கியது. இன அடிப்படையிலும் ஒரளவு ஒழுக்கத்தின் அடிப்படையிலும் இரண்டாகப் பிரித்து மூன்று வர்ணத்தவரும் 'இருபிறப்பாளர்' எனவும் நான்காம் வர்ணத்தினர் 'இதற்குரியவர்கள் அல்ல' எனக் கருதும் நிலையுமேற்பட்டது. இவற்றிற் கெல்லாம் பிற்பட்ட வேதகாலத்திலே பிராம்மண இலக்கியங்களில் வளர்ச்சி பெற்ற யாகக்கிரியைகளும், சடங்குக் கொள்கைகளும் ஒரு காரணம் எனக் கருதலாம். ஏனெனில் இவற்றின் விளைவாக இச்சடங்குகளை ஆற்றிக் கொடுக்கும் பிராமண சமூகம் வலுவடைந்ததுடன், மன்னர் ஆட்சி மெதுவாக ஆரம்பமாகத் தொடங்கிய நிலையிலே யாகங்கள் பெருகியதும் அவற்றினை ஆற்றிக் கொடுப்பதற்குப் 'புரோகிதர்' என்ற வகுப்பினரும் இன்றியமையாது வேண்டப்பட்டனர். இதனுல் புரோகிதர்களது மதிப்பும் பெருகியது யாகங்களைப் புரோகிதராக இருந்து நடத்தும் பொறுப்பும் வேதங்களைப் பயிலும் கட்டாயமும் பிராம்மண வர்ணத்தவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இத்தகையதொரு பாரிய சடங்குக் கொள்கை வளர்ச்சியினுல் வேதங்களைப் பிராமணர் தவிர்ந்த ஏனையோர் படிக்கலாகாது என்ற தவறுன கருத்தும் சமுதாயத்திலே நிலைபெறலாயிற்று. இதனுல் புரோகிதத் தொழில் பரம்பரைத் தொழிலாக மாறும் நிலையும் ஏற்பட்டது. இம்மாற்றங்களையடுத்துப் பிராம்மண நூல்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்றவர்கள் 'பிராம்மணர்கள்' என்றும் பின்னர் இவர்கள் ஒரு வகுப்பினர் அல்லது சாதியினராக மாறினர் எனவும் கருதப்பட்டதுடன் இத்தகைய தொரு நிலைமையினைத் தொடர்ந்து பிறப்பினை அடிப் படையாகக் கொண்ட பிராம்மண சமுதாயம் உரு வாயிற்று எனவும் கொள்ள முடியும். ஏனெனில் பிறக்கும் போது யாருமே பூணூல், சிகையுடன் பிறப் பதில்லை. 'பூணூல்' என்ற சமய சாதனம் உபநய னம் என்ற 'கல்விநிலை' ஆரம்பத்தை அடுத்தே சமய சாதகரால் புனிதச் சின்னமாக ஒருவர்க்கு அணியப்படுவது ஆகும். உபநயனம் என்பது தர்ம தத்துவம் கற்றுக் கொள்வதற்காக ஒருவர் தக்க குரு விடமிருந்து பெறும் தீட்சையாகும். எனவே தான் முன்னோர் 'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்' எனப் பாடி வைத்தனர்.

**வர்ணம் பற்றிய விளக்கங்கள் :**

இப்படியாகத் தொழிலடிப்படையிலே உயர்ந்த சமுதாய நலன்களையும் சிறந்த லட்சியங்களையும் கொண்டமைந்த வர்ணமானது பிறப்படிப்படை யாக மாறிவருவது பலவகைத் தீமைகட்கும் காரண மாகிவிடும் என்ற அச்சம் அக்காலத்திலேயே அறிஞ ரிடையே, ஞானிகளிடையே காணப்பட்டமைக்கு பிராம்மண இலக்கியங்களை அடுத்து எழுந்த உபநிடத இலக்கியங்களிலேயே ஆதாரங்கள் நிறையக் கிடைக் கின்றன.

**'நல்லவழிகளிலே நடந்தோர் பிராம்மணராகவோ, சத்திரியராகவோ, வைசியராகவோ, பிறக்கின் றனர் தீயவழியிலே நடப்பவர்கள் சண்டா ளர்களாகவோ ஈனப்பிராணிகளாகவோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறக்கின்றனர்'**

(சாந்தோக்யம், 10 7)

எனவே பிறப்பு என்பது ஒருவரது நடத்தையைக் கொண்டே தீர்மானிக்கப்படுவதாக அறியப்பட்டுள்ளது. சத்திரியர்களான கேகய மன்னர் அஸ்வபதி என்பவர் சிறந்த ஞானி எனவும் (சாந். (5. 11. 4) விதேக மன்னர் ஜனகர் என்பார் யாகங்களை ஆற்றியவர் எனவும் (பிருகதாரணியம். (3 1. 1) காசிராஜன், அஜாத சத்ரு என்ற மன்னர்களின் புலமையைப் பற்றி சாந்தோக்கியமும் அறிவித்துள்ளன. பொருளைக் கொடுத்து ஞானம் பெறவந்த நீ அரசனுயினும் சூத்திரனே, (சாந் (4: 2. 3) எனக் கூறிய சாந்தோக்கிய உபநிடத்திலே உத்தாலகர் சுவேதகேது (சத்தியகாமன்) என்ற குரு சீடரது உறவும் பிரசித்தமானது. பிறப்பிலேயே குலம் தெரியாது வந்து உத்தாலகரிடம் கல்வி கற்ற சுவேதகேதுவின் அறிவினையும், உண்மை ஒளியையும் கண்ட குருவானவர் :-

**'உண்மையைத் தெளிவுபடக் கூறுபவனைப் பிராமணன் அல்ல என்று கூறுவது தகுதியல்ல. சத்தியந்தினின்றும் விலகாத நீ உண்மையிலே பிராமணனுவாய்'**

(சாந். 4.4. 1 – 5)

என விதந்துரைத்துள்ளார். அதனுல் சத்தியத்தை விரும்பிய சுவேதகேது 'சத்தியகாமன்' என்ற பெயருடையவனுனன். பிற்காலத்திலே எழுந்த இதிகாசங்களும் அறநூல்கள் எனப் போற்றப்படுவன. இராமாயணம் ஒழுக்கத்தினுல் உயர்ந்த வேட்டுவ குலத்தைச் சேர்ந்த குகனையும், வானர இனத்தைச் சார்ந்த அனுமானையும், இராட்சத குலத்தைச் சேர்ந்த வீபீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டணையும் இராமபிரான் தனது சகோதரர்களாக ஏற்றுக் கொண்டமையினை எடுத்துக்காட்டியிருப்பதை யாவரும் அறிவர். இராமபிரான் பிறப்பினால் சத்திரியர், அவரது குரு அந்தணரான வசிட்டர் என்ற பெருமகனார். கிருஷ்ண பகவானும் பாரதக் கதையிலே சத்திரிய குலத்திலே பிறந்து யாதவ குலத்திலே வளர்ந்தவர். அரசரானதும் மீண்டும் சத்திரிய வர்ணமாகின்றார். இவையனைத்தும் சாதி என்பது பிறப்பிலே அமைவதல்ல-ஒழுக்கத்தினால் அமைவதனையே எடுத்துக் காட்டுகின்றன எனலாம். 'புராதன இந்தியாவிலே தோன்றிய இரண்டு மாபெரும் மனிதர்களான கிருஷ்ணரும், புத்தரும் சத்திரியர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விருவரும் உயர் சாதி, கீழ் சாதி, எனப் பார்க்காது ஆண் பெண் வேற்றுமைகளின்றி ஒவ்வொருவருக்கும் ஆத்ம ஞானத்தின் கதவுகளைத் திறந்து விட்டவர்கள் இந்தியாவின் வருண ஏற்பாட்டு முறைகள் காலத்தின் போக்கினை அனுசரித்து முன்னேற்றப் பாதையிலே அவ்வப்போது வளைந்து தரக்கூடியதாகவே அமைந்திருந்தன. இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளிலே சத்திரியர்களாகவுள்ள வீரர்கட்குத் தான் மதிப்புண்டு இந்தியாவிலோ எனில் மிகவும் உயர்ந்த மரியாதை அமைதி ததும்பும் மனிதனுக்கு - அறிவுடன் ஒழுக்கத்துடன் கூடிய பிராம்மணருக்கு - கடவுள் நிலை எய்திய மனிதனுக்கு - உரியதாக இருக்கின்றது[1] என்பதனை இந்து சமய ஞானிகள் ஒரு போதும் மறந்ததில்லை.

---

1. சுவாமி விவேகானந்தர், புதிய இந்தியாவைப் படைப்போம், பக். 10-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிராமணர் வேதம் படிக்காது வேறு தொழில் செய்வாராகில் அவர்கள் சந்ததியோடு சூத்திரனுவர்கள்'

(மகாபாரதம்)

'நடத்தையில் பிராமணர் சூத்திரராவதும் சூத்திரர் பிராமணராவதுமுண்டு.

(மகாபாரதம்)

அந்தணத் தன்மைக்குக் காரணம் பிறப்பல்ல, சம்ஸ்காரம் சடங்குகள் அல்ல, வேதம் ஓதுவதல்ல, குலமுமல்ல, 'நல்லொழுக்கம்' ஒன்று மட்டுமாம்,'

(மகாபாரதம், வனபர்வம் - 313),

'உண்மை, ஈகை, பொறுமை, நல்லொழுக்கம், அமைதி, தவம், கருணை, என்ற நற்குணங்கள் எவருக்குண்டோ அவர்கள் பிராம்மணர், இவை பிராம்மணர் என்று சொல்லப்படுபவரிடம் காணப்படாதிருந்தால் பிராம்மணன் பிராம்மணனுமல்ல'

(பாரதம், வனபர்வம், 180 — 21, 25, 26

இவையனைத்தும் மகாபாரதம் வனபர்வத்திலே தருமரால் கூறப்படும் அறிவுரைகளாகவுள்ளன. இதே போன்று பாகவதத்திலும் காணலாம்.

'தன்பிறப்பினுலோ குலத்தினுலோ அல்லாமல் ஒருவர் தன் செயல்களால் பிராம்மணராவார். ஒரு சண்டாளன் கூடத் தூய பண்பாளனுயிருந்தால் அவனும் பிராம்மணனே.'

(பாகவதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



**'பிறப்பால் அமைந்த வர்ணம் வர்ணமல்ல, குணத்தினால் அமைந்த வர்ணமே முக்கியமானது'**

(பாகவதம், VII. 9, 35)

இப்படியான பல குறிப்புக்களிலிருந்தும் ஆதிகாலம் சமூதாய நன்மைக்காவும் வளர்ச்சிக்காகவும் ஏற்படுத்தப்பட்ட வர்ணமானது உருமாறிப் போவதுடன்; எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ அதற்குரிய லட்சியத்தையும் பிறப்படிப்படையிலே அமைந்த சாதி முறை குழப்பிவிடுமோ என்பதில் அன்றய ஆத்ம ஞானிகட்கிருந்த தீர்க்கதரிசனமும, மக்கள் மேலுள்ள பரிந்துணர்வும் இத்தகைய இதிகாச காவியங்கள் வாயிலாக நன்ருக உணர்த்தப்பட்டுள்ளன.

ஏனெனில் அந்தந்த வர்ணத்திற்குரியவர்கள் அந்தந்த வர்ணத்திற்குரிய தொழிலை மேற்கொள்ளல் என்பது அந்தக் காலத்திலே வர்ண தர்மத்திற்குரிய விதியாக இருந்தது. அத்துடன் கல்வி என்பது குருகுலக்கல்வி முறையினை மட்டுமே கொண்டிருந்த ஆதி காலத்திலே போக்குவரத்து வசதிகள், உயர் கல்வி அமைப்புகள் தோன்ருத அந்த நாளிலே படித்தவர்கட்கு அதிக மதிப்புக் கொடுக்கப்பட்டதால் வேதக் கல்விபயின்ற அந்தணருக்கு மிகுந்த கௌரவமளிக்கப்பட்டது. பிராமண குருமார்கள் ஏனைய சமூகத்தவர் அனைவருக்குமே தமது கல்வியறிவினுலும் ஒழுக்கத்தினுலும் வழிகாட்டுபவர்களாக விளங்கினர். அதனுல் உலகத்தாரின் நலன்களுக்கும் சேவைகட்குமாக கடமையாற்றும் அவர்கட்கு ஏனைய சமூகத்தவர் உதவ வேண்டும் என்ற அடிப்படை நல்லெண்ணத்தினுல் ஞானிகள் இப்படி ஒரு அமைப்பினை ஏற்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர்களும் அவ்வாறே மன்னர் ஆட்சிக் காலங்களில் வில் வித்தை, போர்க்கலை, சமய சாத்திரக் கல்வி என்பவற்றிலே பிராமணர்களை அரசவை ஆச்சார்யார்களாக நியமித்து பெரிதும் போற்றி வந்துள்ளனர். பிராமண வர்ணத்தவர்களால் ஆற்றிக் கொடுக்கப்படும் யாக கர்மானுஷ்டானங்களால் லோக சேமம் பாதுகாக்கப்பட்டது. வேத மந்திரங்களை உதாத்தம், அனுதாத்தம் ஸ்வரிதம் என்ற முறைகளை அனுசரித்து அவற்றை ஓதக் கூடிய திறமை, ஆத்மபலம் என்பன பிராமணர்களிடம் வளர்க்கப்பட்டிருந்தது. மந்திரங்கள் கொஞ்சம் கூட ஸ்வரம் தப்பிப்போகக் கூடாது ஸ்வரம் தப்பினால் விபரீத பலன்கள் உண்டாகும். எவ்வாறெனில் வானொலியிலே வேவ்-லெங்த் (Wave Length) மாறினால் பலனும் மாறிவிடும் என்பதனைப் போலவே இதுவும் என காஞ்சி ஆச்சார்ய சுவாமிகள் அழகாக விளக்கியுள்ளார்கள். அட்சர சுத்தம் மாறினால் எத்தனை விபரிதம உண்டாகும் என்பதற்கு வேதத்திலே தைத்திரிய சம்கிதையிலே ஒரு கதை கூட இருக்கின்றது. இந்திரனை வதைக்கக் கூடிய பிள்ளை வேண்டுமென துவஷ்டா மந்திரம் சொல்லி ஹோமம் செய்யப் போய் வேத அட்சர உச்சரிப்பில் ஏற்பட்ட தவறினால் 'இந்திரனால் வதைக்கப்படக் கூடிய பிள்ளை வேண்டும்' என வரம் கேட்டதாக மாறிவிட்டதெனக் கூறப்பட்டுள்ளது. மந்திர உச்சாடனப் பிழையினால் ஏற்பட்ட விபரீத பலனே இது என அக்கதை உணர்த்தியது அதற்கு நல்ல உதாரணமாகும்.[1]

---

1. காஞ்சி காமகோடி ஆச்சார்ய சுவாமிகள், தெய்வத்தின் குரல், வானதி பதிப்பகம், சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வேதத்தில் பயிற்சி பெற்ற அந்தணர்கட்கு அவ்வுரிமையினை இந்து ஆலயங்கள் காலம் காலமாக வழங்கி வருகின்றன. ஆதலால் வேத ரக்ஷணத்தை ஆயுட்காலத் தொழிலாகக் கொண்டு வாழும் அந்தணர்கள் வேத சப்தங்களைக் காப்பாற்றுவதுடன் ஜன சமூகத்தையும் உலகம் முழுவதையும் அவற்றின் மூலம் ரட்சிக்க வேண்டுமென இந்து சமுதாயம் அவர்களிடம் எதிர்பார்க்கின்றது. ஆதலினால் அப்படிப்பட்ட உயர்ந்த ஸ்தானத்திலிருப்பவர்களை பெரியவர்களாகவும் கௌரவிப்பதால் ஏனைய வர்ணத்தவர்கள் செய்யும் தவறுகளை விடப் பிராமண வர்ணத்தார் செய்யும் தவறுகளை சமூகம் கூர்ந்து கவனிப்பதால் பிராமண வர்ணம் ஏனைய வர்ணங்களை விட மிகுந்த கண்டனத்திற்குள்ளாகவும் நேரிடுகிறது. இச்செயல்களால் உண்மையான ஒழுக்கமுள்ள அந்தணர்களது மனமும், இந்து சமய ஞானிகளது நெஞ்சமும் புண்படும்படியாகி விடுகின்றது. எல்லா வர்ணத்தவரும் தான் தவறு செய்கிறார்கள்; பிராமண வர்ணம் மட்டும் ஏன் கண்டிக்கப்படுகிறதென்ற கேள்வி எழுகின்ற போது - 'காய்த்த மரம் தான் கல்லடி படும்' என்பது போல பிறர்க்கு வழிகாட்டுபவர்கள், உயர்ந்தவர்கள் என மதிக்கப்படுபவர்கள் செய்யும் தவறுகள் சமூகத்திலே பெரிதும் கண்காணிக்கப்படுகின்றமையே இதற்குக் காரணம் எனலாம்.

**வருணப் பிறழ்ச்சி:**

இவ்வாறு வேத நூல்கட்கிசைந்த வர்ண. தர்மம் சமுதாய நலன்களையும் உலக நன்மையையும் கவனத்திற் கொண்ட ஒரு ஏற்பாடாக விளங்கிய போதும் துவாபரயுக முடிவில் வர்ணதர்மம் வாழ்வில் நெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிய பலமாற்றங்களை உண்டாக்கியது. அதன் விளைவாக கலியுக ஆரம்பத்திலே வர்ணஸங்கரமம் என்னும் 'சமூகத் தாழ்வு' ஏற்பட்டு இந்து சமுகம் வேத நெறிக் கொவ்வாத சாதிப் பிரிவுகளாகப் பாகுபட்டு அனுச்சாரங்கட்கும் அறத்தின் வீழ்ச்சிக்கும் அழிவிற்கும் காரணமாயிற்று. 'சூத்திர நிலையில் உள்ள உயிர்த்தன்மை பிராமண உடல்களில் உறைந்தபோது இந்து தருமத்திற்கே படுமோசமான வீழ்ச்சியுண்டாயிற்று.[1]. பிற்காலத்தில் ஏற்பட்ட வர்ணக் கலப்புக் காரணமாக வேத நூல்கட்கும் இந்து தர்மத்திற்கும் ஒவ்வாத சாதிகளும், உபசாதிகளுமாக இந்து சமுதாயம் பிரிந்து போனது. பொதுவாக ஜீவான்மாவின் குழந்தைப் பருவமும் காளைப்பருவமும் சூத்திர நிலைக்கு ஒப்பானதாகும். வைசியத் தொழில் இரண்டாம் நிலையான ஆன்மாவின் நடுத்தர பருவமாகும். தார்மீகம், சாத்திரக் கல்வி, பொருளீட்டல் என்பன நடுத்தர நிலையின் பிற்பாதியான சத்திரியத் தன்மையினையும், ஆன்மாவின் அமைதியும், அநுபவமும், அறிவு சான்ற முதிர்ந்த ஞானமும் கூடிய சான்றோர் நிலை பிராம்மண நிலை' எனவும் போற்றப்படும்.[2] ஆக வர்ணக் கலப்பு ஏற்பட்டதும் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சாதி முறையும் பரம்பரைத் தன்மையும் ஆதிக்கம் செலுத்த முற்பட்ட போது இந்து சமூகத்தின் அழகான வர்ண தர்மமானது சீர்குலைந்து, அது இந்து சமயத்

---

1. சுவாமி பரமேஸ்வரானந்தா., ஹிந்து தர்ம பரிச்சயம், ஸ்ரீ கிருஷ்ணமந்திர், கன்யாகுமரி, 1983, பக். 95
2. மேற்படி, பக் 90.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் கர்மக் கொள்கையுடன் இணைக்கப்பட்டு அதற்குச் சமயவெறி என்ற சாயம் பூசப்படுவதாயிற்று.

**வர்ணமும் சாதியும் :**

'வர்ணம், ஆச்சிரமம் என்ற இரண்டு சொல்லுக்கும் தர்மம் என்பது பொதுவானது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கொள்கையே வர்ணத்திற்கு முற்றிலும் முரண்பாடானது. எல்லா வர்ணங்களும் சமமானவை. ஏனெனில் ஒவ்வொரு வர்ணமும் ஒன்றுக்கொன்று துணையானவை. ஆனால் இன்று வர்ணங்களின் மாற்றமானது படிப்படியாக உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பதனையே காட்டுகின்றது. இந்த நிலையானது வர்ணதர்மத்தின் ஆதிநோக்கங்களையே பயங்கரமான முறையில் 'பாழ்படுத்துவனவாக உள்ளன'[1] எனகாந்தியடிகளும் மனம் வருந்திக் கூறியுள்ளார். 'நான்கு வர்ணப் பிரிவுக்கும் வக்காலத்து வாங்கும் நான் அது மனித குலத்திற்கு எதிராகப் பயன்படுமானால் அதற்கு அனுசரணை எனக் கருதும் சமயத் திருநூல்களையும் தள்ளி வைக்கத் தயங்க மாட்டேன்' எனவும் மகாத்மா மேலும் சுட்டிக் காட்டுகின்றமை கவனிக்கத்தக்கது.

வர்ண தர்மம் சாதி முறை ஏற்பாடான பின்னரும் கூட அவற்றிலே காணப்பட்ட நல்ல அம்சங்களை எல்லாம் பலரும் எடுத்துக் காட்டத் தயங்கவில்லை. மேற்கு நாடுகளில் காணப்பட்ட வர்க்கப் பிரிவுகள், குலப்பிரிவுகள், குழுக்கள் என்பவற்றிற்குப் பதிலாக இந்தியாவிலும் வேறு சில கீழ் நாடுகளிலும் அவை 'சாதி' என்ற உருவத்தைப் பெற்றுக் கொண்டன

---

1. Gandthi, Mahathm ι, Harojai 28.9 1934.

ஆகலாம். 'இந்தியாவிலே சாதி என்னும் கீழ்படிகளில் இருந்து சாதிகளற்ற மேல் நிலையடையப்படுகின்றது. இந்தியாவிலே 'பிராம்மணன்' என்பவன் மனித சமுதாயத்தின் இலட்சிய புருஷனுவான் - இலக்கியமாவான். ஒவ்வொரு மனிதனையும் இவ்வாறு இலட்சிய புருடனுக்குவது' - பிராம்மணத்துவம் உள்ளவனுக்குவது தான்-சாதி ஏற்பாட்டின் நோக்கமாகும். சாதி ஒரு வழக்கமே தவிர வேறல்ல. இந்திய அரசியல் ஸ்தாபனங்களிலிருந்து வளர்ச்சி பெற்றதே சாதியாகும். அதனைப் பரம்பரையாக வரும் 'தொழிற் சங்க முறை' எனலாம். சாதிமுறை சமூக ஏற்பாடே தவிர அதற்கும் சமயத்திற்கும் வெளிப்பார்வைக்குத் தொடர்புள்ளது போலத் தோன்றினுலும் உண்மையில் அவ்வாறில்லை. மக்களை ஒரே சமூகமாகக் காப்பாற்றி வருவதற்காக அவை அவசியமில்லை என்ற நிலைவரும் போது சாதிகள் இயற்கையாகவே மரணமடைந்து மறைகின்றன. சாதி அமைப்பைப் பொறுத்தமட்டிலேயுள்ள விவாதங்களிலே எந்தக் கட்சியிடமும் எனக்குப் பாரபட்சம் கிடையாது ஏனெனில் சாதி என்பது ஒரு சமுதாய விதி, அது குண கர்ம பேதத்தை ஒட்டிய ஒரு அமைப்பு என்பதனை நான் நன்ருக அறிந்திருக்கின்றேன்' என்ற விவேகானந்தர் அவர்களின் சாதி ஏற்பாடு பற்றிய கணிப்பினை அனைவரும் அறிநதிருப்பது நல்ல பயனளிக்கக் கூடிய ஒரு அம்சமாகும். சாதிகளற்ற ஒரு சமய நெறியே பெரிய புராண அடியார்கள் காலத்திலும் நிலவியது. அறுபத்துமூன்று நாயன்மார்களையும் கூடப் பிராம்மணர், சத்திரியர், வைசியர், வேளாளர் மற்றும் அமைப்பிலும் கூடப் பகுத்துப் பார்க்கலாம். 'எல்லாச் சாதியிலிருந்தும் எல்லா வாழ்க்கை நிலையிலிருந்தும் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாப் பொருளாதாரப் பிரிவிலிருந்தும் வந்தவர்களே நாயன்மார்கள்' எனவும் 'ஒழுக்கம் தந்த சீலத்தால் விரைவிலே நாயன்மார்கள்' தெய்வீக நிலைக்கு உயர்த் தப்பட்டனர். அவர்கள் அனைவரது திருவுருவங் களும் ஆலயங்களிலே இடம் பெற்றன. சங்கரர், சோமநாதகவி போன்ற பிற மாநிலப் பெரியோர் களாலும் நாயன்மார்கள் போற்றப்பட்டனர்' என் பதனை வடமொழிப் பேராசிரியர் டாக்டர். கோ. சுந்தரமூர்த்தி அவர்களும் சுட்டிக் காட்டியுள்ளமை யானது[1] இந்து சமயம் வர்ணப் பிரிவை வற்புறுத்தி யதே தவிர சாதி அமைப்பின் ஏற்றத் தாழ்வுகளை யல்ல என்பதும் இவற்றின் வழி புலப்படுகின்றது.

ஆதலால் எந்தத் துறவற மரபுமே சாதிவேற்று மையைப் பாராட்டவில்லை. துறவிக்கும் அவர்களது பூர்வாசிரமப் பெயர்கட்கும் எந்தத் தொடர்பும் காட்டப்படுவதில்லை. இது இந்திய மரபாகும். வண்டிக்கார ரைக்வனுக்கும், பணிப்பெண்ணுக்கும் பிறந்த சத்தியகாமனும், சத்தியவதி என்ற மீனவப் பெண்ணுக்குப் பிறந்து மகாபாரதம் எழுதிய வியாச பகவானும் கூடத் துறவிகளாவார்கள். ஞானிகளா விளங்குபவர்கள் எப்போதும் உண்மைகளையே கூறு வார்கள். அவர்கட்கு இந்த உலகத்திலே எந்தத் தேவைகளுமிருப்பதில்லை - யார் தயவும் வேண்டப் படுவதில்லை ஆதலால் மக்கள் நலம் ஒன்றையே மன திலே கொண்டு சாதிகளைப் பற்றியும் கவலைப்படாது

1, டாக்டர். கோ., சுந்தரமூர்த்தி, சைவசமயம், பக். 23, 91.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலட்சியங்கள்' எனப்பட்ட உயர்கருத்துக்களை எல்லா மட்டத்திலும் போதித்து வருபவர்கள் அவர்களாவார். ஆனால் பின்வந்த அரசியல் பிரசாரகர்களும், மற்றும் படித்தவர்களும் கூட அத்தகைய பெரியோர்களது கருத்துக்களைத் திரித்தும், வளைத்தும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி - அவற்றைச் சொன்னவர்களுடைய சாதிகளைப் போதித்தனரே தவிர - அவர்களால் போற்றப்பட்ட கருத்துக்களை மதிப்பிழக்கச் செய்தும் வந்தனர். சாதி ஏற்பாட்டு முறைகள் யாவும் இந்து மதத்தின் அநாகரிக வெளிப்பாடு என்ற கருத்தினைத்தான் இந்து சமுதாயத்திலே பலராலும் விதைக்க முடிந்ததே தவிர இந்து சமயத்தின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டினை உள்ளது உள்ளபடி விளக்கிச் சொல்பவர்கள் அரிதாகவேயிருந்தனர். சொல்லப்போனால் இந்துக்கள் என்று சொல்பவர்களே இந்துமதத்திற்கெதிராகச் சாதிப் பிரச்சனைகளை வளர்த்துக் கொடுக்கும் துரதிஷ்டமான ஒரு சூழ்நிலையும் இத்தகைய விளைவுகளால் தோன்றியதெனலாம். இது பற்றி மேலும் சுவாமி விவேகானந்தர் அவர்களது அபிப்பிராயங்களைத் தொடர்ந்தும் எடுத்துக் காட்டுவது நல்லதென்றே தோன்றுகின்றது. சுவாமிகளது மனவேதனையானது பின் வரும் குறிப்புக்களில் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

'இந்து மதத்தைப் போல பூவுலகிலே உயர்ந்த மதமுமில்லை - இந்து மதத்தைப் போல நடைமுறையிலே ஏழைகளை நசுக்கும் மதமும் வேறொன்றில்லை. சமயத்துறையிலே சாதிகளே கிடையாது. இது வெறும் சமூக ஏற்பாடுதான். ஆகவே மதத்தைக் குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிப் பயனில்லை - மக்களைத் தான் குறை சொல்ல வேண்டும். மக்களும் விரிவான சடங்குகள் - தத்து வங்கள் இவற்றைக் கண்டு மலைத்துப் போனார்கள். அந்த விரக்தி நிலையிலே கூட்டம் கூட்டமாக உலகா யதப் போக்கினைப் பின்பற்றத் தொடங்கினர். இது வே சாதியின் உயர்வு தாழ்வு பற்றிய கருத்துக் களின் ஆரம்பமாக அமைந்தன. முக்கோணப் போ லிருக்கும் சடங்கு - தத்துவம்-உலகாயதம் என்ற மூன் றும் இன்றும் தீராத பிரச்சனைகளாக இருந்து வரு கின்றன. இப்போது நடைமுறையிலுள்ள சாதிகள் உண்மைச் சாதிகளல்ல[1]

பொதுவாக சாதி மோதல்கள் எனப்படும் கண சமுதாயங்களிடையிலும் மற்ற நாடுகளைப் பிடிக்க முயன்ற ஆட்சியாளர்களிடையிலும் கூட மோதல்கள் உருவாகின. வேறு சில நாடுகளில் உருவாகிய அடி மை முறைகள் இல்லாவிட்டாலும் வர்க்க முரண்பாடு களும் வர்ண அமைப்பிலே பிரதிபலிக்கத் தொடங் கின. சூத்திர வர்ணத்தின் பொதுச் சொத்தாக இருந்த கால் நடைகளும், நிலங்களின் பெரும் பகுதி யும் சில தனிக் குடும்பத்தவர்களின் கட்டுப்பாட்டி லே வந்தன. அந்த வர்ணத்தின் உழைப்பின் மூலம் வந்த செல்வங்களைத் தமக்கெனச் சொந்தம் கொண் டாடும் ஒரு பகுதியினரும் தோற்றம் பெற்றனர் சமண, பௌத்த இலக்கியங்களில் இத்தகைய செயல் களினால் வெறுப்பும், பாதிப்புமடைந்த சிலர் உயர்ந்த வர்ணங்களில் இருந்தே வெளியேறியதன் அடையாள

---

1. சுவாமி. விவேகானந்தர், புதிய இந்தியாவைப் படைப்போம், பக். 25-26.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இந்த இழிநிலையினைப் பயன்படுத்திச் சமண, பௌத்தமாகிய புறச்சமயங்களும் தோற்றம் பெற்றன. ஆகவே மிதமிஞ்சிய சடங்குக் கொள்கையும், சாதிக் கட்டுபாடும், ஏற்றத் தாழ்வுகளும் உயர் வர்ணங்களைச் சேர்ந்தவர்களாலேயே எதிர்க்கப்பட்ட போது - மக்களும் அதிக ஆர்வம் கொண்டு சமணம், பௌத்தம் போன்ற புதிய மதங்களை வரவேற்றனர். ஆயினும் மகாவீரர், புத்த பெருமான் போன்ற பெரும் மகான்களாலும் கூட சாதியமைப்பிலே கட்டுண்ட சமுதாயத்தை முற்று முழுதாகத் திருத்த முடியாமற் போனது ஏன் ? என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது. இதற்கு சத்திரிய வர்ணத்தின் சக்தியும், வைசியரது வியாபார சக்தியாகிய பணமும் அவற்றின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட ஆதிக்கத் தன்மையும்தான் இவைகள் மறைவதற்குப் பதில் வளர்த்து விடப்பட்டன எனவும் ஒரு கருத்துக் காணப்படுகின்றது. காரணம் இத்தகைய சக்தி படைத்தவர்களில் பலர் இந்த மதபோதகர்களின் சீடர்களாகி மதப்பிரசாரத்திற்கு உதவுவது போன்று மறைமுகமாக வேறு சில தனிக்குழுக்கள் சிலவற்றை வளர்த்து விடவும் மூலமாயினராதலால் புறச்சமயங்களின் உன்னதமான நோக்கமும் தார்மீக சிந்தனையும் கூட அத்தகையோர்களை மாற்ற முடியாமற் போனது.[1]

அது மட்டுமன்றி இந்து சமயத்திலே புனித லட்சியமாகக் கருதப்பட்ட பிராமண வர்ணத்தினரின்

---

1. இ. எம். எஸ்., நம்பூதிரிபாட், இந்திய வரலாறு, பக். 52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாங்கும் பொருள் தேடும் விடயத்திலே மெது வாக மாறத் தொடங்கியது. சமய குருமார்கள் என இந்துக்களால் பெரிதும் போற்றப்பட்ட புரோ கிதர்களிடம் காணப்பட்ட சமயத்திற்கு மாறான செயல்களால் மக்கள் இந்து சமயத்தை வெறுத்துப் புறச்சமயங்கட்கு மாறும் சூழ்நிலையும் உண்டா னது. இந்த மாற்றம் பற்றி விவேகானந்தர் சுட்டிக் காட்டும் போது; 'இந்திய நாட்டின் எல்லாத் தீமை கட்கும் அடிப்படை வேராக அமைந்தது ஏழை களின் இழிநிலையும் புரோகிதர்கள் எனப்பட்டோ ரது ஆதிக்கமும் சேர்ந்து பொது மக்களைக் கீழே தள்ளி மிதித்து வந்தது தான் அதன் காரணமாக ஏழை மக்கள் தாமும் மனிதப் பிறவிகள்தாம் என்ற நிலையினையும் மறந்தே போயினர். தேசத்தின் கல்வி அறிவாற்றல், அனைத்தும் ஆணவமும் அரச ஆணையு முடைய ஒரு சிறுபான்மையோர் வசம் அகப்பட்டுக் கொண்டது தான் இந்துப் பண்பாட்டு வீழ்ச்சிக்குப் பிரதானமான காரணமாகும். புரோகிதத் தொழில் இந்து சமயத்திலே பாமர மக்களை வதைக்கின்ற ஒரு தொழிலாக மாறியது. பிராமணர்களும் சத்திரியர் களும் செய்த கொடுமையானது கூட்டு வட்டியோடு மறுபடியும் அவர்கள் தலையிலே விழுந்திருக்கின்றது. ஆயிரமாண்டுகளாகவுள்ள அடிமைத்தனமும், இழி நிலையும் அவர்களது கர்ம வினையின் பயனேயாகும். புரோகிதத் தொழிலைவிட மேலானது எல்லோருக்கும் சிறந்த உணவும் நல்ல கல்விக்குரிய வசதி வாய்ப்பு களும் தரப்படுவதேயாகும் வயிற்றுக் கடவுள் பூசை யே முதன்மையான தேவையாகும். மக்கட்கு முத லில் உணவு தரப்பட வேண்டும். பின்னர்தான் ஆன்ம போதனை செய்ய வேண்டும். பசியால் வாடும் மக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் முன் எந்த மத போதனையும் அவர்கள் பசியைப் போக்கிவிடாது' என்று சுவாமிகள் கூறுமிடத்து மேற்கு நாடுகளின் மதப் பிரசாரகர்கள் இந்துக்களை எப்படி வசப்படுத்த முடிந்தது என்ற உண்மையானது நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. பிராமண வர்ணத்தைச் சுவாமிகள் சாடவில்லை. புரோகிதத் தொழிலால் நன்மைகட்குப் பதிலாக ஏற்பட்ட தீமையான எதிர்விளைவுகளும், பஞ்சமுமே இதற்குக் காரணம் மட்டுமல்ல - பஞ்சப்பட்ட மக்களை அனாதை ஆச்சிரமங்கள், சேவா நிலையங்கள், இலவச மருத்துவ முகாம்கள் மூலமாகச் சேவை செய்து அவர்கள் பசி போக்கி சாதி நீக்கி அம் மக்களைத் தம் பக்கம் கிறிஸ்துவ சமயம் ஈர்த்துக் கொண்ட போது இந்துக்களின் பாராமுகமும், அக்கறையின்மையும் கூட ஒரு காரணமென்பது இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து அறிய முடியும்.

'இந்தியாவிலே புரோகிதராதிக்கத்திற்கு மிகவும் உட்பட்ட பகுதி அக்காலத்திலே திருவாங்கூர் எனலாம். நிலத்தின் ஒவ்வொரு சிறிய பகுதியும் கூட இங்கு பிராமண குலத்தவர்க்கே சொந்தமாகவுள்ளது. திருவாங்கூரில் வாழும் கால்ப்பகுதி மக்கள் கிறிஸ்தவர்களாகி விட்டனர். இந்துக்களோ இந்து மத குருமார்களோ மக்களிடம் அனுதாபத்துடன் நடக்காததன் விளைவு ஆயிரக்கணக்கான பறையர் குல மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இந்த நிலை பசிக் கொடுமையால் மட்டும் ஏற்படவில்லை. இந்துக்களிடமிருந்து ஒரு வகையான அனுதாபமும் கிடைக்காமற் போனதே இத்தகைய நிலைக்குக் காரணமாகும் என்பதனைப் பார்க்குமிடத்து 'ஆன்ம நேயம்' என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது இந்துக்களிடையே இல்லாமற் போய்விட்டதோ என்று அன்றைய சூழ்நிலை நம்மை வேதனைப்படுத்துகின்றது. தருமத்தையும் அன்பையும் போதிக்கும் இந்து சமயத்திடம் செயல்முறையிலே அவற்றைக் காண்பதே அரிதாகி விட்டதை இந்நிலை உணர்த்துகின்றது. 'அன்பே சிவம்' என்று போதித்த இந்து மதத்திலா இத்தகைய இழிநிலை என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. எத்தனை கடவுளர் வடிவங்கட்கு உணவு படைக்கின்றோம் - தவறில்லையாயினும் உயிருடன் உள்ள மக்களிடம் ஏன் அந்தப் பரிவு தோன்றவில்லை! சமயத்திற்கொரு கடவுள், சாதிக்கொரு கடவுள், வீட்டுக்கொரு கடவுள், ஆளுக்கொரு கடவுள் எனக் கடவுளர்களையும் கல்லாக்கிக் கொண்டு போகின்றோமே தவிர மனிதர்களைக் கடவுளாக்கும் இயல்பினை எப்படியோ மறந்துவிட்டோம். இதனுல் தான் உருவக் கடவுட் கொள்கையினைக் கூட அதன் உட்பொருள் விளங்காது பிற மதத்தவரும் கண்டனம் செய்யும்படியான இழிநிலையேற்பட்டது. உருவக் கடவுட் கொள்கையின் நோக்கம் பாழ்படுத்தப்பட்டு இப்படியான வியாபார நிலைக்கு வந்தமையினையும் சுவாமிகள் கண்டிக்கத் தவறவில்லை. 'உருவமற்ற கடவுள் என்ற கருத்துக் கோவில்கள், சேர்ச்சுக்களில் உள்ள மதகுருமாரின் தொழிலை நீக்கிவிடுகின்றது இந்தியாவிலோ அனேக பகுதிகளில் பஞ்சம் நிலவுகின்றது. ஆனுல் இங்குள்ள கோவில்களில் ஒரு அரசனை மீட்கும் அளவிற்கு பணமும் நகையும் உள்ளன?[1] என்ற நிலையினைப் பார்க்கும்போது அன்று

---

1. சுவாமி. விவேகானந்தர், செயல்முறை வேதாந்தம் 'பக். 44-45.

ஞானியர் உள்ளம் வேதனைப்பட்டு உருவக் கடவுள் கொள்கையினையே மாற்றுமளவிற்கு போதனைகள் சென்றுள்ளன. ஆனால் இன்று ஆலயங்கள் பலவும் ஆச்சார்யார்களின் மத போதனைகளால் தார்மீக சிந்தனையுடன் செயல்படுவதையும் பல இடங்களில் நாம் காணமுடியும். ஆயினும் இன்னும் நன்கு முன்னேற இடமிருக்கின்றதென்றே கூறலாம்.

ஆகையினால் சாதியும் தீண்டாமையும் இந்தியாவின் சாபக்கேடாக இருப்பதனால் இக்கொடுமையினைத் தவிர்த்து இந்தியாவைப் புனிதப்படுத்துவதே காந்தியடிகளதும் முக்கிய போதனையாக இருந்தது. சமத்துவம், ஏகத்துவம், ஒருமைப்பாடு என்ற சொற்களால் எப்போதும் நன்மையே பிறந்திருக்கின்றது. 'சாதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குரிய வழி மேலேயுள்ளவர்களைக் கீழே இழுப்பதல்ல, கீழ்ச்சாதியினரையும் மேல் சாதியாக்குவதே பிரச்சனை தீர்வதற்குரிய ஒரே வழியாகும். இலட்சியத்தின் மேற்படியிலே பிராமணத்துவமிருக்கின்றது. கீழ்படியில் சண்டாளத்தனமிருக்கின்றது. சண்டாளத்துவத்தை நீக்கி பிராம்மணத்துவத்தை அடையச் செய்வதே இந்து தர்மத்தின் தலையாய பணியாகும். தாழ்ந்த மக்களும் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வழிவகுப்பதன் மூலம் சாதியை நீக்கி சமத்துவத்தை ஏற்படுத்த முடியும்.[1] நீதியற்ற சாதி நீங்க வேண்டுமெனில் ஆன்மீக அறிவென்ற ஜோதி

---

1. சுவாமி விவேகானந்தர், புதிய இந்தியாவைப் படைப்போம். பக். 69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யை எல்லோரிடத்தும் ஏற்றி வைக்கும்படி சமய போதனைகள் அமைந்துள்ளதை நினைவூட்ட வேண்டும். கடவுள் என்றால் சத்தியம், அன்பு, அறம் இம்மூன்றின் தொகுப்பாகும். ஆண்டவனின் அம்சமான மனித உயிர்கட்குள் நேயத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்து உயிர்கட்குள் பேதமின்றிச் சேவை செய்வதே வழிபாடு தொண்டு — சமதர்மம் இவற்றின் பொருள் எனலாம். நமது வழிபாடு மரபிற்கும் பண்பாட்டிற்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். 'கதியற்றவர்க்குத் தொண்டு செய்வதே சமயம்' என்றார் காந்தியடிகள்.

உலக வரலாற்றை நிர்ணயிக்கும் காரணிகளாகப் பொருளாதார சக்திகள் அமைகின்றன. அவ்வாறே சமூகவியல் வரலாற்றிலே இலக்கிய, சமய, இலட்சியக் கருத்துக்களும் அமைந்திருக்கின்றன. சட்டம், அரசியல், அறிவியல் என்பவற்றின் வளர்ச்சிக்குப் பொருளாதார அமைப்பே அடிப்படை உண்மையாகும். பணம் இல்லாவிட்டால் வாழ்க்கையில்லை – ஆனால் பணம் மட்டுமே வாழ்க்கையாகி விடுவதில்லை. எனவே இலட்சியங்களை வளர்த்துச் செயற்படுத்துவதற்குப் பொருளாதார சக்திகள் தேவையானவை. ஆனால் பொருளாதார சக்தியால் மட்டுமே அவற்றினை வளர்த்துவிட முடியாது. நமது பொருளாதார அமைப்புகளால் வறுமையும் கூட வளர்கின்றது. இல்லாமை' என்ற நெருப்பினால் ஏற்படும் அழிவுகள்தான் அனேகம். 'இல்லாமை' என்பது முதலில் பசிப்பிணியாய் உருவெடுத்து முதற்கண் தனிமனிதனையும் அடுத்து நாட்டின் பண்பாட்டையும் அழித்து விடுவதால் சமூகவியல் வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் 'பசிப்பிணி' போக்குவதனை முதற்கண் 'பேரறமாக' மேற்கொள்ள வேண்டும. 'அற்றார் அழிபசி தீர்த்தல் அருந்தவர் கடன்' மட்டுமல்ல 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தை அழித்திடுவோம்' எனப் பாரதியாரும் இந்த இழிநிலை நீங்க வேண்டும் என்பதனைத் தான் இப்படிக் கூறினார். காந்திய மாற்று முறையாகிய சர்வோதய அமைப்பானது எல்லோரது நலன்கட்காகவும் அமைந்த வகுப்புகளற்ற சமுதாய மாற்றத்தை வரவேற்கின்றது.

19ம் நூற்றாண்டிலே சாதிப் பாகுபாடு வளர்ந்து சாதிகளும் இனங்களும் மக்களைக் கூறுபோட்டு வருத்தின. தீண்டாமை மக்களிடம் புற்றுநோயாக வளர்ந்திருந்தது. எக்காலத்திலும் சன்மார்க்க நெறியிலே நிற்க வேண்டுமாயின் உயிர் என்னும் கடவுள் தத்தமக்குள் இருக்கின்றார் என்பதனை அனைவரும் உணரவேண்டும். உடலிலே உள்ள ஆன்மாவே வழிபடத் தக்க கடவுளாவர். ஆதலால்தான் உயர்நிலையடைந்த உத்தமர்களைக் கடவுள் இல்லை என்று சொன்ன தாக்கருதிய புத்தபெருமானையும், தேவனின் மைந்தன் என்று சொன்ன யேசுபிரானையும் அவ்வாறே மக்கள் மனித தெய்வங்களாகக் கொண்டு வழிபட்டனர். கட்டிடங்களில் சிறந்த கோயில் மனிதனது உடம்பு என்பதாகும். 'ஊனுடம்பு ஆலயம்' எனத் திருமூலர் வாக்கும் இவ்வுண்மையினைத் தெளிவு படுத்தியது. இந்த வழியிலே வழிபடவில்லையெனில் உண்மையான கோவில்களால் ஒரு பயனுமில்லை. இதுவே வெறும் கொள்கையளவிலல்லாத செயல்முறைக்கு ஏற்றதான சிறந்த வழிபாடாகும். அதனைவிடுத்துக் கோவில்களையே ஒருகாலம் உயர்வர்ணத்தவருக்காக மட்டும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பாகுபடுத்தி வைத்துக்கொண்டதன் விளைவாக சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் மேலும் அதிகரித்தன. பிறப்பால் ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிப்பதும், விதி - நியதி போன்ற உயர் இயற்கை விதிக்குரிய அம்சங்களை தப்பிதமாகப் பொருள் திரித்து மக்களைச் சோம்பேறிகளாகவும், கோழைத்தனமாகவும் வளர்த்து விடுதல் போன்றன பொதுவுடைமைக் கொள்கையாளராலும் கண்டிக்கப் படுவதாயிற்று. இதனால் சமயத்தை அழிப்பதே ஒரு சாரார் நோக்கமாகவும் மாறியது. சமயத்தின் பெயரால் நடந்த சாதிக் கொடுமைகட்கும் உண்மைச் சமயத்திற்கும் எதுவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையான ஆன்மநேய ஒருமைப்பாடு மேலோங்க வேண்டுமாயின் சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள், சடங்காசாரங்கள், விகற்பங்கள் இவற்றிலிருந்து மனிதன் விடுதலையடைய வேண்டும் சமயத்தை சமூகப் பிரிவினைவாதிகளும் பொதுவுடைமைவாதிகளும் தத்தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ளவே இத்தகைய சாதி முறையும், பொருள் விளங்காத சடங்குகளும் மூலமாயமைந்தன. சமயம் என்பதே தற்காலத்திலே வகுப்பு வாதம், பிரிவினைவாதம் என்பதன் பொருளாக அமைந்துவிட்டதோ எனவும் ஐயுறத் தோன்றுகின்றது. எனவே சமயம் என்ற உயர்ந்த மார்க்கம் எதனைப் போதிக்க எழுந்ததோ அத்தனை உயர் லட்சியங்களையும் இன்று இழந்துவிடுமோ என்ற பயமும் எழுகின்றது. சமயத்திலே பெரியவர்கள் நல்லெண்ணத்துடன் சமூக மேம்பாட்டிற்காகச் செய்த ஏற்பாடுகள் பலவும் இன்று 'பிள்ளையார் பிடிக்க குரங்கானது' போலவும், 'கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது' போலவுமாகி விட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாக - சமயமானது அவரவர் மனஇயல்புகட்கேற்ப திரிபுபடுவதாகவும் ஆயிற்று எனவே மனிதன் சமயவாதியாக-ஆன்மநேயத்தை பின்பற்றுவதை வழிபாடாகக் கொண்டிருப்பதே இன்றைய நிலையில் மிகச் சிறந்ததாகத் தோன்றுகின்றது. சேவா நெறியும், ஆன்மநேயமும், சமூக சேவையும், பசிப்பிணி போக்குதல் என்பனவற்றையுமே மனிதன் வழிபாடாகக் கொள்வது நல்ல பயனையளிக்கும்.

**சித்தர்களது கண்டனம் :**

இவ்வாறு வர்ணம் என்பது சாதிப் பிரிவுகளாக மாறியது மட்டுமின்றி-ஒருவரையொருவர் வேற்றுமை படுத்தவும் இடமளித்ததால் தாழ்த்தப்பட்டோர் தீண்டதகாதோர் என்பன போன்ற தகாத வார்த்தைப் பிரயோகங்கள் ஏழை மக்களின் மனதைப் பெரிதும் வருத்துவதாயிற்று கடவுளின் குழந்தைகளான மானுடர்களைக் கடவுள் சன்னிதியிலேயே பாகுபடுத்தும் கொடுமைகள் ஒரு காலம் மிதமிஞ்சிப் போனதால் கடவுள் வழிபாடு, ஆலயம் வர்ணப் பிரிவு, உருவக் கடவுள் கொள்கை என்றிவ்வாறு சாதாரண மக்களின் சமய முன்னேற்றங்கட்காகக் கற்பிக்கப்பட்ட கீழ்நிலைத் தத்துவக் கோட்பாடுகளும் ஞானமடைந்த ஒரு சிலரின் எதிர்ப்புட்கும் இடமாயின. ஊரைவிட்டு விலகி, மக்களை மறந்து, அவர்களிடமிருந்து ஒதுங்கிக் காடுகள், மலைகள், குகைகள் போன்ற வதிவிடங்களை நாடிக் கடுந்தவம் செய்த யோகியர்களும், சித்தர்களும் பெரும்பாலும் தனிமையிலும் மௌனத்திலுமே காலம் கழித்து தேகம் நீங்கியதும் ஒரு காலம் விடுதலை நிலையடைந்துள்ளனர். இவர்களது ஞான முயற்சிதாம் தாம் தமக்கு விடுதலையடைவதை நோக்கமாகக் கொண்டிருந்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர மனித குலத்திற்கு அவற்றினால் ஏற்படும் பலா பலன்களை விளக்குவதாக அமையாது போனது வியத்தகு நிலையிலேயிருந்த அத்தகைய சித்தர், யோகி யரது வாழ்க்கையினால் சமுதாயத்திலே என்ன பயன் விளைந்தது என்ற சிந்தனைகளும் தோன்று மலில்லை. சமூகப் புரட்சியும் மறுமலர்ச்சியும் ஏற்பட்ட பிற்காலத்திலே இத்தகையோர் சமூகத்திலே மக்களின் பிரிவினைக் கோஷங் களால் துக்கித்ததுடன் அவர்தம் கண்ணோட்டமும் மாறிவரத் தொடங்கியது. ஆதலால் 19ம் நூற்றாண் டிலே வாழ்ந்த பல துறவியரும், ராமகிருஷ்ணர், ரம ணர், மற்றும் தாயுமானார், வள்ளலார் போன்ற பல ஞான யோகிகளும் கர்ம யோகிகளாக வாழ்ந்து நாட்டுக்கும், மக்கட்கும் நலம் சேர்க்கும் பணிகளை மேற் கொண்டமையினைக் காண முடிந்தது. சித்தர் களில் பலரும் சமூக சீர்திருத்தவாதிகளாக தம்மை வெளிப்படுத்தத் தொடங்கினர். மகா ஞானியான திருமூலரும் ஒரு சித்தரும் யோகியுமாக விளங்கியவ ராவர். திருமூலரது நூற்றிப் பதின்மூன்று பாடல் களில் உலகிற்கு அவர் வழங்கிய சீர் திருத்தக் கருத் துக்களைக் காணலாம்.

'மயக்கும் சமயம் மலமற்று மூடர்'

(திரு. 316)

என்ற பாடலில் உண்மையல்லாதனவற்றை 'சமயம்' எனக் கூறுவதானது கண்டிக்கப்படுகின்றது. போதை யினைத் தந்து அறிவை மயக்குவனவற்றுள்ளே சமய மும் ஒன்று என அன்றே அறிவுறுத்தினார் திருமூலர்.[1]

1. 'Religion is opium of the Mass' என்றார் கார்ல் மாக்ஸ். அதனை முதற்கண் எடுத்துக் காட்டியவர் திருமூலர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு அழிந்துவிட்டால் உணர்வுகள் மேலோங்கு மிடத்து மனிதன் விலங்கிற்கு ஒப்பான கீழ்நிலை அடைகின்றான். உணர்வின் அடிப்படையிலமைந்த சமய நெறியானது வெறியாக மாறவும் இதனால் சந்தர்பங்கள் உண்டாகின்றன. எனவே தான் 'மயக்கும் சமயம் மலத்திற்கு ஒப்பானது' எனப்பட்டது. அப்படியான நிலைமை உருவாகுமென்றால்,

**சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டு நீர்**
**மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்'**
(திரு. 1604)

என 'வேதம் பொது ஆகமம் சிறப்பு' என்று கூறிய திருமூலரேசமூகக் கொடுமைகட்கு சாத்திரம் இடமளிக்குமாயின் அகத்திலேயுள்ள ஆண்டவனை முதலில் அறிய முற்படுங்கள் என அறிவுறுத்தினார்.

ஆதலால் சமூகத்திலே காணப்படும் பயனற்றுப்போய் போன, பொருளற்றதாகி விட்டதெனக் கருதுமளவிற்குக் காணப்படும் அத்தகைய சாதி, சடங்குகள், சாத்திரம், சமயம் போன்ற பாகுபாடுகள் கண்டிக்கப்பட வேண்டியவை என்பதிலே சித்தர்கட்குள் வேறுபாடு இருக்கவில்லை. மக்களைப் பிரிக்கும் மனங்களை வேறுபடுத்தும் சாதியுணர்வை மிகுதிப் படுத்துவன சாத்திரமும் சடங்குகளும் என்பதினால் அவை நன்மைதரும் இயல்பை இழந்து சமூகத்தை 'பாரம்பரியம்' என்ற போர்வையிலே இழிபடுத்துமானால் அவற்றைத் தூக்கி எறியத் தயங்க வேண்டாம் என்பதுதான் சித்தர்கள் கருத்தாக இருந்தது.

**சதுர்வேதம் ஆறுவகைச் சாத்திரம் பல**
**தந்திரம் புராணகலை சாற்றும் ஆகமம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதம் விதமான பல்வேறு நூல்களும்
வீணான நூல்கள் என்றே ஆடு பாம்பே'[1]
(பாம்பாட்டிச் சித்தர்)

'சாத்திரத்தைச் சுட்டு சதுர்மறையைப்
பொய்யாக்கி
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்பதெக்கா
லம்[2]
(சிவவாக்கியார்)

'நால்வருணம் ஆச்சிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதமெல்லாம் பிள்ளைவிளை
யாட்டே'
(திருவருட்பா, வள்ளலார்)

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்
லால் மாறுபடும் கருத்தில்லை.
(தாயுமானவர்)

'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே....
அலைந்தலைந்து வீணே நீரழிதல் அழகல்லவே'
(வள்ளலார்)

இதே கருத்தினை இத்தகைய சித்தர்கட்குமுன் தோன்றிய அப்பர் சுவாமிகளும் அழகாகச் சுட்டிக் காட்டினார் :-

---

1. சித்தர் ஞானக்கோவை, பாம்பாட்டிச் சித்தர். பா. 98
2. மேற்படி. சிவவாக்கியர், மெய்ஞானப் புலம்பல். 155.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'சாத்திரம் பேசும் சழக்கர்கள் . . . .**
**கோத்திரமும் குலமும்-கொண்டென் செய்வீர்'**
**(அப்பர் சுவாமிகள்)**

என்பது போல சித்தர்கட்குப் பின்வந்த புரட்சிக் கவிஞர்கள் பலரும் கூடச் சமூகத்தைப் பாழ்படுத்தும் சாதியுணர்வைக் கண்டிக்கத் தவறவில்லை. வேத நெறியைப் போற்றும் பாரதியார் நல்லநோக்கத்திற்காக அமைத்த வர்ணப்பாகுபாடானது அதன் அடிப்படை நோக்கத்தை இழந்துவிட்டதை எண்ணி வருந்தினர்.

**'நாலுகுலம் அமைத்தனர் - அதனை**
**நாசமுறப் புரிந்தனர் மூடர்'**
**(பாரதியார்)**

அதனல் வர்ணக்கோட்பாடு அதன் உண்மைத் தத்துவத்தை இழந்த பின்னர் அதன் எச்சமான சாதிப் பிரிவினைகள் சமூகத்தை பிரிவினைக்குள்ளாக்கி வந்தமையினைக் கண்ட சித்தர்களும் யோகியரும் மனம் மிக வருந்தியே இத்தகைய புரட்சிகளை மேற் கொண்டனர். அதனல்

**'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்**
**கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப்போக'**

என எல்லாவற்றையுமே வள்ளலார் ஒட்டு மொத்தமாகச் சாட வேண்டியிருந்து. ஏனெனில் இடைக் காலத்திலே, குலம், கோத்திரம், உயர்சாதி, கீழ் சாதி, தீண்டத்தகாதார் என்ற வகையிலே வேறுபாடுகள் பெரிதும் தலைதூக்கி சமூகத்தைத் துண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாடி வந்துள்ளன. ஆதலால் மொத்தத்திலே சமய நெறிகளையே அலட்சியமாகப் பார்க்க சித்தர்கள் முற்பட்டனர். அதனுல் 'ஷாடந்தம்' எனப்படும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், காலாந்தம் எனப்படும் சமய மத சன்மார்க்கங்களை மறுப்பது 'சுத்தசன்மார்கம்' எனவும் விளக்கப்பட்டது. ஆகவே 'தயை உடையவர் எல்லாரும் சன்மார்க்கம் சார்ந்தவர் என்ருர் வள்ளலார். அதனுல் உண்மைத் தொண்டு நெறி சன்மார்க்கம் என்பதனை வற்புறுத்திச் 'சமயம்' என்பது பிரிவினையைத்தான் தூண்டுவதாகக் காணப்பட்டதாலே அந்தச் சொல்லையே சித்தர்கள் வெறுக்க வேண்டியிருந்தது.

மனிதனைப் பிணைத்துள்ள தளைகள் பலவாகும். சாதி, சமயம், வர்ணம், ஆச்சிரமம், மரபு, சாத்திரங்கள், பாரம்பரியம், சடங்குகள், வழிபாடுகள் எனச் சமய வாழ்விலே எவற்றை புனிதம் என நூல்கள் குறிப்பிட்டனவோ அத்தனையும் நடைமுறையிலே மனித வாழ்வை தூய்மைப்படுத்துவதற்குப் பதிலாக தாழ்த்தப்படுவதற்குத் துணைபோகுமெனில் அவை சாத்திரங்களோ, சமய நெறியோ அல்ல என்பதனையே இவ்வாறு சித்தர்கள் உணர்த்தி வைத்தனர். இவற்றின் மூலம் மனிதன் செயற்கையான வாழ்விலே போலிகளை நம்பி மயங்குபவனுகவும் ஆகிவிட்டதனுல் இரக்கம், கருணை, தயை, அன்பு என்ற கருவிகளே மனிதனை இத்தடைகளைத் தாண்டி வருவதற்கு உறுதுணை செய்யும் என சித்தர்களின் சுத்த சன்மார்க்க நெறி போதித்தது. சித்தர்கட்கு உருவ வழிபாட்டிலும் நம்பிக்கை கிடையாது. ஏனெனில் ஆளுக்கொரு கடவுளர்களைச் சிருஷ்டித்து அவற்றின் மூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் சமய உணர்வுகட்குத் தீனிபோட்டு மக்களின் உணர்ச்சிகளுடன் விளையாட போலித்தனமான சாமி யார்களும் சன்னியாசிகளும் கூடத் தோன்றினர். விபூதியால் வேடமணிந்து மக்களை ஏமாற்றும் இவர் களை 'ஆஷாடபூதிகள்' என வேத நூல்கள் அன்றே உரைத்ததுடன், வேதாகம நூல்களின்' புனிதத்தன் மைக்கு மாசுபடும் வண்ணம் தத்தம் மனம் போன வாறு அவற்றினைத் திரித்தும் விரித்தும் வெளியிட்ட தன் விளைவாக அத்திரு நூல்களும் அவதூறுகட்கா ளாயின. இத்தகைய போலிகளின் திருவிளையாடல் களை அழிக்கும் எண்ணத்துடனும் அவற்றினைத் திருத் தும் நோக்கத்துடனும் சித்தர்களால் கூறப்பட்ட அறிவுரைகள் யாவும் சமயத்தை, வர்ணத்தை, சாத் திரங்களை முற்றாக அழித்து விடுமெனப் பின் வந்த அறிஞர்கள் சிலர் சிந்தித்தனர். சித்தர்கள் சாதி சமய வேறுபாடுகளைக் களைய முயன்றதும் உருவ வழி பாட்டை ஒதுக்கியதும் மரபு வழி எனக் கூறிக் கொண்டு (மரபிற் கொவ்வாது) வருகின்ற கண்மூடிப் பழக்க வழக்கங்களைக் கண்டித்ததும் சிலபழமைப் பற்று மிக்கவர்கள்என்று சொல்லிக் கொள்ளும் சமய வாதிகட்குப் பிடிக்கவில்லை.[1] வள்ளலாரின் திருப்பா டல்கள் ஒதுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்ட தும், மரபு வழி வந்த நாவலர் அவர்களைத் தூண்டி விட்டு அப்பெருமகனுர் மீது வழக்குத் தொடுத்தமை போன்ற நிகழ்ச்சிகளும் இதற்கு உதாரணமாகும். ஆனல் நடந்தது என்ன? புராதன காலம் தொட்டுப்

---

1. பேராசிரியர் மா. மா. குருசாமி, வள்ளலார் ஓர் அறிமுகம், மதுரைப் பல்கலைக்கழகம், பக். 24.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



புத்தரும், மகாவீரரும், தரும நூல்களும் உலகாயத மும், மற்றும் சாந்தியடிகளும், ஞானிகளில் உயர் நிலையடைந்தவர்களாலும் இந்த சாதி ஏற்றத் தாழ்வு கள் தொடர்ந்து கண்டிக்கப்பட்டு வந்துள்ள போ தும் இன்று வரை - சமுதாயத்தில் அந்த நிலைமைக் ளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா ? அவை எத்தகைய மாற்றங்கள்? என்ன வளர்ச்சிகள் ? என்பன போன்றவை சிந்திக்கப்படவேண்டிய அம்சங்களாக வே இன்றும் தொடருகின்றன.

உபநிடதங்களை இயற்றிய ரிஷிகள் தெய்வத் தைப் பற்றிய பழைய காலக் கருத்துக்கள் அவர்கள் காலத்தில் வளர்ச்சியடைந்திருந்த முற்போக்கான நீதிநெறிக் கருத்துக்கட்கு ஒத்ததாக இல்லை என்ப தனை முற்றிலும் உணர்ந்திருந்தனர் என்பதும் மேற் கூறியவற்ருல் உணரப்படும். அவர்கள் அந்தக் கால திலே புறச்சமயவாதிகள் நடத்தி வந்த பிரசாரத்தில் பெருமளவு உண்மை இருந்ததையும் உணர்ந்திருந்த னர். ஆயினும் மணிகளைக் கோர்த்துள்ள ஒரு நூலை அறுக்க நினைப்பவர்களும், அந்தரத்திலே புதிய சமூ கத்தைப் படைக்க விரும்புவர்களும் தோல்வி அடை வார்கள் என்பதனையும் அறிந்திருந்தனர். தருமத்தைப் பொறுத்த வரையில்-அது என்றும் ஒரே மாதிரியான அறநியமங்களைத் த்ான் கொண்டிருக்கும். புதிதாக எதையும் எவரும் படைப்பதில்லை. உள்ளதை இடம் மாற்றி வைக்கலாம். மேலதைக் கீழாக்கலாம் - கீழ தை மேலாக்கலாம். 'கீழது மேலாகும் மேலது கீழாகும்' என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதனைத் தான் அறிவுறுத்தியது. பொருள்களின் அமைப்பு நிலையினைத் தான் மாற்றலாம்-வர்ணத்தையும் மாற் ரும், குழப்பலாம், மறைக்கலாம். ஆனுல் கர்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் தர்மத்தையும் ஒரு போதும் மாற்ற முடியாது. 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கல்வினாலும் தர்மம் மறுபடி வெல்லும்' என்பதே பாரதியாரும் சொல்லிச் சென்ற உண்மையாகும். சித்தாந்த தத்துவத்தின் சற்காரியவாதக் கோட்பாடும் இந்த அடிப்படையுண்மையினையே அருவ-உருவ; தூல-சூக்கும நிலையிலே வைத்துக் கூறியிருக்கின்றது. எனவே சீர்த்திருத்தம் என்பது ஒன்றினைச் சிதைப்பதல்ல-புதுப்பித்தலாகும். சத்திய யுகத்திலே ஒரே ஜாதியே இருந்ததாகவும் அந்த ஜாதி பிராம்மண ஜாதி எனவும் மகாபாரதம் கூறும்,

> "நவிசேஷோ அஸ்தி வர்ணானும் ஸர்வம்
> பிரம்மமிதும் ஜகத்
> பிரம்மணா பூர்வஸ்ருஷ்டம்ஹி கர்மபிர்வர்ண
> தாம்கதம்"
>
> (மகாபாரதம், சாந்தி பர்வம்)

இன்றும் பெரிய மகான்களும், ஞானிகளும், அவதார புருஷர்களும் துணிவின்றிச், சரியானது என்று பட்டதைச் சொல்லத் தயங்குவதாகவும் பலர் குறை கூறுவதுண்டு. அத்தகைய அருளாளர்களின் உள்ளங்களில் கனியும் பேரன்பின் சிறப்பு இத்தகைய சமூகவாதிகள் சிலருக்குப் புரிந்து கொள்ளக் கடினமானதாகவேயிருக்கும் தமது சகிப்புத்தன்மை, அருள் கருணை, பொறுமை என்பவற்றால் யாவற்றையும் பொறுத்துக் கொள்வதுடன் இம்மகான்கள் மக்கள் அனைவரையும் மெதுவாகவே உயர்நிலைக்கு அழைத்து செல்பவர்கள் எனலாம்.

உலக வரலாற்றினை உருவாக்கிய காரணிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியலாளரும், அரசியல் தலைவர்களும், ஆன்மீக ஞானிகளும், சமுதாய சீர்த்திருத்தவாதிகளும் பெரும் பங்கினை வகித்துள்ளனர். மனிதனானவன் தன் அறிவினைப் பயன்படுத்தி கடந்தகால வரலாற்றிலே இடம் பெற்ற தவறுகளைச் செய்யாமல் திருத்திக் கொள்வதனையே வரலாறு அவனிடம் எதிர்பார்க்கின்றது. ஆதிகாலம் முதல் வளர்ந்து வந்த அறிவு வளர்ச்சியை வேதநூல்கள் முதற்கொண்டு பக்தி இலக்கியங்கள் வரை சுருக்கமாக நோக்கினால், அவை எல்லாமே இயற்கையாற்றலுக்கும் மனித அறிவிற்கும் நடக்கும் போராட்டமாகவோ அல்லது விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் நடக்கும் போராட்டமாகவோ, அல்லது பொருளாதாரத்திற்கும். ஆன்மீக வாதத்திற்கும் நடக்கும் போராட்டமாகவோ, அன்றி அறத்திற்கும் மறத்திற்கும் நடக்கும் போராட்டமாகவோ, விரும்பியபடி கவனித்துப் பார்த்தால் புரியும். சாதியமைப்பினை ஒரு சமய நிறுவனம் எனத் தவறுகக் கருதிக் கொண்டு அதனை அழிக்க முயன்ற பல சீர்த்திருத்தவாதிகளும் இத்தகைய தவறான கண்ணோட்டத்தால் தான் வெற்றி பெற முடியவில்லை எனவும் இவற்றிலிருந்து அறிந்து கொள்ளமுடியும். சமயத்தை அழித்துவிடுவதால் சாதியை அழித்து விட முடியும் என்றால் அது பாமர மக்களின் உணர்வுகளையே திருத்துவதற்குப் பதில் வளர்த்து விடுவதாகத் தான் இன்றுவரை நடந்து வந்திருக்கின்றது. இதனையே கடந்த கால வரலாறும் புலப்படுத்துவதாக உள்ளதனை எவரும் புரிந்து கொள்வர். மனம், வாக்கு, காயம் இம்மூன்றினாலும் பண்பட்டு வருவதே இந்துக்களின் சமய ஒழுக்கமாகும். இதுவே திரிகரண சுத்தி எனப்படும். தருமம் ஒன்றுதான் மனிதன் வாழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை. அதுவே உயிர் நாடியை இயக்குகின்ற கருமச் சுழற்சியின் சக்கரமாகும். கடவுள் உண்டா இல்லையா என்றோ, ஆத்மா தனியானதா, நிலையானதா என்றோ, உலகம் உண்மையா, மாயமா? என்றோ, தர்க்கித்து விவாதிப்பதில் என்ன பயன் இருக்க முடியும்! அறிவாளிகளை அவை வெறுமனே சந்தோசப் படுத்த முடியும். ஆதலால் எது சத்தியமோ அதனிடம் மனிதனைச் செலுத்துவதே இந்து தர்மமாகும்.

**'மறுமையில் துணைசெய்ய தாயோ, தந்தையோ, மக்களோ, மனைவியோ, உறவினர்களோ வரமாட்டார்கள். தருமம் ஒன்று தான் செல்லும் இடமெங்கும் வழித்துணையாய் வருவதாகும். தருமம் ஒன்றே எங்கும் துணைநிற்கும்.'**

(மனுஸ்மிருதி, 289-42)

இன்றைய மக்களிடையே பெரும்பாலோர்க்கு தர்மச் செயல்களிலே ஈடுபாடு குறைந்த வருவதுடன் மறச் செயல்கள் மேலோங்குவதனையும் காண முடிகின்றது. 'பசி என்ற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரியும் போது அதனை ஆகாரத்தால் அணைக்கின்ற நெருப்பே சீவகாருண்யம். பசி என்கின்ற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்கும்போது அப்புலியினைக் கொன்று அவ்வுயிர்களை இரட்சிப்பதே சீவகாருண்யம்', என்ற வள்ளலார் கருத்துக்கள் சமூகத்திலே எந்தக் கொடுமைக்கும் அடிப்படை பசிப்பிணி என்பதனையே அழகாக விளக்கியுள்ளன.

முன்னொரு காலத்திலே தொழிலடிப்படையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கிய வர்ணப் பிரிவானது சமுதாய வளர்ச்சிக்கும், அதன் ஒற்றுமைக்கும், கட்டுப்பாட்டிற்கும் அடித்தளமாயிருந்து வந்தது. முக்குணங்களின் அடிப்படையிலே மனித இயல்பிற்கும் இயற்கை ஆற்றலுக்கும் ஏற்ப உடல் உழைப்பிலே சிறந்து விளங்குவோர்க்கு உழைப்பினையும், அறிவினுல் உழைப்போர்க்கு அறிவினையும், அறிவுப் பலமும் உடல் பலமும் இணைந்து கருமமாற்றுவோர்க்கு அவ்வாருகவும் வர்ணமானது நடைமுறையில் இயங்கி வந்தது. இந்த நிலையிலே படிப்படியாக ஏற்பட்டு வந்த மாற்றங்களும் எதிர்பாரத திருப்புமுனைகளும் சமூகப் பிரிவினைகளும் ஏற்றத் தாழ்வுகளும் மக்களை மக்களே அடிமைப்படுத்தும் அமைப்புகளும், தவருன விளக்கங்களுமாக வர்ண அமைப்பின் நோக்கமும் லட்சியமும் பின்னர் அடியோடு மாறிப் போயிற்று. வர்ண முறையானது 'சாதி' என்ற பெரு நோயாக மாறி ஆங்காங்கு குலங்களையும் குடிமக்களையும் செல்லரிக்கத் தொடங்கியது. எந்த நோக்கத்திற்காக வர்ணம் ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் அடியோடு மாறிப் போனதும் வர்ணப் பிரிவினடியாகத் தோன்றிய சாதியமைப்புகளையும் நீக்கிவிட வேண்டிய சூழ்நிலை மெல்ல மெல்ல உருவாகியது. அத்தகைய மாற்றங்களையே உபநிடத காலங்களிலிருந்து புத்தர் முதல் பொதுவுடைமையாளர்கள் யாவரும் சீர்த்திருத்த வேண்டுமென அறிவுறுத்தத் தொடங்கினர். பொய்யான உடம்பினை 'மெய்' என்று பெயரிட்டு அதற்கு ஆடை அலங்காரம் செய்து பத்திரமாகப் பேணி வருகின்ருேம். ஏனெனில் பொய்யாகிப் போகும் என்று தெரிந்திருந்தாலும் அதனுள் மெய்ப்பொருளான பரமாத்மா ஜீவாத்மாவின் வடிவிலே வாசம் செய்து வருவதனுலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அதே உடம்பு நோய்வாய்ப்பட்டு பருவ காலங்களினுல் ஏற்படும் மாற்றங்கட்கு உட்பட்டு முதுமையடைதலும் இடையிடையே நோய்களினுல் தாக்கப்பட்டால் உறுப்புகள் சேதமடைவதுமியல்பே சில சமயங்களில் உடம்பின் ஏனைய பெரும் பாகங் களைப் பாதுகாத்தற் பொருட்டு நோயினுல் பாதிக் கப்பட்ட உறுப்புக்களை உடலைவிட்டும் நீக்கி விடுவ துமுண்டு. அவ்வாறே சமுதாயம் என்ற உடலிற்கு வர்ணப்பிரிவானது நன்மைகளை ஏற்படுத்திய காலத் திலே அதனை ஞானிகள் உட்பட சகலரும் வரவேற்று நடைமுறை படுத்தினுர்கள். ஆனுல் அதே வர்ணப் பிரிவானது 'சாதி' என்ற பெரு நோயாக மாறி முழுச் சமுதாயத்தையுமே சீரழிப்பதாக மாறிய பின் னர் சமூகத்தைப் பேணும் பொருட்டு தேவையற்றுப் போய்விட்ட பலமிழந்த பலவீனப்படுத்துகின்ற சாதி யமைப்புக்களை நீக்கிவிட்டு சமூகத்தை முழுமையாக பாதுகாக்கும் வழிவகைகளை அமுல்படுத்துவதே உத்த மமான முயற்சியாகும்

**முடிவுரை :**

இத்தகைய பெருமுயற்சிகள் 19-ம் நூற்ருண்டிலே வாழ்ந்த மதப்பிரசாரகர், சமூக சீர்த்திருத்தக்கா ரர், சித்தர்கள், ஞானிகள் எனப் பலதரப்பட்ட சிந் தனையாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உடல் நோய்க்கு அறுவைச் சிகிச்சை செய்யும் வைத் தியர்களைப் போன்று சமூகநோய்க்கு அறுவை வைத்தி யம் செய்யும் ஆன்மீக வைத்தியர்களாக அவர்கள் அனைவரும் கடமையாற்றினர். இவற்றிலே பெரும் பங்களிப்புச் செய்தவர்கள் சித்தர்கள் என்று தான் சொல்ல வேண்டும். அவர்களும் சமுதாய உடலினை முழுமையாகப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் 'சாதி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நோயை நீக்கிச் சமூகத்தைப் பாதுகாக்க முற் பட்டனரே தவிர யாரையும் கண்டிக்கும் நோக் கோ, அலட்சியப்படுத்தும் சிந்தனையோ அவர்களிடமி ருக்கவில்லை. அப்படிப் பாகுபடுத்துபவர்களானல் எப்படி அவர்களால் ஆன்மநேயத்தையும், ஒருமைப் பாட்டையும் பாதுகாக்க முடியும்! எனவே அன்னி யராட்சியிலும் புறச்சமயங்களின் பிரசாரங்களினு லும் இந்து சமுதாயமும், இந்து சமயமும் சிக்கி அதன் உண்மைப் பொருளிலிலும் சமதர்மத்திலும் சீர்குலைவு ஏற்பட்டபோது இத்தகைய சமூகப்புரட்சி இந்து சமுதாயத்திற்கு அவசியமாயிற்று. அத்தகைய சூழ்நிலையிலே அப்படிப்பட்ட நடவடிக்கைகளே பெரி தும் தேவைப்பட்டன. அதனுல் சித்தர்களைப் பெரும் சமயப் புரட்சியாளர்கள் எனவும் அறிஞர்கள் கருதி னர். எத்தகைய மாற்றமும் ஒரு புரட்சியினுல் தான் ஆகும். புரட்சி என்று கூறினுல் வரலாற்று மாண வர்கட்கு இன்னேரன்ன இரத்தக்களரிகளைத் தான் புரட்சி என நினைத்துக் கொள்ளத் தோன்றும். இந்த இடத்திலே புரட்சி எனக் குறிப்பிடுவதற்கு இரத்தக் களரி என்பது பொருளாகாது மாற்றம்காண வேண் டியவைகட்கு மத்தியிலே நின்று மெல்ல மெல்ல மாற் றம்காண்பதனையே இங்கு சுட்டப்படும் 'புரட்சி' என் றசொல் குறிப்பிடுகின்றது. இதுஒரு வகையான 'அறப் புரட்சி'யாகும்.[1] பசிப்போரையும், சாதிப்போரையும் நீக்குதற் பொருட்டு அறப்போரை வலியுறுத்தும் புரட் சி, அறச்சாலைகளை, கல்விச்சாலைகளை ஏற்படுத்தும் புரட்

---

1. பேராசிரியர், மா. மா. குருசாமி, வள்ளலார் ஓர் அறிமுகம், பக். 123.

எனப்படும். இரத்தம் சிந்திக் காணப்படுவது மறப் புரட்சியாகும். இக்காரணத்தினுல் போர் வீரர்களை 'மறவர்கள்' என்றும், ஞானவீரர்களை அமைதி காப்ப தன் பொருட்டும் சேர்த்து 'அறவர்கள்' எனவும் இலக்கியம் வகைப்படுத்தியுள்ளது.

இத்தகைய சமூகப் புரட்சியை ஏற்படுத்துவதில் ராஜா ராம்மோகன்ராயோ, ராமகிருஷ்ண பகவானே, விவேகானந்தரோ, இராமலிங்க வள்ளலாரோ அன்றித் தாயுமான சுவாமிகளோ யாரும் விதிவிலக் கல்ல. வர்ணத்தை அப்பெரு மக்கள் கண்டிக்கவில்லை. அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட சாதியமைப்பினையே அவர்கள் திருத்தி அமைக்க முற்பட்டனர். அதன் விளைவாகப் பல சித்தர்கள், ஆன்ம ஞானிகள் என் போர் சமய சித்தாந்தங்களிலிருந்தும் ஒதுக்கப்பட்ட போதும் அதற்காக அவர்கள் கவலைப்பட்டதுமில்லை. அவற்றினைப் பொருட்படுத்தியதுமில்லை. ஏனெனில் அத்தகைய அறப் புரட்சியாளர்கட்கு 'சமுதாய நலன்' ஒன்றினைத் தவிர வேறெந்தத் தேவைகளும் நாட்டி லே இருக்கவில்லை. அதுமட்டுமன்றி இன்று வர்ணப் பிரிவுகள் எவையாவது உருப்படியாக நிலை பெற் றிருக்கின்றதா என்பதே சந்தேகமாகவுள்ளது. பிரா மண, சத்திரிய, வைசிய, வேளாளர், என்ற தொழிற் பிரிவுகள் பலவும் பல்வேறு சாதியமைப்புக்களாக உருமாறித் தத்தம் அடிப்படையுண்மைத் தன்மையினை இழந்து நிற்கின்றன. பிராமண வர்ணம் இருக்கின் றதைப் பார்க்க முடிகின்றது. ஆனுல் பிறப்பினடிப் படையிலே அது இயங்குவதனுலோ என்னவோ 'பிராமண வர்ணம்' என்னும் அதி உன்னத இந்து மத குருபீடமானது மனுஸ்மிருதி சொல்லி வைத்த தர்மத்தின்படி இயங்கி வருகின்றதா என்பதும் பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைக்குரியதொன்றாகும். இத்தகைய சிக்கலான நிலைமைகளைச் சாதியமைப்புக்கள் சமூகத்திலே ஏற்படுத்தியதன் எதிர்விளைவு பிராமண வர்ணத்தவர்களாலேயே வர்ணப் பிரிவானது பெரும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்குமுரியதாயிற்று. எனவே சாதியமைப்பினை எதிர்த்து சீர்திருத்தம் வேண்டிய சித்த மகாபுருஷர்கட்கும், மகான்களான ஆன்மீக ஞானிகட்கும் யாரையுமே பகைக்கும் நோக்கமோ, புறக்கணிக்கும் நோக்கமோ, அலட்சியப் படுத்தும் சிந்தனையோ கிடையாது என்பது இது வரை கூறியவற்றிலிருந்து புலனாகாமற் போகாது. சம்பந்தப் பெருமானும், ஸ்ரீ ராமகிருஷ்ணரும், அறிஞர் ராஜாராம் மோகன்ராயும், மகாகவி. சுப்பிரமணிய பாரதியாரும் பிராமண வர்ணத்திலிருந்து தோன்றிய பெரும் சமூகப் புரட்சியாளர்கள் என்றால் மிகையாகாது. அவர்கள் அனைவரும் மக்கள் சமுதாயத்திடம் மாறாத பேரன்பு பூண்டவர்கள். உலகியல் வாழ்வினைத் துறந்த ஞானப் பெருமக்களாவார்கள். அவர்கள் இந்து சமயத்தின் ஆணிவேராக விளங்கும் குருபீடமும், பிராமண தர்மமும் ஆட்டம் கண்டு சீர்குலைந்து போவதைப் பார்த்து மனம் பொறுக்காது பொங்கியெழுந்த பேரருளாளர்கள். இங்ஙனம் மக்கட் கூட்டத்தினருக்காகவும் அவர்களைக் கொண்டமைந்த சமூகத்திற்காகவும் காலத்தின் தேவை கருதித்தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டுழைத்த இப்பெருஞ் சிந்தனையாளர்களே உண்மையான சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட நவீன இந்து சமய சீர்திருத்தப் புரட்சியாளர்கள் எனலாம்.

பொருளே வாழ்வின் அடிப்படை என்று கொள்ளும் பொதுவுடைமையும், சமதர்மக் கொள்கை முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியனவும் இன்றைய சமூக மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள போதிலும் நடைமுறையிலே அவை சாத்தியமாகப் பின்பற்றப்படுகிறதைப் பொறுத்தே அதன் வெற்றியும் தங்கியுள்ளது. முதலாளித்துவ சமூகத்தையும் பொருளே ஆட்டிப் படைக்கிறது. பொதுவாக சமத்துவம், சம உரிமை, சமதர்மம் எல்லாம் பணக்காரர்வர்க்கமும் ஆளும்வர்க்கமும் ஏழை மக்களை ஏமாற்றப் பேசும் பேச்சாகவே காணப்படுகின்றது. கடவுளும், கோயிலும், வழிபாடும் பெரும் பாலான மக்களால் போற்றப்படுகின்ற போதிலும் அவற்றிலும் ஒருவகையான பண்டமாற்று முறையே இடம் பெறுவது போல ஒரு தோற்றமுள்ளது. பணக்கார வர்க்கமும், அரசியல் கட்சிகளும் கடவுள் பற்றிய செய்திகளைப் பிரசாரத்திற்காகவே பயன்படுத்துகின்றன. தங்குதடையின்றிச் சிந்திக்கும் சுதந்திரம் இந்து சமயத்தின் அடிப்படைப் பண்பாதலால் இந்த வகை நிலைமைகள் 'உருவாவதும் தவிர்க்க முடியாததாகின்றது. முன்னோர் கூற்று என்பதால் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயமோ அவற்றிற்கப்பால் சிந்திக்கக் கூடாது என்ற கட்டுப்பாடோ இந்து சமயத்திலே கிடையாது. மெய்பொருளை அறிவதற்குரிய கருத்து சுதந்திரமே இந்து மதத்தின் சிறப்புரிமையாகும். கடவுட் கொள்கையில் நம்பிக்கையற்றவர்களுக்கும் 'இந்து' என்று தன்னை அழைக்கும் உரிமையினை இந்துமதம் வழங்கியுள்ளது. சமயம் என்ற பேருண்மையினை அறிவதற்குச் சாத்திரப் பயிற்சியினைவிடக் கடுமையான முயற்சியும் சாதனை மார்க்கங்களில் பெரும் பயற்சியும் தேவை. தருமத்தையும் சத்தியத்தையும் பின்பற்றுவதே அவற்றிற்குரிய சிறந்த மார்க்கமாகும். 'சநாதன தர்மம்-சத்தியம்' என்பவற்றின் மறு பெயரே இந்து சமயம் என்பதே பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும்

## சமுதாய சீர்திருத்தங்களும்

19-ம் நூற்றாண்டு ஒரு சிறப்பிடத்தை வரலாற்றில் தேடிக் கொண்ட பல்வேறு சம்பவங்களின் தொகுப்பு நிறைந்த காலமாகும். மக்களிடையே காணப்பட்ட சமுதாயச் சிந்தனைகளிலே,

புதுமை நாட்டம்

புரட்சிக்கருத்து

புனரமைப்பு வேலைகள்

என்பவற்றிலே சமய முற்போக்கு இயக்கங்கள் நாட்டம் கொண்டு செயற்பட ஆரம்பித்த காலநிலை காணப்பட்டது. இந்தியா, இலங்கை போன்ற தென்னாசிய நாடுகள் பலவற்றிலும் அரசியல், அறிவியல் என்பனவற்றில் மட்டுமின்றி அகத்துறை சார்ந்த ஆன்மீக இயலிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உண்டாயின. இவற்றிற்கு ஆங்கில ஆட்சிமுறையும் ஆங்கில மொழிச் செல்வாக்கும், கிறித்தவ மிஷனரிமார் ஊடுருவலும் கீழ்நாட்டுக்கலை பண்பாட்டில் மேனாட்டார் கொண்டிருந்த ஆர்வமும் பிரதான காரணமாயிருந்தன. இவையனைத்து நோக்கங்களையும் இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப்பாதையில் நின்று வழிநடத்திய இயக்கங்களுள் பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண இயக்கம் என்பன முக்கியமானவை. பி. டி. தேவா னந்தன் என்ற அறிஞர் பார்வையில் இவை:

புனராக்க இயக்கம் Reform Movemens

புத்தெழுச்சி இயக்கம் Revival Movement

புத்துணர்ச்சி இயக்கம்[1] Renaissance Movement

என அவற்றின் செயற்பாடுகளின் வெளிப்பாட்டைக் கொண்டு பாகுபடுத்தப்பட்டுள்ளன. தயானந்தன் பிரான்சிஸ் என்பார் இக்கருத்தை மேலும் விளக்கி முறையே;

இந்து மிதவாதிகள்

இந்து தீவிரவாதிகள்

இந்து சமரசவாதிகள்[2]

என வகுத்துக் காட்டுவதிலிருந்து இவை மூன்றும் வெவ்வேறான நோக்கங்கள் கொண்டவை என்பது புலனாகும். அதிலும் பரமஹம்சரின் பெயரால் தோன்றிய இயக்கத்தின் இலட்சியங்களையும் இது புலப்படுத்துவதாயுள்ளது.

பிற மதத்தோராலும் புரிந்து கொள்ளும் அள விற்கு சுவாமி இராமகிருஷ்ணரின் போதனைகளில் எல்லாம் உலக சமத்துவம் மேலோங்கியிருந்தது. சுவாமியின் இலட்சியங்களைச் செயற்படுத்தும் நிலை யமாக இராமகிருஷ்ண மடாலயம் 1886இல் சுவாமி விவேகானந்தர் தலைமையில் நிறுவப்பட்டது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையம் அமைவதற்கு முன்பே 1830இல் பிரம்ம சமாஜமும், 1875இல் ஆரிய சமாஜமும் தமது கொள்கைகளை பிரசாரப்படுத்தத் தொடங்கியிருந்தன. எனினும் அவற்றின் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகள் என்ன காரணத்தினாலோ பிற்காலம் பெரு வெற்றியடைந்தெனக் கூறமுடியாது போயிற்று[3]. ஆனால் இராமகிருஷ்ண இயக்கம் இன்றுவரை தொடர்ந்து நிலை பெற்றிருப்பதுடன், நிலைபெற்ற சேவைகளையாற்றி வருவதும் சுவாமி இராமகிருஷ்ணரது மகிமைக்கும், அவரது வாழ்க்கை நெறிக்கும் கிடைத்த பெருவெற்றியெனலாம்.

பழமைக்கும் புதுமைக்கும் மோதல்கள் நடைபெற்றன. சமயத்துறையில் நடைபெற்ற மோதல்களில் மேனாட்டுத் தொடர்பால் புதுமையும் கிறித்தவ சமய பிரசாரமும் முக்கிய இடம் பெற்றன. அன்றைய அதிகார வர்க்கத்தின் சமயம் ஆதலால் கிறித்தவம் ஓரளவு வெற்றி பெற்றது. பௌத்தத்தைப் போல் சமூக சேவைநெறியையும், சமணம் போல் அறநெறியையும் போதித்த இந்திய மதங்களைவிட கிறித்தவம் பெற்ற வெற்றிக்கு மேனாட்டுமோகம் ஒரு காரணமாகலாம். எனவே 'கிறித்தவம் பரவுவதைத் தடுப்பதற்காக இந்துமதம் சீர்திருந்த வேண்டியிருந்தது,' என்ற பேராசிரியர் வேலுபிள்ளையின் கருத்து சிந்திக்கற்பாலது.[4] ஏனெனில் சுவாமி இராமகிருஷ்ணரின் வாழ்வும் போதனையும் கிறித்தவத்திலிருந்து இந்துமதத்தை சீர்திருத்துவதுடன் பழமையையும், புதுமைநோக்குடன் இணைத்து ஒருமைப் படுத்துவதையே இலட்சியமாகக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. எனினும் மகான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் எதையுமே தீவிரமாக்கிக் கட்டாயப் படுத்த விரும்பியதாகத் தெரியவில்லை. ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய சீர்திருத்தத்தின் பிரதானகளமாக ஆரம்பத்தில் விளங்கிய வங்காளத்திலேத்தான் 1833இல் இராஜாரம் மோகன்ராய் மறைந்ததும்; 1836இல் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவதாரம் செய்தார். ஆனால் முன்னைய இயக்கத்தின் தீவிரப்போக்கோ, சமூகம் சார்ந்த முற்போக்குக் கருத்துக்களோ, மேனாட்டு அபிமானமோ' எதுவும் அவரைப் பாதித்தாகக் கூறமுடியாதுள்ளது.

**சாதிபற்றிய சிந்தனை**

தம்மிலே தமது தீர்க்க தரிசனத்தால் அவர் உதிர்த்த உபதேசங்களில்-தமக்குத் தாமே அமைத்துக் கொண்ட இல்வாழ்க்கை அமைப்பிலே பரமஹம்சரது சமூக, சமுதாய நோக்குப் புதைந்து கிடக்கின்றதெனலாம். சாதிபேதங்களைக் கடந்த தமது சமய உணர்வினை மிகச் சிறுவயதில் 'கதாதரர்' ஆக வாழும்போதே செயற்படுத்தினார். நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும் பெயர்பெற்ற கதாதரர் தனது உபநயனச் சடங்கு நடந்தவேளையில் தமது 'முதற் பிச்சை'யினை (உஞ்ச விருத்தி-பிராமணர் கடமைகளுள் ஒன்று) அவர் 'தானி' எனப் பெயர் கொண்ட ஒரு கொல்லசாதிப் பெண்ணிடம் பெற்றுக் கொண்டார். பிராமணவகுப்பிற் பிறந்து இவ்வாறு செய்தல் தகாது என்று கூறியோரை அவர் பொருட்படுத்தவில்லை. 'அந்தணர் என்போர் அறவோர்' என்பதை பேச்சால் அல்ல-செயலால் நிறுவினார். மக்களிடம் சமநோக்கினைச் செலுத்துவதன் மூலமே மனிதன் உயர்நிலையடையலாம் என்பதே அவர் நோக்கமாயிருந்தது.

தட்சணேஸ்வரம் காளி கோவில் பூசகராகப் பத்தொன்பதாவது வயதில் பொறுப்பேற்றார். தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையில் அவர் தம்மையே மறந்து விடுவதால், கோயிலின் பின்னுள்ள நெல்லிமரத்தடியில் சுடலையாக முன்பு இருந்த ஓர் இடத்தில் தினம்தோறும் தியானப் பயிற்சியில் ஈடுபட்டார். அவரது உறவினர் ஹிருதாய் என்பார் அதனைப்பற்றியறிய விரும்பி அவ்விடம் சென்று பார்த்தார். சுவாமி அம்மணமாகத் தியானத்தில் ஈடுபட்டதைக் கண்டார். பின்னர் பரமஹம்சரிடம் இது பற்றி விசாரித்தபோது;

'இறைவனைப் பற்றித் தியானிக்கும்போது எல்லாக் கட்டுகளினின்றும் விடுபட்டிருக்க வேண்டும். நமது பிறவி முதலே நம்மிடம்பகை, வெட்கம், குடிப்பிறப்பு, குலப்பெருமை, அச்சம், ஒழிப்பு, ஜாதி, துயரம் என்ற எண்வகை விலங்குகள் உள்ளன. தெய்வ சிந்தனைக்கு இந்த எட்டு அழுக்கும் சாதியபிமானமும் இடையூருக உள்ளன'

என்ருர். எனவே சாதியபிமானத்தையும், கட்டுக்களையும் ஒழிக்கவே அம்மணமாகவும், பூணூலைக் கழற்றி விட்டும் தியானம் மேற்கொண்டதை நோக்கும்போது வைதிகப்பிராமணராயிருந்தும், சமத்துவத்தைச் செயலிற் காட்டினுர். 'சமத்துவம்' நிலவுமிடம்மாயனம் என்பதனுலே அந்த இடத்திலே தியானம் பூண்டார் போலும்.

**சேவை செய்யும் தியாகி**
**சிருங்கார போகி**
**ஈசன் பொற்பாதம் தன்னை**
**நாடிடும் யோகி, எல்லோரும் ஒன்ருய்**
**இங்கே உறங்கிடும் வீடு,** (மயானம்).

என்ற பிற்காலத் தனிப்பாடல் மானிட சமத்துவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை அப்படித்தான் சுட்டுகிறது. சுகப்பிரம்மரிஷி போன்று பரமஹம்சரும் அம்மணநிலையிலே சமாதி காண்பதாவது, பிரம்மத்தை அறிந்தவனிடத்து இனபேத வேறுபாடுகள் ஒழிந்துவிடும் என்பதைப் புலப்படுத்துவதாகவும் உள்ளது.

பரமஹம்சர் சிறந்த வைதிக அந்தணர் குடித் தோன்றிய போதும் குலப் பெருமையையும் துறந் தவர்.

'நல்ல அந்தணர் ஒருவர்க்கு சுயநலப்பற்றுச்
சிறிதும் இல்லையாயின்,
தீண்டத்தகாதவன் எனக் கருதப்படுவோரிடத்
தும் உணவை ஏற்கலாம்.
அதில் தோஷமில்லை. அகங்காரம் உள்ளவரை
தான் வேற்றுமை வரும்'

என்றார். தீயவர்களையும் வெறுத்தல் தகாது. ஏனெனில் தீயோனிடமும் காளியின் வல்லமை அதிர்ந்தியங்குகின்றது என்பது அவரது கருத்தாகும்[5]. மேலும் இவரது இத்தகைய மனப்பாங்கினை அவர் வழிபட்ட தெய்வவடிவினைக் கொண்டும் உணரலாம். அவர் வழிபட்ட சக்தியின் தோற்றம் பயங்கரமான காளி தேவி வடிவமாகும். அதன் கழுத்தினிலே கபாலமாலை, கரத்தினிலே கொலைவாள், கைகளுக்கிடையில் எலும்புமாலைகள், உக்கிரமான திருக்கண்கள் இவையனைத்தும் காளித்தாயின் உருவத்தில் காணப்பட்டன இதுபற்றிப் பரமஹம்சரிடம் வினவப்பட்டபோது அவர் உலகின் நிலையாமையையும், தேவியின் மகாகருணையையும் அவ்வடிவம் புலப்படுத்துவதாகக் கூறியுள்ளார். இவ்வளவு பயங்கரத்திற்கு மத்தியில் அம்பிகையின் கண்கள் அருளை உமிழ்ந்திருக்கும் எனக் கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றூர். அர்ச்சுனனின் காண்டீபமும், திருமாலின் சாரங்கவில்லும், தீயோரின் தீமைகளைச் சங்கரித்து நல்லோரை அறத்தைக் காவல்காக்கும் கருவிகள் அவை என்பதைப் புலப்படுத்துகின்றது. அதனையே தான் தேவியின் வாளும் ஏனைய பிற அம்சங்களும் பிரதிபலிப்பன என்பதையே சுவாமி உணர்த்தியுள் ளார் எனலாம். தருமம் நிலைகுலையும்போது, அதனை நிலைநாட்டுவதற்காக தருமவான் ஆயுதமும் ஏந்து வதில் பாதகமில்லை என்பதைத்தான் கீதையும், அன் னையின் கொடுவாளும் உபதேசிக்கின்றன எனலாம்.

ஆனல் பரமஹம்சர் அம்பிகையை ஆராதித்த போதும் ஆத்மபலமும், பிரேமபக்தியும் சரணுகதி நெறியும் கூட வாழ்வில் உயர்நிலை தரவல்லது என வாழ்ந்து காட்டினூர். எங்கே அன்பு, விசுவாசம் இரக் கம், கருணை உண்டோ அங்கே சமத்துவம், சகோத ரத்துவம், சமாதான சுகவாழ்வுபிறக்கின்றது. அங்கே வேற்றுமைகள் மறைகின்றன. ஆன்மஒருமைப்பாடு தான் அத்வைத வேதாந்தம் மானுட சமூகத்திற்கு வழங்கியுள்ள மாபெரும் தருமநெறி என்பது இராம கிருஷ்ணரின் வாழ்க்கை நோக்காகும். ஹரீசன் என்ற துஷ்டன் பரமஹம்சரின் மறைவின் பின் ஒருநாள் அன்னை சாரதா தேவியாரைத் துன்புறுத்தும் நோக் குடன்வந்தான். அருளே வடிவான அன்னை அந்த வேஷதாரியைக்காலால் உதைத்து அவன் மார்புமீது காலூன்றித் தடிகொண்டு முகத்தில் நையப்புடை தார் என்பதை அறிகிறோம்.[6] ஆதலால் கொடுமை களை அகிம்சையால் தடுக்கமுடியாதபோது அவற்றை எதிர்த்து சங்கரிக்கவேண்டும் என்பதே அவர்களிருவர தும் வாழ்க்கையின் வாயிலாக சமூகம் படிக்கவேண் டிய பாடமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிவேறுபாட்டைச் சமூகத்திற் புறக்கணித்தோர் ஆன்மநிலையில் உயர்வடைவர் என்பதற்கு பரமஹம்சர் வாழ்வில் மேலும் இரு உதாரணங்களை நாம் காணலாம். பத்மலோசனபண்டிதர் என்பார் வைதிக ஆசாரம் மிகுந்தவர். பரமஹம்சர் ஒருநாள் அவரிடம் தான் கீழ்க்குலம் சார்ந்த ஒருவரின் வீட்டில் கூட்டத்திற்குச் செல்கிறேன், வரச்சம்மதமா? என வினுவினர், 'தங்களுடன் பறையன் வீட்டிற்கும் வருவேன் சாமி' என்ருர் பண்டிதர். கப்டன் விஸ்வநாதர் என்பார் பரமஹம்சரிடம் அன்பு பூண்டவர். இராமகிருஷ்ணர் ஒருமுறை பிரம்மசமாஜியான கேசவ் சந்திர சென் என்பார் வீட்டுக்கு போகவேண்டும் என்று கூறியபோது விஸ்வநாதர் தடுத்து சுவாமி நீங்கள் அங்கு போகக்கூடாது' சென் வைதிக ஆசரத்தைத் துறந்தவர், வேறு சாதியில் திருமணத்தொடர்பு கொண்டவர், ஆசாரமில்லாத இடத்துச் செல்லலாகாதென்ருர். இராமகிருஷ்ணரோ அன்பாகவே;

'நீர் வைதிக ஆசாரத்திலிருந்தும் வேருெரு சமயத்தவரிடம் சென்று சேவகம் செய்கிறீரே? அவர்களைப் போற்றி நடந்து எங்கள் சமயத்திற்கும், ஆசாரத்திற்கும் ஒவ்வாத இடத்திற்குச் செல்லும்போது அது உமக்கு சரியாக இருக்கிறதா? என வினுவியதும் தமது தவறை அவர் உணர்ந்து கொண்டார்.'

இவ்வாறு சுவாமிகள் ஆசாரம் என்பது அவரவர் நடத்தையையும், பண்பையும் பொறுத்தது எனத் தாம் சார்ந்திருந்த சமூகத்திற்கும் அறிவுறுத்தினுர்.

**இல்லறம் போதிக்கும் நெறி**

இராமகிருஷ்ண பகவானது சிந்தனைகள் அனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் சமூகத்தைச் சீராக்கும் நோக்கு மறைந்திருக்கின்றது. ஆயினும் அவர் அதனை மேடையிட்டு, தர்க்கித்து, வாதிட்டு, பிரசாரமயப்படுத்தி தம்மைப் பிரபலப்படுத்த விரும்பினரில்லை. அமைதியாக, அளவாக, தார்மீகமாக, தமது வாழ்விலே அத்தனையையும் சாதித்து வாழ்ந்து காட்டிய பெருமானகத் திகழ்கின்றார். சமுதாயத்தின் இரு கண்கள் இல்லறம், துறவறம் என்பது இந்துதருமத்தின் உயர் நெறியாகும். இந்த இரண்டு நெறியையும் ஒன்றெனஉணர்த்தி, இல்லறத்திலேயே மனித சமுதாயம் உயர்ந்த உத்தமசமய நெறியில் வாழமுடிந்தால் அதுவே தூயதுறவு நெறியாகும் என்பதை உணர்த்தினர். இந்துமத ஞானிகள், ரிஷிகள் அனைவருமே இல்லம் துறந்த துறவிகள் அல்ல என்பதையும், மனைவியருடன் வாழ்ந்தே இல்லற தருமத்துடன் துறவறம் காத்து ஞானநூல் செய்தனர் என்பதையும் வேதநூல்களும், உபநிடதங்களும் புலப்படுத்தியுள்ளன. அருகிப்போன இருவகை நல்லறங்களையும், மீண்டும் புனிதப்படுத்தவும், தூய்மைப்படுத்தவும் வேண்டும் என்பதையே ஸ்ரீ சாரதாதேவி சமேத இராமகிருஷ்ணராக அவதரித்து வாழ்ந்ததின் மூலமாகப் புனிதப்படுத்தி இல்லறத்தின் உயர் இலட்சியத்தைச் சமுதாயத்தில் வலியுறுத்தினர்.

கடுமையான பிரமச்சரியம் அவரை மனநோயாளியாக்கிவிட்டதெனத் தப்புக்கணக்குப் போட்ட இராணி இராசமணியம்மையார் இரு விலைமாதரை பரமஹம்சர் இளைஞராக இருந்தபோது அவரிடம் அனுப்பினர். பரமஹம்ஸரோ அவர்களிடம் தேவி தரிசனம் கண்டு சமாதிநிலையடைந்தார். இது அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரது புலனடக்கத்திற்குக் கிடைத்த பெருவெற்றியா கும். அவ்வாறே திருமணம் செய்தால் புறவுலக நாட்டம் ஏற்படுமென நினைத்த தாயார் சந்திரமணி தேவியார் மணம் பேச முற்பட்டுக் களைத்த சமயம் தானே முன்வந்து தமக்கு மனைவியாகப் போகும் தெய்வப்பெண்ணை அறிவித்துத் திருமணமும் செய்து கொண்டார். இருபத்து மூன்றும் வயதில் ஐந்து வயதுச் சிறுமி சாரதாதேவியாரை மனைவியாக்கிக் கொண்டபின், காலப்போக்கில் மனைவிக்கும் ஆத்ம சாதனைகளில் பயிற்சியளித்தார். பால்ய விவாகமாக இருந்தும் அதனை எதிர்த்து அக்காலம் பிரசாரம் நடைபெற்றிருந்தும் தமது திருமணப் பந்தத்தை அவர் ஒரு குழந்தைப் பெண்ணுடனே இணைத்துக் கொண்டார். காரணம் குழந்தைகள் தெய்வத்திற் குச் சமமானவர்கள் என்பதாக ஆகலாம்.

குழந்தை என்பதால் தமது புலனடக்கத்தை மே லும் தீவிரமடையச் செய்யலாம் என்பதோ; அன் றியும். சிறுகுழந்தைகட்கு சிறுபருவத்திலேயே நல்ல உயர்வான பழக்கம், பண்புகளைக் கற்றுக் கொடுக்கலாம் எனக்கருதியோ என்னவோ பரம ஹம்சர் தமது எண்ணப்படியே தம் மனைவியை தெரிந்து, பயிற்றுவித்துத் தூய இல்லத்திற்குரிய தர்மபத்தினியாக்குவதிலும் வெற்றி கண்டார்.

ஆதலால்தான் பிரம்மசமாஜம் உருவாகி வேதாந்தக் கருத்துக்கள் வளர்ச்சிபெற்ற காலத்திலும் பரமஹம் சர் கலப்புமணத்தாலோ, சமபந்திபோசனத்தாலோ, வயதுவந்த விவாகத்தாலோ, மாதர் மறுமணத்தா லோ மட்டும் ஒரு சமுதாயம் முன்னேறிவிட்டதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதமுடியாது என்பதையும்; அறத்தையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட இல்வாழ்வு தான் சமுதாயத்தின் ஆணிவேராகும் - ஏட்டுக்கல்வியல்ல - என்பதையும் உணர்த்தியதுடன் செயலிலும் சாதித்துக்காட்டினுர்.

ஆகவே தேசமுன்னேற்றம் என்பது மானிட உணர்வில், அன்பில், ஒற்றுமையில், சத்தியத்தில் நிலைக்கும்போதுதான் மேற்குறிப்பிட்ட முன்னேற்றங்களில் சாசுவதமான பலனை எதிர்பார்க்க முடியுமென்பது பகவானின் திருவுள்ளமாகத் தெரிகிறது. சமுதாயத்தின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு உலகியலில் அறவாழ்வு அத்தியாவசியமானது என்பதே அவரது ஆழமான போதனை. பெண்களை அவர் பராசக்தியாகவே போற்றிவந்தார். தமது மனைவியை அவர் ஜகன்மாதாவாக வழிபட்டதை நோக்குமிடத்து; கன்னி மேரிமாதா யேசுபிரானின் அன்னையானது போல பரமஹம்சரின் அன்னையாகச் சாரதாதேவியார் திகழ்ந்தாரோ என எண்ணத் தோன்றுகின்றது. ஒரே வேறுபாடு, யேசு குழந்தையாகப் பிறந்ததால் அன்னை உறவு ஏற்பட்டது; பரமஹம்சர் சிறுமியை மணந்து அன்னை உறவை ஏற்படுத்திக் கொண்டார். தமது குடும்ப வாழ்வின் வாயிலாக பல்வேறுபட்ட ஞானவாழ்க்கையினைச் சமுதாயத்திற்கும், முதற்கண் தமது சீடர்கட்கும் விளக்கிக் காட்டினுர். வாழ்க்கைக்கு உணவு அவசியம்; ஆனுல் ஆரோக்கியவாழ்விற்கு அளவான உணவு அவசியமென்ருர்.

'பகலில் திருப்தியாகவும், இரவில் குறைவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் சாப்பிடவேண்டும், உடலுக்கு வெப்பத்தையும் மனத்திற்குச் சஞ்சலத்தையும் தரும் உணவினை விலக்க வேண்டும்.

என்று கூறும்போது பிற்காலம் காந்தியடிகளின் வாழ்வை இது நினைவூட்டுவதாகவும் உள்ளது.

'தாயிடமும் தந்தையிடமும் சரியானபடி பக்தி செலுத்தாதவன் கடமைதவறியவன் அவனுக்குத் தெய்வத்திடமுள்ள பக்தியிலும் உண்மையிராது'

என்ற விடத்தில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஒளவை வாக்கை உறுதிப்படுத்துவதன் மூலம்; பெற்றோர் மூலமாகப் பிள்ளைகள் திருந்துவது சமூகம் திருந்துவதற்கு அனுசரணையானது எனக்காட்டியுள்ளார்

சமுதாயத்தில் பணம் என்னும் செல்வம் மிகக் கவனமாகக் கையாளாதவிடத்துப் பெரும்தீங்கு செய்யும் என்பதையும் அறிவுறுத்தினர்.

'பணம் படைத்தவனிடத்தும் செல்வாக்குடையோனிடத்தும் அவதானமாகப் பழகவேண்டும். அவர்களிடத்தில் தருமத்தில் பிரியமுள்ளவன் சகவாசம் வைத்தலாகாது அவர்கட்கு (பக்தனுக்கும்) விரைவில் துன்பம் செய்யுமாற்றல் இத்தகையோருக்குண்டு'

எனவே பணமும், செல்வாக்கும் அளவுகடந்தால் அது தன்னைத் துன்பப்படுத்துவதுடன் பிறரையும் துன்பத்திற்காளாக்கும் என்ற சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்த முற்றிலும் பொருத்தமான தெனலாம். இன்றைய நடைமுறை உலகும், சினிமா உலகும் உதாரணமாக இவற்றிலே சிலவற்றைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம் இத்தகைய தீமைகளிலிருந்து மானிட சமுதாயம் விலகியிருப்பதற்குப் 'பற்றறுத்தலே, முக்கியசாதனமென பரமஹம்சர் நற்பாதையையும் காட்டியுள்ளார். வாழ்வில் பற்றை விலக்க வேண்டுமேயொழிய, வாழ்வினை விலக்கத் தேவையில்லை என்ற கீதோபதேசத்தை அழகாகப் பேதித்துள்ளார்.

இராமகிருஷ்ணரது இல்லறமே அதற்குத் தகுந்த உதாரணமாகும.

**'படகு தண்ணீரில் இருக்கலாம் தண்ணீர் படகினுள் இருக்கக்கூடாது ஆன்மஞானி இல்லறத்தில் இருக்கலாம். உலகப் பற்று அவனுள் இருக்கலாகாது. காந்த ஊசி வடக்கையே காட்டுவதால் கப்பல் திசைமாறுவதில்லை. மனமும் கடவுளேயே சதாநாடி நின்ருல் சம்சாரமும் திசைதவறிப் போகாது'.**

எவ்வளவு அருமையான வழிகாட்டல். இதன் வழி நடப்பதற்குத்தான் எத்தகைய ஆன்மவீரம் இருக்க வேண்டும் என நினைக்கும்தோறும் மனம் புளகாங்கிதமடைகிறது. 'இல்லறத்தில் துறவறம்' மிகவும் கடினமான பாதையாகும். போதிய மனபரிபாகம் என்னும் உள்ளமுதிர்ச்சி அடையாதோர் சிறிது சிறிதாக உணர்ச்சிக்கு அடிமையாகுவர். மனப்பக்குவம் அடைந்திருந்தாலோ முற்ருக விலகிவிடவும் கூடும். ஆனுல் 'அறவே விலகியிருந்தாலோ அல்லது ஆசை வலையில் அகப்படுதலோ இவ்விருபோக்கிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காதது பரமஹம்சரது வாழ்க்கையாகும் என அவரது இல்வாழ்வின்மேன்மையை சுவாமி சித்பவானந்தர் அழகாகப் புலப்படுத்தியிருப்பது[7] எவருக்கும் விளங்குவதாகும். 'உள்ளத்தை உலகநாயகிக்கு அளித்தாலும் வேதவிதிப்படி மணந்த உனது இச்சையைப் பூர்த்திசெய்ய வேண்டும்' எனத் தமது கடமை அதுவெனத் தம் மனேயாளிடம் பரமஹம்சர் கூறுகிருர். 'தங்கட்குத் திருத்தொண்டு புரிந்து உய்யும் பொருட்டு வந்தேனே தவிரத்-தங்களைப் பந்தத்திற் தள்ளுவதற் பொருட்டன்று' என்ற மனைவியாரின் இந்தப் பதிலானது எந்த ஒரு மனைவிக்கும் உள்ள கடமையையும், கணவனின் இலட்சியத்தை ஈடேற்றுவதில் மனைவிக்குள்ள பங்கினையும் புலப்படுத்துவனவாகும். காமத்தைக் கருதும் கீழான இயல்புகள் அவர் மனேயாளிடத்து அடிபட்டுப்போனதையே இவ்வுண்மை தெரிவிக்கின்றது. இல்லறம் ஆன்ம ஈடேற்றத்திற்குச் சாதனமாயிருக்க வேண்டுமே தவிர பாதகமாக, இடையூருக இருக்கலாகாது என்பதே பரமஹம்சரது வாழ்வின் போதனையாகும்.

அப்படியல்லாத திருமணம் ஆத்ம ஞானத்திற்குத் தடையென்பதே இராமகிருஷ்னரது கருத்தெனலாம். ஏனெனில்

> 'குரங்கு வேடன்காலில் உயிர்விடுவது போல ஆடவன் ஒரு பெண்ணின் காலடியில் உயிர் விடுகிறன். மங்கையின் உடலில் உள்ளது எலும்பும் சதையும் இரத்தமும் என்றெண்ணி அதில் மயங்காது, கடவுளை நாடவேண்டும்'

என்கிருர். காரணம்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'பெண்ணின் மீதும் பொன்னின்மீதும் கொண்ட பற்றினை அவித்தால் ஒழிய கடவுளைக் காண முடியாது. ஏனெனில் ஒரு தண்ணீர்க் குடத்தில் சிறிய துவாரமிருந்தாலும் அதன் வழி முழு நீரும் வெளியேறிவிடுதல் போல உலகப்பற்று சிறிது இருந்தாலும் மனிதனின் கடும் முயற்சிகள் வீணாகிவிடும்'[8]

என்பதாலாகும். இதனால் இராமகிருஷ்ணர் பெண்களைக் குறைவாக மதிப்பிட்டுள்ளார். என்பது பொருளில்லை. 'ஆணும் பெண்ணும் திருமணமாகி இரு குழந்தைகளைப் பெற்றுச் சந்ததி உற்பத்தி என்ற கடமையை நிறைவேற்ற வேண்டும் எனவும், 'பஞ்சவேள்வி செய்வது ஒவ்வொரு குடும்பஸ்தனது கடமை எனவும் சுட்டிக்காட்டி உள்ளார்.

'குடும்பஸ்தன் ஒருவனுக்குப் போகமும் யோகமும் இருக்கவேண்டும். அவன்பொருளையும் அருளையும் தேடவேண்டும். பொருளில்லாத அருளால் முகமே உலர்ந்துவிடும். அருளில்லாத பொருளால் அவனே அழிந்து விடுவான்''

என்பதே அவரது உபதேசமாக உள்ளதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது.

'தராசில் எடை சமனாக இருக்கும்போதே முள் சமனுடன் நிற்கும். முள்போன்றது மனது. மனதில் கடவுளும் இலௌகிகமும் சமநிலையில் இருக்கும் போதுதான் யோகம் பிறக்கும். மேலுள்ளபொருள் பரம்பொருள். கீழுள்ள முள் மனது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சமத்துவம் யோகம்' என்ற கீதையின் போதனையே இராமகிருஷ்ணனது அத்வைத வேதாந்தமாகவும் காணப்படுகிறது. எனவே பற்றற்ற சமநிலையுண்டானால் ஆண்பெண் வேறுபாடு ஞானத்திற்குத் தடையில்லை என உணரலாம்.

'கோபியரிடம் எட்டுத்தளைகளில் ஏழுதளைகள் விலகிவிட்டன நாணம் என்ற ஒரு தளையிருந்தது. ஆடையைப்பறித்ததன் மூலம் கண்ணன் அதனின்றும் அவர்களை விடுவித்தான்''

என்ற பரமஹம்சர் வாக்கானது ஜீவாத்மபரமாத்ம ஐக்கியத்தில் ஆண் பெண் வேற்றுமைகடந்த ஒருமையுணர்வு வேரூன்றுவதைத் தெளிவாக்குகின்றது. இதனையே ஆண்டாளும், மணிவாசகர் திருக்கோவையாரும் புலப்படுத்தியுள்ளன எனலாம். எனவே திருமணம் ஆன்மஞானத்திற்கு உதவாவிடத்து வேற்றுமைகள் மிகுந்த நிலையிலே அது மனிதனுக்குப் பந்தமாகின்றது. 'ஆண்–பெண்' என்ற வேற்றுமையை விட மன வேற்றுமையால்தான் திருமணம் ஞானத்திற்குத் தடையாகின்றதென்பதை இராமகிருஷ்ணர் விளக்கியுள்ளார் எனலாம்.

'கணவனுடைய ஆத்மசாதனத்திற்குத்துணை புரிபவளையே வாழ்க்கைத்துணை எனலாம். இரண்டொரு பிள்ளைகளைப் பெற்றபின் சகோதர சகோதரிபோல் வாழ்வோர் சிறந்த குடும்பஸ்தர். இல்லறமோ, துறவறமோ எதிலும் குடும்பப் பற்றை ஒழிப்பதே உயர்ந்தது.

என்பது அவர் வாக்கு. ஆகவே ஆடவர்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிரும் அவரவர் இயல்பை அனுசரித்து முன்னேற வேண்டும். எந்தவேளையிலும் தன் சொந்த இயல்பை இழந்துவிடலாகாது என்றார். இக்கருத்தானது பிற் காலம்,

'பெண் தன்னைப் பெண்ணென்று கருதும்படி
செய்வதைவிடத்தான் பெண்ணல்லாத
வேறொன்றெனக் கருத விரும்பமாட்டாள்'[9]

என இந்திய மாதர் நிலைபற்றிக் கூறுமிடத்து விமர் சித்துள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஆனால் ஆபத்து வேளையில் வீரலக்சுமி வடிவையும், காளித் தாய் வடிவையும் பெண்கள் எடுக்க வல்லார் என் பதையும் அன்னை சாரதா தேவியாரின் செயல் மூலம் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.[10]

**பெண்ணுரிமை பற்றி ;**

பெண் உயர்நிலை நோக்குபற்றி பரமஹம்சரின் அபிப்பிராயம் மிக உயர்ந்ததாகவே இருந்தது கணவனை இழந்த பெண்கள் நிலையை அவர் நன்கு விளக்கியிருந்தார். 'சதி' என்னும் உடன் கட்டை ஏறும் வழக்கம் வெறும் சம்பிரதாயமாக மாறிவிட் டதை அவர் உணர்ந்திருந்தார். 1829இல் இராஜா ராம் மோகன்ராயின் பெருமுயற்சிகளால் இக்கொடு மை சட்டரீதியாகத் தடுக்கப்பட்டது ராமகிருஷ்ணர் வாழ்ந்த காலகாலத்திற்குச் சற்றுமுன்பேயாகும்.

"சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கு அடிமைகள் என்ற நிலையிலே வாழ்ந்து வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் விடயத்திலே ஆண்கள் உண்டாக்கிய தான் தோன்றித் தனமான விதியென்றும், அதற் குரிய காரணம் தெரியவில்லையென்றும் அஃது இந்தியாவிலேதான் காணப்படுகிறதென்றும் கரு தும் ஒரு கொள்கை சில காரணத்தை முன்னிட் டுப் பரவிவந்துள்ளது. இக்கொள்கை சரித்திர ஆதாரமற்றது. உயர் வகுப்பாரிடையே இவ் வழக்கம் ஓரளவிற்குச் சமூக சம்பிரதாயமாக இருந்து வந்தது. இதற்கு இணங்காத சிலர் நிர் பந்திக்கப்பட்டார்கள். மற்றையோருடைய கொள்கைக்காக இராணுவத்திலே கட்டாய சேவை செய்து துன்பப்பட்டோ, இறந்தோ போகும் இராணுவவீரர் போல அவர்கள் நிலை யிருந்தது. இந்தவகையில் அது தவறானதே"[11]

என்பதால் சட்டரீதியாகத் தடுக்கப்பட்டதை டாக்டர் ஆனந்தக்குமாரசாமி வரவேற்றார். உண்மையில் 'சதி' என்பது பதியைப் பிரிந்தபின் உயிர்வாழ விரும் பாத மனைவியின் ஆரா அன்புநிலையைக் குறிப்பதெ னலாம். தம்பதிகள் 'சதிபதி' எனப் போற்றப்படுவ தும் இதனைச் சுட்டும், பரமஹம்சர் காலம் உடன் கட்டை ஏறும் வழக்கத்திற்குச் சட்டப்படி தடை வந்துவிட்டது பரமஹம்சர் தமது திருமேனி நீத்த பின்னர் கைம்மை நிலையில் கூடத் தமது மனைவி யாருக்கு உயர்நிலை அளித்துள்ளார். கணவனைப் பிரிந்தபின்பு கைம்மை நிலையில் அறப்பணி மேற் கொள்வதுதான் பரமஹம்சர் போதனையாகக் காணப்படுகிறது. இந்து தருமத்திற்கு ஏற்பப் கைம் மை நோன்பின்- விதவைக் கோலத்தை ஏற்கச் சார தாதேவியார் முற்பட்ட சமயம் பரமஹம்சரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகொடுத்து அந்த வேடம் அவசியமற்றது என உணர்த்தியிருந்தார்.

> "நீ யாது செய்கிறாய். நான் மாய்ந்து போய் விடவில்லையே. ஒரு அறையினின்று மற்றோர் அறைக்குப் போனது போன்றுள்ளது நான் இப்பொழுது அடைந்துள்ள நிலை. இத்தகைய கைம்பெண்கோலம் எதற்காக?"12

என்றார். பெண் காலத்திற்கேற்பத் தனது அனுபவங்களை மாற்றிக் கொண்டாலும், விவேகமான புத்தியுடனும், சேவை நோக்குடனும் செயற்படவேண்டுமே தவிர வெறும் வெளிவேஷங்களால் பயனில்லை என்பதே பரமஹம்சரின் துணிபாகும், இன்னொரு சமயம் சாரதாதேவியார் அவரது ஊர்சென்ற ஆண் பெண் அடியார் கூட்டமொன்றுடன் சேவைக்காகப் புறப்பட்டசமயம்,

> 'வேற்றூர் சிலருடன் விதவை ஒருத்தி வெளியூர் போவது தகுமோ? என ஆட்சேபம் உண்டானது, பரமஹம்சருடன் சிறுவயதுத் தோழியராக இருந்த ஒரு மூதாட்டியார் சிலர் கதாயின் பெண்டாட்டி சாமான்யமானவளல்ல. கதாயைப் போன்றே தெய்வத்தன்மை வாய்ந்தவள்"13

எனக் கூறியதும் எல்லோரும் அடங்கிப் போய்விட்டனர். அவ்வாறு வயது சென்ற தாய்மாரே போற்றுமளவிற்கு கணவனையிழந்த பின்பும் அன்னையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுவதற்கு பரமஹம்சரது வாழ்க்கை நோக்கே காரணமாகும். இதிலே அவரது சமூக தர்ம லட்சியமும் காணப்படுகின்றது. இந்துப் பெண்களின் சிறந்த வாழ்வு கைம்மையிலோ, மறுமணத்திலோ விதவைக் கோலத்திலோ வளருவதில்லை. அறவழிப் பட்ட வாழ்வுடைய பெண்கள் எந்தநிலையிலும், எந்த வயதிலும் உயர்நோக்கம் கொண்ட இந்துப் பெண்களாகத் தம்மைப் புனரமைத்துக் கொள்ளமுடியும் என இதனுல் உணர்த்தப்பட்டுள்ளதெனலாம். இன்றுள்ள ஐரோப்பியப் பெண்கள் பலர் (எல்லோருமல்ல) பொருளாதாரப் புல்லுருவியாகி விட்டனர் என ஆனந்தக்குமாரசாமி குறைப்பட்டுள்ளார். காதலின் புறத்தோற்றம் மேல்நாட்டிலே புலனின்பத்தை நோக்கமாகக் கொண்டது. இந்தியாவில் இல்வாழ்க்கை உன்னதமான ஒரு தியாக வேள்வியாகவே ஆண் பெண் இருபாலார்க்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 'கணவனே மனைவி' 'மனைவியே கணவன்' என்ற நிலைப்பாடானது அன்புணர்வில் ஒன்றி ஆன்மபந்தத்தில் ஐக்கியப்படும்போது அங்கே 'சமத்துவம்' கடந்த ஒருமைப்பாடு வேரூன்றுகின்றது.

"ஐரோப்பா ஆசியாவின் பெருமையை அறிந்து கொள்ளும் முயற்சியை இன்னும் தொடங்கவில்லை. ஆசிய சிந்தனையாளருக்கு ஐரோப்பா பெரிதும் கடமைப்பட்டுள்ளதென்பதை முற்றாய் அறிந்து கொள்ளவில்லை. அன்றியும் ஐரோப்பா ஆசியாவிற்குப் பெரும் தீமைகளை இழைத்துவிட்டது —— நவநாகரிகம் என்ற நச்சுக்கிருமி ஐரோப்பாவின் நேரடித் தொடர்பின் பயனுகத் தொற்றியிருக்க வேண்டும்"[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கலாயோகியின் ஐயம் இன்று முற்றிலும் உண்மையாகிவிட்டது. வெறும் புலனின்பத்தாலும் அறநெறி பிறழ்ந்த வாழ்விலுலும் இன்று மானிட சமுதாயத்தை 'எய்ட்ஸ்' என்னும் பயங்கர நோய் தொற்றியிருப்பதைக் காணும்போது புலனின்ப நாட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்காது அறவாழ்வின் அடிப்படைதான் மனுக்குலத்தின் மாபெரும் சாதனை மட்டுமல்ல, நிரந்தர முன்னேற்றமுமாகும் என வாழ்ந்து காட்டிய பரமஹம்சர் பெருமதிப்பிற்குரியவராகின்றார்.

## வழிபாட்டுநெறி

அடுத்தாக இந்துசமயத்தில் காணப்படும் வழிபாட்டு நெறி பற்றிய விடயம் மிகச்சிக்கலானது. அதிலும் உருவ வழிபாடு என்னும் நெறி பற்றிய இந்துக்களின் தாற்பரியம் ஆழமான சமய உணர்விலும், அனுபவத்திலும், விளங்கிக் கொள்ளவேண்டிய தொன்றாகும். சமயநெறி நிற்பதற்கோ கடவுளை வழிபடு தெய்வமாகக் கொள்வதற்கோ முதற்கண் வேண்டுவது 'நம்பிக்கை'யாகும். அதை ஆழமான விசுவாசம் என்று கூடச் சொல்லலாம். எதை ஒருவன் நற்சாதனமெனப் பின்பற்றுவானே அது அவனது சமயநெறியாகின்றது. புத்தர் பெருமான் தருமத்தை நம்பிக்கை நெறியாக்கினர்; யேசுபெருமான் பாவநீக்கத்தை நம்பிக்கை நெறியாக்கினர்; அல்லா உருவமல்லாத தொழுகை முறையை நம்பிக்கை நெறியாக்கினர். இவையனைத்தும் மனுக்குலத்தை உயர்த்தும் சாதனங்களேயாகும். எனவேதான் சாதனைகளால் உயர்ந்த நிலையடைந்தவர்களை மனுக்குலம் 'கடவுள் நிலைக்கு' உயர்த்தி அவர்களையும் வழிபாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிக்குட்படுத்தியது. அதனுல் தனிமனித வழிபாடு தோன்றவும் இவைஒரு காரணமெனலாம். இவ்வாறே காந்தியும், அண்ணுவும், மார்க்ஸ்சும், லெனினும் கூட சமத்துவத்தை, சமதர்மத்தைச் சாதித்து வெற்றி கண்டு அந்நாடுகளின் தலைமைப்பீடத்தில் அரசியற் கடவுளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். ஆனுல் அரசியல் காலத்திற்குக் காலம் மாறுவது. அன்பும், சத்தியமும், உண்மையும் கலந்த அறப்பொருள் சார்ந்த சமய உணர்வு ஒரு போதும் அடிப்படைத் தருமத்தை இழப்பதில்லை என்ற நியதியின் அடிப்படையில் புத்தரும், யேசுவும் இன்றும் மனுக்குலத்தின் சமய அரங்கிலே பெரும்பான்மைச் சமுதாயத்தின் புரட்சியான சமய சிந்தனையாளர்களாக மட்டுமன்றி மதத் தலைவர்களாகவும் அவ்வச் சமயக் கடவுளர்களாக ஆராதிக்கப்படும் நிலையினையும் தத்தம் சாதனைகள் மூலம் அடைத்திருந்தனர். இதன் எதிரொலியாகவே இன்று உலகநாடுகளில் பொதுவுடைமை நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ள மக்கள் இவர்களில் ஒருவரைத் தமது சமயத்தலைவராக அல்லது கடவுளராக அங்கீகரித்து உள்ளனர். இந்தியா, நேபாளம், இலங்கை, மொறிஸியஸ் போன்ற நாடுகளில் இந்துக்கள் இவர்களைத் சமயத்தூதர்களாக அங்கீகரித்துள்ளனர்.

இவற்றினின்றும் புலப்படுவது யாதெனில் மனித்தத்தோற்றம் கொண்ட அதிசக்தி வாய்ந்த மனிதர்கள் கடவுள் நிலையை அடைகின்றனர் அல்லது கடவுளாக்கப்படுகின்றனர். ஆகவே இந்து சமயமானது சாதாரண தோற்றமுடைய மானிடர்க்கு இவ்வளவு சக்தியெனில் பிறப்பிறப்பற்ற சக்தி அசாதாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானதென்றெண்ணித் தத்தம் கடவுளர் வடிவங்களை இரண்டு கைகளை நான்காகவும், நான்கை எட்டாக வும், பன்னிரண்டாகவும் ஒரு முகத்திற்குள்ள சக்தி பெரிதெனில் அதனைவிட இருமுகம், ஐந்து முகம், ஆறுமுகமெனில் அதிசக்தி வாய்ந்த அமானுஷ்ய வடிவங்களிலும் ஏற்படும் என்றவாறு; உண்மையினை யும், இயற்கைச் சூழலையும் இணைத்து கடவுளர் வடிவங்களை உற்பத்தி செய்தது. இவ்வாறுக்வே நிறம், குணம், வடிவம், உருவமற்ற ஞானப்பெரும் சக்தியானது நிர்குணநிலையினின்றும் சகுணநிலைக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கவேண்டும். எனவே உருவ வழிபாடு அறிவெனும் பரப்பிரம்மத்துடன் மனிதனை இணைக்கும் ஒரு பாலமாக இந்துக்களிடையே அமைந் தது. கரைசேரும்வரைதான் பாலமும் தேவை; ஏணி யும் தேவை; ஓடமும் தேவை; உருவமும் தேவை. கடந்தநிலை அடைந்தபின்னர் அவற்றை மனிதன் உடைத்தெறிவதில்லை. ஏனெனில் தனக்குப் பின்வரு வோர்க்கும் அவை ஞானசாதனங்களாகப் பயன்பட வேண்டுமென்ற உயர்ந்த எண்ணப்பாங்கினாலாகும். ஆனால் சிலர் கரை சேர்கின்றார்கள்; சிலர் கடலில் மூழ்குகிறார்கள்; சிலர் ஏற்றம் அடைகிறார்கள்; சிலர் தவறி வீழ்ந்து உடைகிறார்சள். அது ஏறியவர்கள தும்; உபயோகித்தவர்களதும் ஞான சூனியத்த வறே தவிர ஏணியினதும் பாலத்தினதும், ஓடத்தி னதும், உருவத்தினதும் தவருகுமா? இதுவே உருவ வழிபாட்டினது அடிப்படையும் உட்பொருளுமாகும்.

இத்தகைய உன்னத தத்துவத்தையே பக்குவ முடைய மானிட சமூகத்திற்கு இந்துமத ஞானிகள் போதித்துள்ளனர். இதனையே பரமஹம்சரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூட நம்பிக்கைகளும் குற்றங்களும் சமயத்தில் இருப்பதாக நீ கூறலாம் நான் கூறுவேன்; ஒவ்வொரு சமயத்திலும் குறைபாடுகள் உள்ளன. கடவுள் மீது வைக்கும் பற்று-பக்தி ஒன்றே போதும். ஒருவன் ஞானமடைதற்கு'15

கிறித்தவத்தின் ஒரு பகுதியினரும் உருவவழிபாட்டை இயற்கையிகந்த வடிவமுள்ள விக்கிரக வணக்கத்தினைக் கேலி செய்பவராக உள்ளனர். புரட்டஸ்தாந்துக் கிறித்தவத்தில் உள்ள இறைவன், இறைமகன், பரிசுத்த ஆவி என்பனவும், கத்தோலிக்க கிறித்தவத்தில் அந்தோனியார், புனிதமாதா என்பதுவும் ஒரு பொருளைத்தான் சுட்டுவது போன்றே இந்துமதமும் பல வடிவங்களினூடாக இலங்குவது ஒருபொருள் என்பதையே சுட்டுகின்றது. மசூதி வழிபாட்டில் தொழுகையில் ஈடுபடுவோரும் நட்சத்திரம், பிறை, குரான் மூன்றையும் தொழுவதுண்டு. சமயங்களில் நம்பிக்கையில்லை, உண்மையில்லையென்று சொல்லும் பொதுவுடைமைவாதிகள் கூட 'நம்பிக்கை', 'உண்மை' என்ற சொல்லிலே தானும் நம்பிக்கை வைத்துள்ளனர். இவை யாவற்றையும் ஒட்டுமொத்தமாகச் சுட்டுவதே இந்துமத உருவ வழிபாட்டின் ஆணிவேராகும். ஆனால் இவை யாருக்குத் தேவையென்பதில்தான் முரண்பாடுகள் எழுந்துள்ளன. ஞானமடைந்து அறிவுநிலையில் நிலைபெற்ற ஆத்மசாதகனுக்கு உருவ வழிபாடு அவசியமற்றது என்பது இந்து சமயத்தின் நோக்கமாகும். வேதங்களில் விக்கிரக வழிபாடு செல்வாக்குப் பெறவில்லை. உபநிடதம் போன்ற உயர்ந்த தத்துவ ஞானத்தை, தரிசனங்களை உருவாக்கிய இந்துமத ஞானிகள் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



ஆலயவழிபாட்டில் கிரியைகளில், சடங்காசாரம் கொள்கைகளில் அக்கறை செலுத்தியதாகச் சான்று களில்லை. காரணம் அவர்கள் ஆத்மஞானத்தால் ஆண்டவனை அறிந்து அதனுடன் இணைந்தவர்கள். இதனையே 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவ லிங்கம்' என்று திருமந்திரம் கூறியது. இராம கிருஷ்ணரும்,

> 'வீடு கட்டுவதற்குத்தான் சாரம் தேவை.
> கட்டியபின் சாரமரம் அவசியமற்றது.
> ஞானமடைவதற்கு உருவவழிபாடு
> அவசியமானது. அடைந்தபின் அவனுக்கு
> அது அவசியமில்லை'

எனத் தெளிவாக உருவவழிபாட்டினால் உயர்வ டைந்தபின்னரும் அதனைப் புலப்படுத்தியுள்ளார்.

> 'கடலும் வானமும் எட்ட இருந்து பார்ப்பவருக்கு நிறமுள்ளவைபோலத் தோன்றும், கிட்டச்சென்று கையில் எடுக்கையில் அதன் நிறமற்ற தன்மையைக் காண்பதுபோல் அன்னை காளிதேவியும் அப்படியே'

எனமேலும் வழிபாடும் பக்தி சாதனமும் ஒரு வர்க்கு கேடுவிளைவிப்பன அல்ல என அறிவுறுத்து கின்றார்.

உருவவழிபாட்டை இராமகிருஷ்ணர் பக்தியு டன், பற்றற்றுப் பின்பற்றிப் பெருநெறி அடைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர் ஆதலால் உணர்ந்தவாறே உணர்த்துகின்றார். அவரே,

> 'ஈஸ்வரன் வடிவமுடையவரா என்பதை ஆரம்பத்தில்
> தீர்மானம் செய்ய வேண்டாம். நீ கொஞ்சம்
> சாதனை செய். பின் இதுபற்றி உனக்கே விளங்கும்'

எனவும்,

> 'காற்று, கடல், தீபம் யாவும் வடிவமற்றவை,
> விறகில் எரியும்போது விறகாக, வானத்துடன்
> பார்த்தால் நீலமாக, மின்குமிழில் பார்த்தால்
> வெளிச்சமாக வருவதும் ஒரு பிரம்மமே. ஆனால்
> அது அவற்றின் மொத்த வடிவமல்ல'

என்றவாறு ஒரு பிரமத்தின் மூலமாகவே அனைத்தும் உற்பத்தியாகின்றது என்ற வேதாந்த உண்மையினையும் புலப்படுத்தியுள்ளார். ஒரே பார்வையில் நிர்குணத்தையும் சகுணத்தையும் புரிய வைத்துள்ளார். சைவ சித்தாந்தத்தின் 'உருவமும் அருவமும் ஆனாய் நீ' என்ற திருவாசகக் கருத்தும் அதில் காணப்படுகிறது. பிரம்மசமாஜமும் தியோசபிக்கல் சங்கமும் உருவ வழிபாட்டைப் புறக்கணித்த சந்தர்ப்பத்தில் இராமகிருஷ்ணரின் உபதேசம் மிகத் துல்லியமான விளக்கத்தைச் சமுதாய மக்கட்கு அளிப்பதாயிருந்தது.

'மக்கள் துவக்கும் வெவ்வேறு சமய இயக்கங்கள் நிலைக்குமா' என்று பரமஹம்சரிடம் வினவப்பட்ட போது, 'யாண்டும் நிலைப்பது சநாதன தர்மமே' ஏனையவை யாவும் தோன்றி மறைவன என்றார். அதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது எவையும் அளவுமீறி அர்த்தமற்றுப் போனுல் அவற்றைச் சீராக்கவும் உண்மையை நிலைபெறச் செய்யவுமே சீர்திருத்த இயக்கங்கள் தோன்றுவன என்பதையும் ஆங்கு மறைமுகமாகக் காட்டியுள்ளார் எனலாம். ஏனெனில், பிரம்மசமாஜம் பற்றி பரமஹம்சரிடம் அபிப்பிராயம் கேட்டபோது, 'அதுபற்றி எனக்கெதுவும் தெரியாது. கனியுண்ண வந்தவர்கள் மரத்தையும் இலையையும் பற்றி ஆராய்வதால் கனியை இழந்தவர்களாளுலும் ஆகிவிடுவோம். நாம் இறைவன் என்னும் அருட்கனியுண்ண வந்தவர்கள்' என்று கூறுவதன் மூலம் சர்ச்சைகளைத் தவிர்த்துக் கொள்ள விரும்புவது புலப்படுகிறது. 'கடவுளைப் பற்றியோ, விக்கிரக வழிபாடு பற்றிய சர்ச்சையோ அர்த்தமற்றவை. சிவனு, விஷ்ணுவா பெரியவர் என்ற சர்ச்சையில் பகவான், பத்மலோசன பண்டிதரை அழைத்துக் கேட்டார். அவரோ 'எனக்கெப்படித் தெரியும்? நானே தந்தையோ, பாட்டனே, என் வாழ்வில் கடந்து போன முன்னேர்களோ சிவனையோ, விஷ்ணுவையோ பார்த்ததில்லை' என்ருர். என வரும் விளக்கத்தில் இருந்து காளிபக்தனுன பரமஹம்சர் எவ்வளவு பெரிய ஆத்ம சாதனையை எமக்குச் சாதித்துக் காட்டியுள்ளார் என்ற உண்மை புலப்படும்.

**உயிர்ப்பலி :**

உருவ வழிபாட்டிலே அறிவாளிகளை சந்தேகம் கொள்ளவும், உதாசீனப்படுத்தவும், எதிர்ப்பிரசாரம் செய்யவும் மேனுட்டாரைத் தூண்டியதற்கும் முதற் காரணம் உயிர்ப்பலி என்னும் அநாகரிகமான செயலாகும். வேத சாஸ்திரப் பிரமாணத்தைக் காரண

மாகச் சொல்வோர் ஆங்கு அப்பலிகள் விக்கிரகத்திற்கோ, கடவுள் சிலைக்கோ, அர்ப்பணிக்கப்படவில்லை என்பதை உணர வேண்டும். அக்கால வேட்டைத் தொழில், மந்தை மேய்த்தல் என்பன ஜீவனத்திற்காக முற்பட்ட வேதகாலத்தில் கொன்று வந்த மிருகத்தை தீயில் படைத்து அக்கினிக்கு ஆகுதி செய்து உண்டு வந்திருக்க வேண்டும். ஆகுதி செய்வதன் மூலம் உணவு தந்த இயற்கைக்கு நன்றி காட்டியிருக்கலாம். நோக்கம் உயர்ந்ததேயாகும். பிற்பட்ட காலம் நீர்ப்பாசனம், விவசாயம் விருத்தியடைந்த பின்னரும் உணவு கிடைத்த பின்னும் முன்னையோரின் செயலை உதரரணம் காட்டி; ஆடு, கோழி போன்ற விலங்குகளைச் சாஸ்திரப் பிரமாணமெனக் கூறிச் சாஸ்திர விரோதமாகக் கொன்று பலியிடப்பட்ட வேள்விச் சடங்குகளே இந்துமதத்தின் உயர்ந்த உருவ வழிபாட்டிற்கும் ஆலய வழிபாட்டிற்கும் ஊறு விளைவிப்பன ஆகின்றன. இராமகிருஷ்ண ஞானியோ இதுபற்றிக் கூறுமிடத்து;

> 'பலியிடுவதற்குச் சாஸ்திரப்பிரமாணம் இருக்கிறது அட்டமி, திதி போன்ற காலங்களில் பலியிடுவதைப் படைப்பதற்குச் சாஸ்திரமுண்டு. ஆனால் அவற்றை ஏற்பதில் எனக்குப் பிரியமில்லை - ஏற்க இயலுவதுமில்லை.'

என்றார் உயிர்ப்பலி தருமவிரோதம் என்பதை பரமஹம்சர் சொல்லாமல் சொல்லி செயலாற் புறக்கணித்தார். காளி பக்தரான அவர் சாஸ்திரத்திற்கு மறுப்புக் கூற விரும்பாமல் இருந்திருக்கலாம். ஆனால் தமது மன உறுதிப்பாட்டை வெளிப்படுத்தத் தவறவில்லை. 'தனது சாதனைகளில் படிப்படியாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து சென்ற பரமஹம்சர் நிர்விகற்ப சமாதி நிலையையும் எட்டிவிடுகின்றார். வடிவமில்லாத பெயரற்ற முழு முதற்பொருளை உணர முயலும் வேளையில் அத்வைத சாதனையின் சமாதி நிலையில் 'அகம் பிரம்மாஸ்மி' என்ற ஒருமை நெறியில் சமாதிநிலையில் தோன்றிய காளிதேவியின் சகுண வடிவத்தை 'அறிவு' என்னும் வாளால் வெட்டி அகற்றினார். என அவரது சீடர்களிற் பெருமகனான சுவாமி விவேகானந்தர் தமது குருநாதர் பற்றிக் கூறுகையில்[16] சொல்லியுள்ளமை ஈண்டு சிந்திக்கத்தக்கது. எனவே 'பலி' என்பது பிற்காலம் ஆகம சாஸ்திரங்களால் ஆலயங்களின் அமைப்பிலே 'பலிபீடம்' என்ற அமைப்பைக் கொண்டு புணரமைக்கப்பட்டது. முக்குற்றங்களை, மும்மலங்களை ஆண்டவன் சன்னிதானமாகிய ஆலய பலிபீடத்திலே பலியிட்டு ஆன்ம சுத்தம் அடைவதை அது பிற்காலம் உணர்த்துவதாயிற்று.

கொலைகளைப்பற்றிக் கண்டிக்கும் கத்தோலிக்க கிறித்தவம் 'கொன்றால் பாவம் தின்றால் தீரும்' என்பது மாதிரி நடந்துகொண்டு மாமிச போசனத்தை ஆதரிக்கும் கிறித்தவ மக்கட்கு என்ன சொல்கிறது? தாவர உணவை அது ஆதரிக்கின்றதா அப்படியானால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் நத்தார் தினக் கொண்டாட்டங்களில்கூட மாமிசம் சாப்பிடும் கிறித்தவர்களைத்தான் அதிகம் காண்கிறோம். இது இந்துமதத்தின் சகவாசமா அல்லது பைபிளின் போதனையா என்பது விளங்கவில்லை. கத்தோலிக்கக் கிறித்தவம் தயை, காருண்யம் என்பதை மனுக்குலத்துக்குப் போதிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஏன் பிற விலங்கினங்களுக்குப் போதிக்கவில்லை என்பது விந்தையாக உள்ளது. ஒரு சமயம் செமிற் றிக் மதங்கள் தோன்றிய நாடுகளின் நிலப்பயன் பாடு விவசாயம், போன்றன உணவுச் செய்கைக்கு ஒத்து வராததால் அவ்வாறு நேர்ந்திருக்கவும் கூடும் என்ற எண்ணமும் இயல்பாக எழுகின்றது. தயையும், காருண்யமும், இரக்கமும் பாவநிக்கமுமே பிரதான பண்புகளாகக் கொண்ட யேசுபெருமகன் மனுக்குலத்தின் பாவங்கட்காகத் தம்மையே சிலு வையில் பலியிட்டுச் சமூக மக்களின் மேம்பாட்டிற் காகத் தம்மையே இரத்தத்தாற் கழுவிய புனிதமைந் தன். அப்படிப்பட்ட தேவமைந்தன் பிறந்த தினத் திலே அவருடைய திருப்பெயரால் விலங்கினங்களைக் கொல்வதையோ, கொன்றதை உண்பதையோ அவர் அனுமதிப்பாரா என்பதையும் இந்துமதத் தைக் கேலிசெய்யும் பிற செமிற்றிச் சமயத்தவர்கள் சிந்தித்துப்பார்க்கலாம். தப்பும் தவறும் எல்லாச் சமயங்களிலும் இல்லாமல் இல்லை. ஆயினும் மனித சமூகம் திருந்தி வாழும் நோக்கத்தையும் நல்ல வழி பாட்டையும் தான் எல்லாச் சமயங்களும் உணர்த் துகின்றன என்பது எல்லோருக்கும் புரியும், எனவே பிறசமயங்களைக் கேலிபண்ணுவதைவிட்டு தத்தம் சமய வழிபாட்டில் நிலைபெற்று உயர்நிலையடை வதைத்தான் இராமகிருஷ்ணரின் சமயசமரச நோக் கும் உணர்த்துவதாயுள்ளது. எனவே தாவர உண வைக்கட்டுப் படுத்தாத விசேடகாலங்கள், விழாக் காலங்கள், விரதகாலங்கள் என வகுத்துக் கொடுத்து இறைவனை விசேடமாக வழிபாடு செய்யும் காலத் திலாவது உயிர்ப்பலியை மாமிசபோசனத்தை விலக்க வேண்டுமென்பது இந்துசமயத்தின் வழக்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது

> 'குருட்டு நம்பிக்கைகளும் தப்பும் தவறும்
> உண்மையிலே சில மதங்களிலே புகுந்திருக்
> கின்றன எனவைத்துக்கொள்ளுவோம்.
> அதனால் கேடு ஒன்றும் வந்துவிடாது'[17]

என்பதுதான் பரமஹம்சரின் அறிவுரையாகும். மாமிச உணவு உடல் வலிமைக்கு உகந்தது எனவும் சிலர் நம்புவதுண்டு. வங்காளத்தில் கங்காபுஸ்பம் என்றநிலையில் மீன்சாப்பிடுவோரும் உண்டு. எனினும் தாவரபட்சணியான யானைக்குள்ள பலம் மாமிசபட்சணியான சிங்கத்தைவிடக் குறைந்ததல்ல, என்பதும எவருக்கும் புலப்படும். பொதுவாக இறைவனிடம் வைக்கும் பக்தியினாலும் விசுவாசத்தினாலும், அன்பினாலும் இயல்பாகவே மானிட சமூகம் மனம்திருந்தும் நெறியினைக் கற்றுக் கொள்கின்றது. அதனால் உருவ வழிபாடு துன்பத்தில் உழலும் மானிட சமூகத்தில் மனபரிபாகம் குறைவாக உள்ள மக்கட்கு மீட்சிக்காக அளிக்கப்பட்ட ஒரு சாதனமேயாகும். ஈஸ்வர விசுவாசமும் நம்பிக்கையுமே சமுதாயத்தின் மிகப் பெரிய பாதுகாப்பு என்பது இராமகிருஷ்ணரின் அபிப்பிராயமெனலாம். ஓரிடத்தில் அவர் இதனைப் பின்வருமாறு விளக்கியுள்ளார் :-

> 'ஈஸ்வர விஸ்வாசம் தன்னம்பிக்கையைவிடப்
> பெரியது. ஏனெனில் ராமரோ கடலைக்
> கடக்கப் பாலம் கட்டினார். ஆஞ்சநேயரோ
> ராமநாம விஸ்வாசத்தினால் பறந்தே சென்று
> விட்டார். கடல் கடக்க விரும்பிய ஒருவருக்கு
> மனப்பலமற்றதால் அவரது வஸ்திரத்தில் ஒரு
> முடிச்சுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு விபீஷணன் 'இனிக்கடந்துசெல்' என்று கூறினன். அதன் பின் துணிவுடன் கடலில் சென்ற அம்மனிதன் இனியென்ன நீந்தலாம் தானே, என்று முடிச்சுஎன்ன? அவிட்டுப் பார்ப்போம் எனநினைத்து இடைவழியில் அதனை அவிட்டுப் பார்த்தானும். அதில் ராமநாமம் எழுதப்பட்டிருந்தது. பூ இவ்வளவுதானு? என நினைத்தானும். மறுகணமே கடலோடு சென்று விட்டான்'

இவ்வாறு நம்பிக்கை இருக்கும்வரை இருந்தபலம் அதன் இரகசியம் வெளிப்பட்டதும் மறைந்துவிட்டது போல; உருவமோ, அருவமோ இறைவழிபாடு மக்கள் சமூகத்தைக் கடைத்தேற்றும் என்பது பரமஹம்சரின் நெறியாகும்.

**பிரார்த்தனை :**

உருவவழிபாடு பக்தியை மட்டுமல்லப் பிரார்த்தனையையும் வேண்டுதலையும் ஒரு அம்சமாகக் கொண்குள்ளது இப்பிரார்த்தனை காமியமாகவுமிருக்கும். நிஷ்காமியமாகவுமிருக்கும். நிஷ்காமியம் என்ற பற்றற்ற பற்றுத்தான் அதன் குறிக்கோள். ஆனால் பக்தனே அன்றி சாதாரண மனிதர்களோ பிரார்த்தனையின் போது சதா தமது கஷ்டங்களைப் பற்றியே பிரலாபிக்கின்றூர்கள். கத்தோலிக்கக் கிறித்தவம் இதனைச் 'செபம்' என்று கூறும்போது அங்கும் மக்களது பாவங்கள் இரட்சிக்கப்படுவதாக உறுதிமொழியளிக்கப்படுகிறது.

'கிறித்தவ மதம் ஓயாது ஆதியோடந்தமாகப் பாவத்தைப் பற்றிய எண்ணத்தையே ஊட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. பிரம்மசமாஜமும் அதற்குப் பின்வாங்கியதல்ல பாவத்தைப் பற்றி ஓயாது எண்ணும் பேதை பாபியாகி விடுகிருன்'

என பரமஹம்சரே பிரார்த்தனையில் பற்றற்ற நிலை வேண்டுமென மறைமுகமாகச் சுட்டுகிருர். இந்துக்களும் கோயில்களில் வழிபடும்போது தமது கஷ்டங்களையும் துன்பங்களையும் சொல்லிப் பிரார்த்திப்பதாலோ என்னவோ தாம் ஓயாது வழிபட்டும் கஷ்டப்படுகிருேமே என மனம் வருந்துவதுண்டு; பாவத்தைப் பற்றிச் சிந்திப்பவன் பாபியாகின்றுன் என்பது போல சதா கஷ்டத்தைப் பற்றியே சிந்திப்போர் கஷ்டப்பட நேரும். 'எதை நினைக்கிருேமோ அதுவே ஆகிருேம்' என்ற உபநிடதங்களின் கூற்றுப்படி பிரார்த்தனைகளிலும் நன்மையும் மங்கலமும், நலமும் சிறப்பும் வேண்டுமெனப் பிரார்த்திப்பதே நன்மை அடைவதற்குரிய மார்க்கம் என உருவ வழிபாடும் போதிக்கின்றது. கஷ்டத்திலும்சரி, சுகத்திலும்சரி நல்ல சொல்லை, நல்ல செயலைப் பழகுவது தான் இவற்றின் தாற்பரியமெனலாம்.

அத்வைதவேதாந்தம் 'ஆன்மா பிரமம்' என விளக்கியுள்ளது. இதனை சாதனை மார்க்கத்தில் நினைவூட்டுவது போலவே சுவாமி விவேகானந்தர் தமது குருநாதரது வாக்கினை மேலும் விளக்கிப் பின்வருமாறு கூறுகின்ருர் ;-

"நீங்கள் கடவுளுடைய மக்கள். அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தில் பங்குடைய பூரணர்கள் உலகில் தெய்வாம்சமாக வீற்றிருக்கும் நீங்கள் பாபிகளா? ஒரு மனிதனை அப்படி அழைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமாகும்.... ஓ! சிங்கங்களே எழுந்திருப்பீர்களாக! நீங்கள் நித்தியத்துவமுடைய ஆன்மாக்கள். நீங்கள் ஆடுகள் என்னும் மயக்கத்தைத் தொலைத்து விடுங்கள்" 18

என்று வீர முழக்கம் செய்தார். அத்வைத வேதாந்தம் இவ்வாறு மக்களைக் கடவுள் நிலைக்கு இட்டுச் செல்வதுடன் கடவுளாக ஆகவே முடியும் என உத்திரவாதமளிக்கின்றது. ஆகையினுல் எல்லாச் சமயங்களும் உண்மையையும், அகிம்சையையும், சத்தியத்தையும் தான் மானிட சமுதாயத்திற்குப் போதித்துள்ளன. எனினும் அதனைப் பின்பற்றுவோர் சிலர் செய்யும் தவறுகளால் அச்சமயங்களிலும் தப்பும் தவறும் சிலசமயம் அதனையறியாமலே புகுந்துவிடுகின்றன.

'ஒவ்வொருவனும் தன் கடிகாரமே சரியாக ஓடுகிறது என எண்ணுவதுண்டு. ஆனுல் ஒவ்வொன்றிலும் ஏதேனும் சிறு பிழையிருக்கும். ஒவ்வொரு மனிதனும் தன்மதமே மேலானதென்கிருன். ஒவ்வொரு மதத்திலும் சிறு குற்றங்கள், தவறுகள் இருக்கும். அவற்றைப் பொருட்படுத்தாது மக்கள் சாதனையை நாடவேண்டும்'

என்றுதான் வழிபாடும், சமயமும் யாதாயினும் எல்லோரும் 'ஆத்மசாதனை' என்பதைச் செயல்வழி சாதித்துக் கடைப்பிடிக்கும்போது சமுதாயத்தில் தரும சாதனைகள் நிறைவேறும் என்பது பரமஹம்சர் கருத்தாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



சமய சமரசநோக்கு:

சமயங்களுள் சமரச மனப்பான்மை உணரப்படவேண்டுமென்பதும் பரமஹம்சரின் அடிப்படை எண்ணக் கருத்தாகும். பல சந்தர்ப்பங்களில் அவர் அதனைத் தமது வாக்கில் சுட்டியிருக்கின்றார். வங்காளத்தில் இஸ்லாமிய செல்வாக்கின் பின் சமய உணர்வின் மூலம் சமூகத்தில் பிரிவினை மனப்பாங்கு காணப்பட்டாலும் இந்துமதம் இந்தியாவில் பௌத்த மதம் தோன்றிய பின்பும் கூட அதன் வழியிலே தனது செல்வாக்கினால் அதனை அரவணைத்தே வளர்ந்தது. சமய சகிப்புத் தன்மை எந்த சமயவாதிக்கும் அவசியம் இருக்க வேண்டும். எல்லா உலகச் சமயங்களும் உண்மையையும் நன்மையையும், அறத்தையும் ஆத்ம விடுதலையையும் தான் போதிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவற்றை அடைவதற்கான மார்க்கங்களில் வேறுபாடு காணப்படுகின்றது. அனுட்டான மார்க்கங்களில் வேறுபாடிருக்கலாம்! அந்தந்த நாடுகளின் இயற்கையமைப்பு, காலநிலை, அறிவியல், அறவியல். பிராந்திய வேறுபாடு காரணமாக அவை நேரலாம்.

'தண்ணீர் என்றும், பாணி என்று ஹிந்தியிலும் அக்குவா என லத்தீனிலும், ஜலம் என வடமொழியிலும், வாட்டர் என ஆங்கிலத்திலும் கூறினும் அவையனைத்தும் 'நீர்' என்ற ஒரு பொருளையே சுட்டுவன. அதுபோல மார்க்கங்களில் உண்மைப் பொருளுக்கு வேறு பெயரிட்டாலும் அவை ஒன்றையே காட்டுவன' என்பதே சாஸ்வதமானது'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட அறிவியலின் தாக்கம் பல சமய நெறிகளேயும் பாதித்துள்ள போதிலும் இந்து சமயத்தை அதிகமாகப் பாதித்தது.

"இந்து சமயத்திலே சமயத்தைப் பாதுகாக்கவல்ல நிறுவனங்களின்மையாலும் உள்ள நிறுவனங்களும் தம் பணியை வேண்டியளவு ஆற்றுமையாலும் இந்து சமயத்தைப்பற்றி எதுவும் எழுதலாம் அல்லது எதுவும் கூறலாம் என்ற நிலே இருந்து வருகிறது. இந்து சமயத்தில் நம்பிக்கையுடையோர் மனம் புண்படுகிறதென்று யாரும் கவலேப்படுவதாகத் தெரியவில்லே. இன்றைக்குச் சிறிது முன்புவரை கிறிஸ்தவ மதபோதகர் இந்து மதத்தைத் தாக்கியே வந்தனர்"[19]

என பேராசிரியர் வேலுப்பிள்ளேயவர்கள் மனம் வருந்திக் கூறியிருப்பது சிந்திக்க வேண்டிய கருத்தாகும். இன்று கிறித்தவர்கள் போன்ற பிறசமயவாதிகளேவிட இந்துக்களாகப் பிறந்து வாழ்ந்து வருவோரே இந்து மதத்தை இழித்துப் பேசுவதில் பெருமை காண்போராக உள்ளதும் வருந்தத்தக்கது.

இத்தகையோர் முதல் பிறமதத்தவரும் அன்றே உணரும் வண்ணம் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்து மதத்தின் சகிப்புத்தன்மை சமரசநோக்கு என்பவை இந்தியாவில் இராமகிருஷ்ணராலும், விவேகானந்தராலும் வேறு பலராலும் நிலேநாட்டப்பட்டது. அரசியல், அறிவியல், சமூகச்சீர்திருத்தம் என்பனவற்றில் நேரடியாகச் சம்பந்தப்படாது. அவற்றினின்றும் தம்மைத் தனிமைப்படுத்தி வாழ்ந்த அறிஞர்கள், அருளாளர்கள் பலர் இவ்வாறே இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்திற்குப் புதிய விளக்கத்தை சமுதாய ரீதியில் அளித்துத் தமது பங்களிப்பைச் செய்துவந்தனர். அவற்றில் இராமகிருஷ்ணரால் இந்து சமுதாயத் திற்கு போதிக்கப்பட்ட உயர்வான சமயச் சிந்தனை கள், மார்க்கங்கள் சுவாமி விவேகானந்தர் போன்ற சீடர்களால் உலகனைத்திற்குமே வழங்கப்பட்டன இக்கருத்துக்கள் வளர்ச்சியடைய இஸ்லாம், கிறித் தவ சமயமார்க்கங்களும் ஓரளவு முன்னோடியாயி ருந்தன. இவர்கள் அனைவரும் ஏனைய மெய்யடியார் களும் கூட இந்துசமய அறப்பண்புகளின் பிரதிநிதி களாக விளங்கினர். இராமகிருஷ்ணர் பெற்றிருந்த சமய அனுபவமானது எல்லாச் சமயங்களும் ஒரே இலட்சியத்தை அடையப்பயன்படும் பல்வேறு பா தைகள் என்ற உயர்ந்த எண்ணத்தை இந்துசமயத் தில் வெளிப்படுத்த உதவிற்று.

குருநாதரின் சமயசமரச நோக்கினைச் சுவாமி விவேகானந்தர் அவர்கள் தெளிவாகப் புலப்படுத்தி னர்.

> "இந்துக்களால் பிரமமெனவும் செகராஸ்திரியரால் அஹுரமாஸ்தா எனவும் பௌத்த சமயத்தால் புத்தர் எனவும் யூதர்களால் யெகோவா எனவும் கிறித்தவர்களால் யேசுபிரான் எனவும் இஸ்லாம் மக்களால் அல்லா எனவும் தொழப்படும் கடவு ளும் ஒரே மாதிரியான உண்மையைக் கொண் டோரே"[20]

மேலும் வேதங்களில் மறைந்துகிடந்த உண்மைகளை உலகெங்கும் பரப்பிய முதல் இந்திய மெய்ஞானியா கப் புத்தபெருமானும் அவரைத்தொடர்ந்து சமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீவகர்களும் அவற்றை விமர்சித்தனர் சமயப்பிரச்சாரம் செய்வதை முதன்முதல் சாதனைக்குக் கொண்டுவந்தவர்கள் அவர்களேயாவர். ஒரு சமயத்திலிருந்து இன்னொரு சமயத்திற்கு மாறலாம் என்ற எண்ணத்தை உண்டாக்கியவரும் புத்தபெருமானே[21] ஆனால் கடவுள் பற்றிய மேலான எண்ணத்தை பௌத்த மதவாதிகளின் போதனைகள் பாதித்ததால் இது இந்தியாவில் அழிந்து போயிற்று. இந்தியாவிற்கு அப்பாலுள்ள பௌதத்தில் புத்தபெருமான் கடவுள் நிலையைப் பெற்றுக்கொண்டதால் பௌத்தம் பிழைத்துக்கொண்டது எனக் கூறினும் தவறாகாது.

**மதகுருமார் ஒழுக்கம் :**

பௌராணிக சமயம் எனப்படும் வைதிக சமயப்பிரிவு பிறரைத் திருத்துகின்ற முயற்சி, அதிசயமான இரக்கம், யாவர்மாட்டும் அன்பு செலுத்தல் என்ற அற்புதமான நலன்களை இழந்ததுடன்[22] சாஸ்திரச் செருக்கும், குலப்பெருமை என்ற அகங்காரமும் ஆன்மீக மதகுருவிற்குரிய ஒழுக்கங்களை இழந்து போனதுமே வைதிகம் படிப்படியாகச் செல்வாக்கிழக்கக் காரணமாயிருந்தன. மதகுருமாரதும், சமயபோதகர்களதும் தகுதி எப்படி அமைய வேண்டும் என்பதை,

> 'மதாசாரியர்கள் ஏராளமாகக் கற்றிருக்கவேண்டும். குருஸ்தானத்திலிருந்து பிறர்க்குப் போதிப்பது சுலபமன்று. அவருக்கு ஈஸ்வர அனுக்கிரகம் முதலில் கிட்ட வேண்டும். நாரதர், சுகர், சங்கரருக்குக் கிடைத்தது போல இருக்க வேண்டும். குளக்கரையை அசுத்தப்படுத்துவோர் தண்டனைக்குள்ளாவார் என்ற அரச அறிவிப்பு போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> டப்பட்டதும், அக்கரையை அழுக்குப்படுத்தி அசுத்தம் செய்வோர் செயல் நின்றுவிடும். ஈஸ்வரனிடமிருந்து ஆதேசம் பெற்றவரது வல்லமையும் சக்தியும் அதனைப் போலவேயாகும்'

என பரமஹம்சர் விளக்கியிருக்கின்றார். எனவே கடவுளிடம் அருள்பெற்றாருடைய வாக்கும், வன்மையும் அரச அறிவிப்பின் சக்தியைவிடப் பன்மடங்கு வலியது எனக் காட்டுகின்றார். மேலும் சாஸ்திரச் செருக்குள்ளார் மதகுருவாக இருக்கத் தகுதி அற்றவர் என்பதையும்,

> 'கழுகு எவ்வளவு உயரப்பறந்தாலும் அதன் கண்கள் கீழே இரையை நோக்கியே வட்டமிடுவது போல சாஸ்திரம் படித்த ஞானமுள்ள பண்டிதர்களது மனமும் கீழ்நிலையாகிய உலகப்பற்றிலே தான் உழன்றிருக்கும்'

அதனால் அவர்கள் ஞானாசிரியர்களாகும் தகுதியை இழந்து விடுகிறார்கள் எனக் காட்டியுள்ளார்.

**சமயமும் அறிவியலும் :**

'ஞானம்' என்பது இன்றைய உலகில் பரமஹம்சரது நோக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணக்கிடக்கின்றது. 'விஞ்ஞானம்' என்ற அறிவியலே உலகியலில் இன்றைய சமூதாயத்தில் பெரும் பலத்தைப் பெற்றுள்ளது. விஞ்ஞானத்தையும் வெல்லும் தகுதி பெற்றோர் மெய்ஞானிகளாகின்றனர் எனலாம். ஏனெனில் மெய்ஞானத்தில் நிலைபெற்றவரைத்தான் அறிஞரும், மேதைகளும் விஞ்ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் கூடத் தலைவணங்கித் துதிக்கின்றனர். என வேதான் அறிவுத்துறை நிபுணர்கள் விஞ்ஞானிகள் என்றும், அறத்துறை நிபுணர்கள் மெய்ஞ்ஞானிகள் என்றும் பெயர் பெற்றிருக்க வேண்டும். இதனையே இந்து சாஸ்திர நூல்களும் பரஞானம், அபரஞானம் என்றும், பசு ஞானம், பதிஞானம் என்றும் பாகு படுத்தியிருக்கிறூர்களே தவிர அபரஞானத்தையும் பசு (ஆன்ம) ஞானத்தையும் அவர்கள் அலட்சியப் படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்களது அபரஞா னமே வைதிக தரிசனங்களாக உலக பரிணுமவாத மாக பஞ்சபூத ஞானத்தைப் படைப்பை ஆராய்ந்து ஆரம்பத்தில் சில சிந்தனைகளை தரிசனங்களாக வெளிப்படுத்தின. அவற்றின் அடிப்படையில் இருக் கும் ஞானத்தினை 'விஞ்ஞானம்' என்ற மேல்நாட்டு அறிவியல் அணுவையும் அதுசார்ந்த சிலகருத்துக் களையும் விமர்சிப்பதிலிருந்து புரிய வைத்துள்ளது. இந்து அறிவியல் முதற் காரணமோ முழுக்காரண மோ எனக் கூறுவதனை விட அதன் சார்புகளைக் கொண்டுள்ளதென்று கூறுவது பொருத்தமாக அமையும்.

> "சமயக்கருத்துக்கள், பொருளியல், உளவியல், சமூகவியற் காரணங்களினுலே தோன்றின என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால், சமயக்கருத்துக் கள் எக்காலத்திற்கும் பொதுவானவை என்ற நிலையும் ஆட்டம் காணத் தொடங்கிவிடுமென்ற அச்சம் காணப்படுகின்றது....! ஆனல் அந்த அச்சம் தேவையற்றது"[23]

என்ற கூற்றுனது முற்றிலும் வரவேற்கத்தக்கதேயா கும். காரணம்; விஞ்ஞானம் பஞ்சபூத முதற்பொருளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாகக் கொண்டது. மெய்ஞானம் அறம் என்னும் தரும சாதனத்தை ஆதாரமாகக் கொண்டது. என்பதால் இயற்கை எவ்வளவு சாசுவதமோ அவ்வளவிற்கு இயற்கையை வழிநடத்துகின்ற தருமசாதனமும் சாசுவதமானது 'ரிதம்' என்ற அறக்கொள்கை இதனைத்தான் சாஸ்திரங்களில் அன்றே அறிவுறுத்தியுள்ளது. இத்தகைய அறதேவனின் மொத்த வடிவத்தின் ஒரு கதிரே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். 'முப்பதுகோடி மக்கள் ஈராயிரமாண்டுகள் வாழ்ந்த ஆன்மீக வாழ்வின் மொத்தமான முழுவடிவம் பரமஹம்சர்' என 'ரோமெய்ன்ரோலண்ட்' என்ற மேல்நாட்டு அறிஞரே கூறியுள்ளமை கவனத்திற் கொள்ள வேண்டியதாகும். ஆதலால் விஞ்ஞான அறிவு இலௌகிகம் சார்ந்த உலகியல் வாழ்வில் அத்தியாவசியமானதும் புறக்கணிக்க முடியாததுமாகும். பொதுவாக,

> 'அறிவியலுக்கும் சமயத்திற்கும் முரண்பாடு இருப்பதாகக் கூறமுடியாது. அறிவியலுக்கும் சமயத்துக்கும் அமைதி காண்பதே காலத்திற் கேற்ற மார்க்கமாகும்'[24]

என்ற அறிவுரையுடன் அறிவியலுக்கும், அறவியலுக்கும் தார்மீகப்பாலம் ஒன்றையும் அறிஞர்கள் கட்டித் தரவேண்டும். சமயம் சமரசமாக நிலைத்திருப்பதற்கு அறிவுப் பாலத்துடன் ஆன்மீகப் பாலமும் அறவியற் பாலமும் அத்தியாவசியமானவைகள் என்பதே இராமகிருஷ்ணரது ஞானதிருஷ்டியாக இருக்கிறது எனலாம்.

'மனிதன் தனை காட்டுவதில் கிறித்தவனாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்க அனுட்டானத்தில் முஸ்லிமாகவும், உயிர் களிடம் அன்புகாட்டுவதில் இந்துவாகவும் இருக்க வேண்டும்'

எனச் சமயசமரசத்தை மார்க்க அனுட்டானத்திலும் போதனை செய்தார். தானே இந்துவாக மட்டுமன்றி ஒரு முஸ்லிமாகவும் கிறித்தவனாகவும் அனுட்டானம் மேற்கொண்டும் .அந்த உண்மையினை உணர்ந்தும் வெளிப்படுத்தினார். இன்று அணு விஞ்ஞானமே ஆண்டவன் ஆக்கிரமிக்க வேண்டிய மக்கள் மனதைப் பெரிதும் ஆக்கிரமித்திருக்கின்றது. விஞ்ஞான ஆக் கிரமிப்பு அறத்தின் அழிவைவிட சமுதாய அழிவை யும் மனப்போராட்டத்தையுமே மக்கட்கு தான் கொடுத்த பெறுமதிகள் மூலம் வழங்கியுள்ளது. அத னால் ஆக்கத்தை எவ்வளவு சமுதாயம் கண்டதோ அவ்வாறே அழிவின் விளிம்பையும் கண்டுள்ளது அழி வும் ஆக்கமுல் அறத்தினால் ஆவது என உணர்ந்தால் மன அமைதி சமூகத்திற்குக் கிட்டுமா எனவும் சிந்திக்க வேண்டும், 'ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் இன்று அருள் தருவாய்' என விஞ்ஞான உலகிடம் மன்றாடவேண்டுமோ என்ற ஐயமும் மக்கட்கு எழுந் தால் அதில் ஆச்சரியமில்லை. காரணம் கடவுளின் சர்வவல்லமையும் இன்று விஞ்ஞானத்திடம் உள்ள தாக நம்பி மக்கட் சமூகம் அதனிடம் சரண் அடைந் திருக்கிறது.

அப்படியானால் மனிதனின் பிறப்பையும் அது உற் பத்தியாகும் முறையையும் இயற்கையின் அற்புத ஆற்றல்களையும் விளக்கும் விஞ்ஞானம் மனிதனின் இறப்பிற்கு நோய் மட்டுமல்லாது வேறும் பல நிகழ் வுகள் காரணமாக அமைகின்றமையினையும் முறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி விளக்கிக்காட்டினுல் எவ்வளவு நன்ருக இருக்கும். பிறப்பது பத்தாம் மாசம் என எல்லாமாந்தருக்கும் ஒரே நியதியை வைத்த இயற்கை இறப்பதில் மட்டும் மாந்தர்க்குள் வேறுபாட்டை ஏற்படுத்தியது ஏன்? மரணமும் எல்லா மக்கட்கும் எண்பதாம் வயதில் அல்லது நூறு வயதில் என ஒரு எல்லேயை ஏன் தெளிவாக நிச்சயிக்கும்படி வகுக்கவில்லே? பிறப்பில் ஒருமைப்பாட்டை அமைத்த இயற்கை இறப்பிலும் அந்த ஒருமைப்பாட்டை ஏன் தரவில்லே? பிறப்பது தெளிவாகத் தெரிவது போல எப்போது இறப்பதென்று ஏன் தெளிவாகத் தெரியவில்லே? பிறப்பிற்கு ஒரு காரணம்; இறப்பிற்கு ஏன் பலகாரணங்கள்? மரணத்தைத் தடுக்கவோ, மரணத்தை முன்கூட்டியே அறியவோ விஞ்ஞானம் என்ன சொல்கிறது? மரணத்தின் நேரத்தை அறிய வழி சொல்லாவிட்டாலும் மரணத்திற்குத் தானும் ஒரு காரணமாகாதவாறு இருக்கலாமல்லவா? விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள் சந்தோஷமான வாழ்விற்கு அவசியமென்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆனுல் அளவிற்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு என்பதை விஞ்ஞானத்திலே மனுக்குலம் எப்போதுஉணரும்? விஞ்ஞானபொருளாதாரம் மானிட சமுதாயத்திற்கு சகல செல்வங்களேயும் வழங்கியுள்ளது. செல்வத்தினுல் ஒருவன் வாழ்வில் வசதி பெருகும்; வளம் செழிக்கும்; ஏழ்மை அகலும்; பணம் சேரும்; பசி அகலும்; உணவு கிடைக்கும் ஆனுல் இவற்றினுல் அவனுக்கு எதிர் பார்க்கும் சகலமும் கிடைத்துவிட்டதாக அவன் கருதுகிருனு? அமைதி, ஆறுதல், நிம்மதி, பயமின்மை துன்ப நீக்கம் என்பன கிட்டுகின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடியாத துயரங்கட்கும் அறிந்திருந்தும் தீர்க்க வகைதெரியாத துன்பங்கட்கும் ஒரு காலத்தில் ஆண்டவனிடம் மக்கள் சரணடைந்திருந்தார்கள். அதனால் அறியாமையும், அச்சமும், வியப்பும் தான் ஆண்டவன் வழிபாட்டிற்குக் காரணமென சமூகவியலாளர்கள் கூறினார்கள். இன்றோ அறிவும், பூரணத்துவமும், விஞ்ஞான அறிவியலிற் பாரிய வளர்ச்சியும் பெற்ற மனிதன் பூரண அறிவெனக் கருதும் விஞ்ஞான வளர்ச்சியினால் தனது அக உணர்வு தொடர்பான இடர்ப்பாடுகளை நீக்கும் வழிமுறைகளையும் அறியமுடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! மாறாக; அறிவிலும், விஞ்ஞானக் கல்வியிலும் நிறைவு கண்ட மேதைகளும் கூடப் பலர் இறைவனைக் கையேந்தி உலக சமாதானத்திற்காகப் பிரார்த்திக்கின்றார்கள். மேலே போர் விமானங்கள், விஞ்ஞானத் தயாரிப்புக்கள் குண்டெனும் அருள் மழை பொழிந்து மனுக்குலத்தை துன்பங்களிலிருந்து உயிர்விடச் செய்யவில்லையா ? அது அச்சமில்லையா? அறியாமையில்லையா ? அப்போது விடுதலைதரும் விமானத்தை வணங்காது விடிவைத்தரும் ஆண்டவனை அல்லவா பாமரர் மட்டுமல்ல படித்தவர்கள் பலரும் அழைக்க நேரிடுகின்றது இது விஞ்ஞானமா ? உண்மை நிலையை உலகினுக்குணர்த்தும் மெய்ஞானமா?

கருமமா ? தருமமா ?

மறமா ? அறமா ?

அநீதியா ? நீதியா ?

அச்சமா ? அறிவின்மையா ?

விஞ்ஞானமா ? மெய்ஞானமா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுமே ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும். இயற்கையின் ஒரு பக்கம் விஞ்ஞானமாகவும் அதன் மறுபக்கம் மெய்ஞானமாகவும் அமைந்திருக்கின்றது. எதிலும் தீவிரப்போக்கு அழிவிற்கு வழிகாட்டும். தார்மீகப்போக்கு ஆக்கத்திற்கும் உயர்விற்கும் வழி காட்டும் என்பது இந்துமத சிந்தனையாளர் முடிவா கும். இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற ஞானி கள் யாவரும் மானிட உலகசமுதாயத்திற்கு உணர்த் தும் உண்மை அற அடிப்படையில் அமைந்த தார் மீகமான வாழ்க்கை முறையேயாகும்.

ஆகவே விஞ்ஞானத்தில் மானிட சமூகம் திறமை யும் வளர்ச்சியும் அடையும் அதேவேளை மெய்ஞான சாதனங்களிலும் அபிவிருத்தி அடைவதுதான் விஞ் ஞான வளர்ச்சியையும முறையாகப் பேணும் தாற் பரியத்தை உண்டாக்கும் என்பது புலனாகின்றது. எந் தச் சமயமாய் இருந்தாலும் சமயசாதனப் பயிற்சி ஒன்றே ஆத்மானுபவத்தில் நிலைபெறப் போதுமான தென்பது சமரசம் கண்ட பரமஹம்சரின் கருத்தா கும்.

> 'வைத்தியர்களிடம் பயிற்சி பெறுவோர்க்கு நாடி பார்க்கும் திறமை வருவதுபோல சத்சங்கம் சேர் பவர்கட்கே பரமார்த்திக விடயங்கள் எளிதாக விளங்குகின்றன. இலௌகீக புத்தியைக் கொண்டு தெய்வீக விடயங்களை அறியமுடியாது'

என்பது அவர் கூற்றாகும். ஆத்மசாதனை என்பது வெறும் பேச்சுவன்மை, அறிவாற்றல் என்பது மட்டு மல்ல-செயலாற்றலுமாகும். இந்த ஆற்றல் சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மசாதனைப் பயிற்சிகளினூடாகவே வெளிப்படு கின்றது.

> 'பிரார்த்தனையும் சத்சங்கமும் இன்னல்களி லிருந்து மக்களை விடுவிக்கும் உபாயம்'

என்பர் இராமகிருஷ்ணர். துயரமும், இன்னலும் பெருகியவிடத்து அறிவாலும், செல்வத்தாலும் அதனைத்துடைக்க முடியாதவிடத்து ஆண்டவனை இயல்பாக மனம் நாடுகின்றது. அந்தக் கணத்திலா வது மனிதன் கணநேரசாந்தியை உணருகிறான். ஆத லால்தான் இறைவழிபாடு துன்பநீக்கமாக, துக்க நிவாரணமாக மனிதர்கட்கு உதவுமென இந்து சமய சாதனங்கள் நால்வகைமார்க்கங்களை நால்வகை உபாயங்களாகத் தந்திருக்கின்றன.

**சமூகசேவை நோக்கு :**

இறைவழிபாடு போன்ற அதற்கு ஒப்பான இன் னொரு வழிபாட்டுச் சாதனம் சமூகசேவை மார்க்க மாகும். துன்பப்பட்ட மக்கட்கு துயர் துடைக்கும் அறச்செயல், தருமசேவை, ஆக்கப்பணிபுரிதல் என் பன இராமகிருஷ்ணர் தமது சீடர்கட்கு உபதேசித்த முக்கிய அறிவுரை ஆகும். சமுதாயசேவை செய் வோன் இயல்பாகவே ஆண்டவனை சேவையால் வழி படுபவனுவான். 'உயிர்கட்கு சேவை செய்பவன் என்னை வணங்குகிறவன் ஆகிருன்' என்று கீதையும் கூறியுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களில் முதல் மூன்றும் உலகி யல் சார்பானவை. இவற்றிலே அறம் என்பது பல் வேறு கருத்துச் செறிவை இந்திய தத்துவத்தில் பிர திபலித்த போதும்; அறத்தின் வழி ஆற்றப்படுவன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லாம் மனிதனை முடிவில் அறம் வளர்த்த நாயகனாக உள்ள இறையுண்மையை உணர்தல் என்ற இலக்கினையே சுட்டிநிற்கின்றன. எனவே அறம் என்பது மக்களின் கடமைகளையும், மக்களுக்காக செய்யப்படும் கடமைகளையும், கருமம், தருமம் என்பவற்றையும் உள்ளடக்கும் எனலாம். வாழ்வின் பொருளென்ன, பயன் என்ன என்று ஆராய்ந்து கண்ட பெரியோரால் இது திட்டமானதொரு கொள்கையாக இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளது. அது சரியாக இருக்கலாம்; பிழையாக இருக்கலாம். ஆனால் நிச்சயமாக பிறருக்குத் தீமை விளைவிக்காத ஒரு கோட்பாடு என்பதில் சந்தேகமில்லை. இவை பொருட்பற்று, குடும்பப் பற்று, ஆட்சிப்பற்று என்ற பல்வேறு பற்றுக்களுமில்லாத-பற்றுள்ளவர்களாலல்ல. பற்றற்றவர்களால்[25] வரையறை செய்யப்பட்ட கோட்பாடுகள் ஆகும், அவர்களிடம்தான் 'தமது' என்ற நிலை கொஞ்சமும் இருக்கமாட்டாது. இதனால் இவர்களை பலர்'அதீதமனிதன்' எனவும் கூறத் தலைப்பட்டனர் (Superman). இந்நிலை அடைபவன் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஒவ்வொன்றிலும் தன்னை முற்றாக அர்ப்பணம் செய்தவனாயிருப்பான் செய்யவேண்டியவனுமாவான். இதுவேதான் 'தானேயாயிருக்கும் தன்மை', ஆன்மவிடுதலையின் இறுதிக்கட்டமாகும். இது அத்வைத வேதாந்தம்கூறும் 'அகம் பிரம்மாஸ்மி' என்ற 'தான் அதுவாகும் நிலை'க்கும் அழைத்துச் செல்வதாகும்.

இந்த மாதிரியான அதீதநிலையில் தனிமனிதன் கடவுளாக்கப்பட்டு விடுகிறான். இதுவே யேசுபிரான், புத்தபகவான் போன்றோர் கடவுட்தன்மையடைந்த நிலையெனவும் உணரலாம். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெருமகன்கள் எவ்வாறு தம்மைத் தன்னலமற்ற சேவைமார்க்கத்தின் மூலம் உயர்த்திக் கொண்டார்கள் என்பதை மட்டும் அந்தச் சமுதாயம் ஏட்டளவிலும், உதட்டளவிலும் போற்றிவருவதனை விடுத்து செயலளவிலே பணியாற்ற முன்வர வேண்டும் இப்படியாகவே இந்துசமய ஞானிகளும் 'தன்னலமற்ற சேவை' மார்க்கத்தையே கடவுள் நெறியிலும் வழிபாட்டிலும், செயற்பாட்டிலும் அனுட்டித்து வந்ததால் அவர்கள் மகான்களானுர்கள். அத்தகைய மகான்களில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் குறிப்பிடத்தக்கவர். தன்னலமற்ற சேவைமார்க்கம்-தன்னை மறந்து-தன்னை இழந்து-தன்னை அர்ப்பணித்து-தன்னைப் பிறர்க்காக அளித்து-சமுதாயத்தை மேம்படச் செய்யும் பணியாதலால்-அது 'சநாதன தர்மம்' என ஞானிகளால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது.

அத்தகைய சேவைமார்க்கம் பலதிறப்படும். பரமஹம்சர் தம் வாழ்நாளில் தம்மையும் அன்னையையும் உயர்த்திக் கொண்டதன் மூலம் தமது சீடர்கட்கும் அந்தச் சேவைமார்க்கத்தைத் தெளிவுபடுத்தினுர். அவரது குறிக்கோளில் பசித்தோர், பசிப்பிணி தீர்ப்பது முக்கிய இடம் பெற்றது. ஒருநாள் உணவு கொடுப்பதுடன் பசி தீர்ந்து விடுவதல்ல - மக்கள் தொகை பெருகப் பெருக பசித்தோர் தொகை அதிகரிக்குமே தவிர - உழைப்போர் தொகை அதிகரிப்பது என்பது கஷ்டமான காரியமாகவே காணப்படுகின்றது. ஆதலால் தானங்களில் சிறந்தது அன்னதானம் ஆகும், என்ருர். ஆனல் அதனை எத்தகையோர் ஏற்கவேண்டும் என்பதையும் குறிப்பாக வலியுறுத்தினுர். காரணம், வசதியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களால் வசதிகுறைந்தோருக்களிக்கப்படும் வயிற் றிற்குணவு பறிபோகக் கூடாது என்ற கருத்திஞ லாகும்.

'அன்னதானம் அறிவுத்தானம் இரண்டும் முக்கிய மானவை. இரண்டையும் நிஷ்காமியமாகச் செய்யவேண்டும்'.

மேலும்,

'அன்னதானம் செய்யுமிடங்களில் ஏழைகளும், துறவிகளுமே உணவை ஏற்கலாம். ஆஞல் கிரு கஸ்தர்கள் ஏற்கக்கூடாது'

என்ருர். ஏனென்ருல் தொழில் செய்து வருவோர் உணவு பெறும் வசதி கொண்டிருப்பர். எனவே இன்று தான் உணவுபடைத்தால் தனக்கு நாளை உண வுகிடைக்கும் என்ற பயன் கருதாமல் தருமத்தைச் செய்யவேண்டும் எனவும் கூறிஞர். இதுவே பலனை எதிர்பாராது செய்யும் நிஷ்காமிய தர்மம் எனப் படும். அதற்காக குடும்பஸ்தர்கள் விலக்கப்பட்டவர் கள் என்பதல்ல. அவர்கள் கிருகஸ்தர்களாக இருப் பதால் ஏனையோரை ஆதரிக்கும் சக்திபடைத்தோ ராவார். அவர்களால் தான் அறம் முதலிய தான தருமங்களை நிலைபெறச் செய்யமுடியும். வானப்பிரஸ் தராலும், சன்னியாசியிஞலும் என்ன செய்ய முடி யும்? ஆயினும் கிருகஸ்தர் போன்ற குடும்பஸ்தர் கட்கென்று ஐவகை அறம் சொல்லப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று விருந்தினர் ஓம்பல். அந்த மாதிரி சந்தர்ப்பங்களிலும், மகேஸ்வர பூஜை எனப்படும் மெய்யடியார்கட்கு வழங்கும் உணவுத்தானத்தில் கிரு கஸ்தர்கள் பங்குகொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள் ளது. தருமம் என்பது இல்லாத ஒருவர்க்கு ஒன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதே தவிர-உள்ளவர்கட்குக் கொடுக்கும் நன் கொடை, அன்பளிப்பு என்பன அல்ல என்பதை அன்றே பரமஹம்சர் விளக்கியுள்ளார் என்பது புரிகின்றது

'மக்கட்கு அன்னதானம் செய்வது
ஈஸ்வர ஆராதனைக்கு நிகர்'

எனக் கூறுவதுடன்

'நீ பரோபகாரமாகச் செய்யும் சத் நல்ல)கருமங்கள் உன்னைப் பக்குவப்படுத்தும் பொருட்டாம்'

எனவும் விளக்கினார்.

குடும்பஸ்தர்களிலும் பொருள் வசதி படைத்தோர் சிலர் என்பதையும் பகவான் உணர்ந்திருந்தார், எனவே

'பணம் படைத்தவர்களும், செல்வந்தர்களும் சமூகசேவையில் அதனைப் பயன்படுத்த வேண்டும்'

என வேண்டுகோள் விடுத்தார். அடுத்ததாக நோயாளிகட்கு சேவை செய்வதும் சத்காரியம் எனப்பட்டது. மருத்துவ வசதியில்லாத மக்கட்கு மருத்துவ சேவையளித்தல் அவசியம் என்பதால்;

'நோயாளிகளிடமிருந்து பொருள் பறித்தற்
பொருட்டு சிகிச்சை முறை மேற்கொள்ளக்
கூடாது'

என வலியுறுத்தினார்.

இவ்வாறு சமூகசேவைக்குத் தான் சமயம் முதலிடம் வழங்க வேண்டும் எனவும் அதுவே ஈஸ்வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராதனைக்குச் சமமானதெனவும் பரமஹம்சர் போதனைகளால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து சமயத்தின் கால வளர்ச்சிக்கேற்ப சநாதன தர்மமானது சமூகசேவையாகப் பரிணமித்தது. ஏழைகட்கு உணவளித்தல் போன்று கல்வியறிவதற்றோர்க்கு அறிவு புகட்டுதலும் அத்தியாவசியமானதாக இருந்தது. ஆசையும் அறியாமையுமே துன்பங்கட்கும் மூலகாரணமாயிருந்தது. 1881-ல் பரமஹம்சரைக் காணும் பேறுபெற்ற சுவாமி விவேகானந்தரிடம் அவர் 'நீ மற்றவர்க்கு அறிவு ஒளிபரப்ப வேண்டு'மென தமது கடைசி வாழ்நாளின்போது எழுதிக்காட்டினர். தான் கண்ட இறையுண்மையினையும் விவேகானந்தரது அகத்தில் ஒளிருமாறு அருளிச் செய்தார். அந்த அடிச்சுவட்டிலே கிறித்தவ சமயப் பாதிப்பினுலும் உந்தப்பட்ட சுவாமி விவேகானந்தரது சமுதாய சேவையுணர்வு 'ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷின் என்ற ஸ்தாபனமாகப் 1886-ல் பரிணமித்து நிறுவபெற்றது பரமஹம்சரின் அடியவரில் தலைசிறந்த விவேகானந்தர் தமது குருநாதரின் போதனைகட்கு இராமகிருஷ்ண மடாலயத்தின் மூலமாகச் செயல் வடிவம் கொடுத்தார். 19-ம் நூற்றுண்டில் எத்தனையோ மத சீர்த்திருத்த இயக்கங்கள் எழுந்த போதிலும் அவையனைத்தும் வெறும் போதனையுடன் நின்று கொண்டதால் அவை தொடர்ந்து நிலைபெற முடியாது போயிற்று.

**இராமகிருஷ்ண இயக்கம் :**

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரது போதனைகளும் சேவை நோக்கமுமே இன்று 'இராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ண இயக்கம்' என்ற பெரு நிறுவனமாகி குரு நாதரது வாக்கையும் வாழ்வையும் செயல்முறைப் படுத்துவதில் மேற்கொண்டு உழைத்து வருகின்றன. இம்மடத்தின் தலைமைக் காரியாலயம் பேலூரிலும், அதன் கிளை நிறுவனங்களாக இந்தியாவில் எண்பத் தியாறு மடங்களும் இந்தியாவிற்கு அப்பாலுள்ள வெளிநாடுகளில் முப்பத்தியொரு மடங்களும் சமூக சேவைப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அமெரிக் கா, இங்கிலாந்து, தென்அமெரிக்கா போன்றவற்றிற் இந்நிறுவனங்கள் கிறித்தவ மிஷனரிமார் இயக்கத் திற்குச் சமமாகச் சேவையாற்றி வருகின்றன. இராம கிருஷ்ண இயக்கத்தில் 1957ஆம் ஆண்டறிக்கையின் படி இரு கல்லூரிகள், இரு ஆசிரிய பயிற்சிக் கல்லூரி கள், மூன்று பொறியியற் கல்லூரிகள், ஓர் உளவியற் கல்விக்கூடம், பன்னிரண்டு சிறு மருத்துவ இல்லங்கள், அறுபத்தியொரு பெரிய மருத்துவ நிலையங்கள், ஐம் பத்தெட்டு மாணவர் இல்லங்கள், நூற்றிஇருபத்தி யேழு உயர் தொடக்கப் பள்ளிகள் என்பன இந்த இயக்கத்தினுல் நடத்தப்பட்டு வருகின்றன என்று அறியும்போது ஸ்ரீ பரமஹம்சரின் ஆளுமை (Persaoa-li y) எவ்வளவு மாபெரும் சக்தி வாய்ந்தது என்பது புலனுகின்றது. இவ்வியக்கத்தின் பணிகளுள் துன்ப நிவாரணப்பணிகள், வைத்திய வசதி, கல்வியறிவூட் டல், அன்னதானமளித்தல், சமயம், கலை என்பவற் றைப் பரப்புதல் என்பன முக்கியமான திருப்பணி கள் என்பதை நோக்குமிடத்து; பரமஹம்சரின் உப தேசங்களின் செயற்பாட்டிலிருந்து அணுவளவும் வழுவாது இராமகிருஷ்ண மடாலயம் சேவையாற்றி வருவதொன்றே; குருநாதரது அவதார மகிமையை யும் அவரது சமுதாய சிந்தனைகளில் மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த தன்னலமற்ற சமூக சேவையினையும் செயலாற்றலையும் துலாம்பரமாக வெளிப்படுத்துவனவாக உள்ளன.

முடிவுரை :

இறுதியாகக் கூறுவதனால், சுவாமி இராம கிருஷ்ண பரமஹம்சர் பற்றி அறிந்து கொள்ளவும் அவர் உதித்தவற்றை உணர்வதும், உணர்த்துவதும் எமக்குக் கிடைத்த பெரும் பேறெனலாம். அவற்றை மீண்டும் மானிட சமூகம் எண்ணிப் பார்க்கவும், ஞாபகப்படுத்தி வைப்பதுமே இதன் அடிப்படை நோக்கமாகும். அதில் ஒரு சிறு துளியை மட்டுமே இங்கு கூற முடிந்தது. இராமகிருஷ்ண பரமஹம்சரது வாழ்வு போதனையில் மட்டும் தங்கியுள்ளதன்று. அறப்பணிகளின் செயல் வடிவமாக அவர் வாழ்ந்திருந்தார். சொல்லியவற்றை உள்ளபடியே சாதனைக்குக் கொண்டு வருவதே அவரது குறிக்கோளாக இருந்தது. நோயுள்ளவர் மருந்துண்ண வேண்டும்; பசியுள்ளவர்தான் உணவுண்ண வேண்டும். அவர்கட்காக இன்னொருவர் சாப்பிட முடி இன்னொருவர் சமைக்கக் காட்டிக் கொடுக்கலாம். ஆனால் தேவையுள்ளவன் அதனை உபயோகிக்க வேண்டும். நோய் என்னவென்று அறிந்த வைத்தியனே அதற்கான மருந்தையும் தரவேண்டும். அவ்வாறு ஆன்மநோய் என்ன, சமுதாயப்பணி என்ன என்று அறிந்து அதற்கு வைத்தியம் செய்த ஆன்மீக வைத்திய ஞானிகளில் ஒருவராக ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரும் விளங்கினார். 'பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புனிதருடைய ஆளுமையில் இந்து சமயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினுடைய பரந்த நோக்கமும் நிறைந்த ஆன்மிக அனுபவமும் நன்கு புலப்படுகின்றன'. என்ற ரோமெய்ன்ரோலண்ட் என்ற அறிஞரின் கூற்று இக்கணம் நினைவு கூரத்தக்கது.

"தட்சணேஸ்வரத்துப் புனிதர் கடவுள் மட்டுமே உள்ளபொருள்; மற்றவை இல்லாத பொருளே என்ற வேதாந்த உண்மையின் மேம்பாட்டினைப் புத்தம் புதியதாக வெளிக்கொணர்ந்த தோடன்றி, அவ்வுண்மையை மனிதவர்க்கத்திற்குச் சேவை செய்து வருவதன்மூலம் அடையும் வழியையும் காட்டினூர்"[26]

என்பதே பொருத்தமாகும்.

சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தின் இறையொளியினைத் தமது குருநாதரிடமிருந்து பெற்றதோடல்லாது; அதனை மேற்கு நாடுகளிலும் ஒளிவீசும்படி செய்து உலகப் புகழ்பெற்ற செயல் வீரரானூர். அவர் சொல்கின்றூர்;

"நட்சத்திரம் கிழக்கிலே எழுந்தது;
மேற்குநோக்கி நேராகச் சென்றது;
சில பொழுது மங்கலாகவும்; சில
பொழுது பிரகாசமாகவும் சென்று
உலகை வலம் வந்தது. இப்பொழுது....
மறுபடியும் கிழக்குத் திசையில் முன்னையிலும்
ஆயிரம் மடங்கு பிரகாசத்தோடு உதிக்கின்றது"[27]

இது இந்து சமயத்திற்கும், இந்து தத்துவ ஞானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கும் கிடைத்த ஒரு கவிதை நடையிலான விளக்கமாகும். மேற்குநாடுகள் எவ்வளவு பொருளாதார பலம் பொருந்தியிருந்தபோதிலும். கிழக்குநாடுகளிடமிருந்தே அவை அறிவொளியையும் ஆன்ம ஒளியையும் பெற்றுக்கொள்ள வேண்டுவதவசியம் என்றபேருண்மை விவேகானந்தர் வாக்கிலே புதைந்து கிடக்கின்றது. மேற்கத்தைய பொருளாதார வர்த்தக நாகரிகப் பிரச்சினைகட்கு கிழக்கத்தைய ஆன்மிக நாகரிக உணர்வென்ற மருந்துதான் அருமையான ஒளடதமாகும். ஏனெனில் சூரியஒளி விஞ்ஞான ரீதியாகவும் எப்பவுமே கிழக்கில்தான் உதயமாகின்றது. அந்த உண்மையொளியோ சில சமயம் மேற்கிலே பிரகாசிக்கும் போதெல்லாம் பொருளாதார அறிவியல் என்ற ஐயம் உண்டாகின்றது. ஆனால் உதயம் என்றும் கிழக்கில் என்பதை மட்டும் மேற்கு நாடுகள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்ற அடிப்படை உண்மையை மேற்கு நாடுகளும் மேற்கு நாடுகளின் பொருள் வளத்தை நம்பியிருப்போரும் சிந்தித்துப் பார்த்தலவசியமாகும் என்பதே சுவாமி விவேகானந்தர் கூற்றிலே புதைந்து கிடக்கும் உண்மையாகும்

---

(1986-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற, ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தியின் போது பேசப்பட்ட விடயங்களின் விரிவாக்கமே இக்கட்டுரையாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள் :**

1. ஞானரொபின்சன், பதிப்பாசிரியர், இந்தியாவின் தற்கால சமய இயக்கங்கள், கிறித்தவ இறையியல் இலக்கியக் குழு வெளியீடு, சென்னை, 19 பக். 7.

2. மேற்படி, தற்கால சமய இயக்கங்கள், பக். 10.

3 வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ., தமிழர் சமய வரலாறு, பாரி புத்தக நிலையம், சென்னை, 1980, பக். 194.

4. வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி நிலையம், சென்னை, 1985, பக். 189.

5. Swami Nihilananda, Gospal of Ramakrishna, Ramakrishnamud, 1953, P. 270.

6. சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம், இராமகிருஷ்ணமடம், 1943, பக். 106.

7. மேற்படி, ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம், பக். 23.

8. Maxmuller, F., Ramakrishna His life and Sayings, London, 1910, PP.. 76-86.

9. ஆனந்தா குமாரசுவாமி, டாக்டர், சிவானந்த நடனம், தமிழ்ப்பாடநூல் வெளியீட்டு நிறுவனம், சென்னை, 1980, பக், 125.

10. சுவாமி சித்பவானந்தா, ஸ்ரீ சாரதாதேவியார், சரிதம், பக். 107.

11. ஆனந்தா குமாரசுவாமி, டாக்டர், சிவானந்த நடனம், பக். 130.

12. மு.கு நா. ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம். பக்.61-62.

13. மேற்படி, பக். 64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஆனந்தா குமாரசுவாமி, டாக்டர், சிவானந்த நடனம், பக். 20 21.

15. Swami Nihilananda, Gospel of Remakrishna, P. 38.

16. Swami Vivekananda, My Master, Udbodhan Office, Calcutta, 1911, P. 255.

17. சுவாமி சித்பவானந்தா, பரமஹம்சர் காட்டிய பெருநெறி விளக்கம், 1ம் பாகம், இராமகிருஷ்ண மடம், சென்னை, 1953, பக். 146.

18. சுவாமி விவேகானந்தர், அமெரிக்கப் பிரசங்கம், (விபுலானந்த அடிகள் மொழிபெயர்ப்பு) இராம கிருஷ்ணமடம், சென்னை, 1948. பக். 29.

19. வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ., தமிழர் சமய வரலாறு, பக். 196.

20. சுவாமி விவேகானந்தர், அமெரிக்கப் பிரசங்கம், பக். 56.

21. மேற்படி, அமெரிக்கப் பிரசங்கம், பக், 63.

22. மேற்படி, பக். 66.

23. வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ., தமிழர் சமய வரலாறு, பக். 199.

24. மேற்படி, பக். 198.

25. ஆனந்தா குமாரசுவாமி டாக்டர், சிவானந்த நடனம், பக். 179.

26. மகாதேவன், டி.எம்.பி., இந்துச் சமயத் தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1964, பக். 201.

27. சுவாமி விவேகானந்தர், அமெரிக்கப் பிரசங்கம் பக். 57.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பட்டியல்

## தமிழ் நூல்கள்:

ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள்., தெய்வத்தின் குரல், பகுதி. I, வானதி பதிப்பகம், சென்னை

இராதாகிருஷ்ணன், டாக்டர், இந்து தருமமும் வாழ்க்கை நெறியும்.

இராமகிருஷ்ண உபதேசமஞ்சரி, (1426 உபதேசங்கள்) இராமகிருஷ்ண தபோவனம் திருச்சி, 1975.

இராமகிருஷ்ண உபதேச மொழிகள், இராமகிருஷ்ண மடம், 1976.

ஸ்ரீ சாரதாதேவியார் வரலாறும். திருவாக்கும்., 3ம் பதிப்பு, இராமகிருஷ்ண மடம், 1980.

சித்பவானந்தர், சுவாமி., பரமஹம்சர் காட்டிய பெருநெறி, விளக்கம், பாகம். I, II, இராமகிருஷ்ண மடம், சென்னை,

குருசாமி, [illegible] ...ளலார் ஒரு அறிமுகம், மதுரைப் பல்கலைக் கழகம், 1977.

பரமேஸ்வரானந்தா, சுவாமி., ஹிந்து தர்மபரிச்சயம், (இந்து தர்மத்திற்கோர் அறிமுகம். தமிழில்: சுவாமி மதுரானந்தா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கிருஷ்ண மந்திர், கன்யாகுமரி, 1983,

விவேகானந்தர், சுவாமி.. புதிய இந்தியாவைப் படைப்போம், (Re-build India) தமிழில்: சுவாமி. கமலாத்மானந்தர், இராமகிருஷ்ண மடம் சென்னை, 1983.

விவேகானந்தர், சுவாமி., செயல்முறை வேதாந்தம், தமிழில் செல்வி. ஆர். நிவேதிதா, இராமகிருஷ்ண மடம், சென்னை, 1986.

விவேகானந்தர், சுவாமி., எழுமின், விழிமின் தொகுப்பாசிரியர் : ஏக்நாத்ரானடே, தமிழில் : கோபாலன், நூற்றாண்டு விழா வெளியீடு. சென்னை 1963.

நம்பூதிரிபாட், இ.எம்.எஸ்., இந்திய வரலாறு (ஒரு மார்க்சீய கண்ணோட்டம்). (Translated from ... by P. R. ...n) சென்

## ஆங்கில நூல்கள் :

Complete Works of Swami Vivekananda, Vol. IV, V

Dairiyapala. P. Vora., Evolution of Moralism

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org